வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 புரட்டாதி திங்கள் 28-ம் நாள் (14—10—1962) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ் 14 | இதழ் 20




# தமிழ் தந்தி வசதி வாபஸாகும்?

## பயன்படுத்த தவறியதின் பயங்கர எதிரொலி

## இலாகாக்களில் தமிழ்ப் பாரங்களுக்கும் அதே கதி!

சில தபால் நிலையங்களிலிருந்து தமிழ்த் தந்திகள் அனுப்ப வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகளைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழ் பேசும் மக்கள் தவறி விட்டதால் தமிழில் தந்தி அனுப்பும் வசதிகளை வாபஸ் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

வருமானவரி இலாகா உட்பட அனேக அரசாங்க இலாகாக்களில் படிவங்கள் தமிழிலேயே அச்சிடப்பட்டுத் தயாராயிருக்கின்றன. ஆனால் தமிழ் பேசும் மக்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்ப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டதால், இனிமேல் தமிழில் படிவங்கள் அச்சிடாதிருக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது.

சிங்களத்தில் தந்திச் செய்தி அனுப்ப தபால் கந்தோர்களில் வசதிகள்செய்து கொடுக்கப் பட்டிருப்பதைச் சிங்கள மக்கள் நன்கு பயன்படுத்தி வருகிறார்கள். தினசரி ஏராளமான தந்திகள் சிங்களத்தில் அனுப்பப்படுகின்றன.

நீண்டகால கிளர்ச்சிக்குப் பின் தமிழில் தந்தி அனுப்பும் வசதியும் சில தபால் கந்தோர்களில் செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் தமிழ் பேசும் மக்கள் இந்தச் சலுகையைப்பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

அவர்கள் ஆங்கிலத்தில் தந்திகள் அனுப்புவதையே இன்னும் விரும்புகின்றனர். உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழர் மரணமடைந்தது சம்பந்தமாகத் துக்கம் தெரிவித்து, அவரது உறவினருக்கு 60 தந்திகள் கிடைத்தன. இவற்றில் 58 தந்திகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. இரண்டே இரண்டு தந்திகள் மட்டுந்தான் தமிழில் எழுதப்பட்டிருந்தன. இதிலிருந்து தமிழ் பேசும் மக்கள் தமிழில் அலுவல்களை நடத்த எவ்வளவு தூரம் சிரத்தை கொண்டிருக்கிறார்களென்பது தெளிவாகிறதல்லவா?

வழங்கப்பட்டுள்ள வசதிகளையும், சலுகைகளையும் பயன்படுத்தத் தவறினால் அது தமிழ் பேசும் மக்களின் குற்றமேயன்றி அதிகாரிகளின் குற்றமன்று. பயன்படுத்தப்படாததால் அந்த வசதிகள் தமிழ் பேசும் மக்களுக்குத் தேவையில்லை என்று கூறுவதற்கு இடமேற்படுகிறதல்லவா? ஆகையால் தான் அந்த வசதியை வாபஸ் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதிலிருந்து பிறர் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும். அதுதான் தமிழ் மொழியின் வளர்ச்சியைத் தமிழ் பேசும் மக்களே விரும்பவில்லையென்பது. இது மிகவும் கேவலமான நிலைமையாகும்.

ஆங்கில மோகத்தில் மூழ்கிக்கிடந்த காலம் மலையேறிவிட்டது. சிங்களத்தைப் போல தமிழ் மொழியும் அரியாசனமேற வேண்டுமெனக் கிளர்ச்சி செய்யும் காலமிது. இன்னும் ஆங்கிலத்திலேயே மூழ்கிக் கிடந்தால் சிங்களம் தமிழை விழுங்கி ஏப்பமிட்டுவிடுமென்பதில் ஐயமில்லை.

### தமிழ்ப் பாரங்கள் தூங்குகின்றன

சில அரசாங்க இலாகாக்களில் தமிழில் பாரங்கள் அச்

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் விழாவுக்குத் தடை

### கல்லூரியை அரசாங்கம் மேற்கொண்டதின் விளைவு

நுகேகொடை செண்ட் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் வருடம் தோறும் நடத்தும் தமிழ்விழா இவ்வருடம் திடீரென நிறுத்தப்பட்டு விட்டது. கல்லூரியை அரசாங்கம் மேற்கொண்டதின் தவிர்க்க முடியாத விளைவு தான் இது.

நுகேகொடை செண்ட் ஜோன்ஸ் கல்லூரி தமிழ் மாணவர்கள், ஆண்டு தோறும் கல்லூரியில் தமிழ்விழா நடத்தி வருகின்றனர். வழக்கம் போல இந்த ஆண்டிலும் தமிழ் விழா நடாத்துவதற்கான ஏற்பாடுகளை விரிவான முறையில் செய்து வருகின்றனர்.

அதற்கான நிதி வசூல், பிரசுரங்கள் அச்சிடுதல் ஆகியவைகளும் செய்யப்பட்டு விட்டனவென்றும் தெரிகிறது. விழாவில் கலந்து கொள்ளுமாறு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஸ்ரீஸ்

(9-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரூ. 5000 கட்ட வேண்டும்

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வருடம் பெல்கிரேட்டில் நடைபெற்ற நடுவு நிலைமை நாடுகளின் உச்சி மாநாட்டுக்குச் செல்லும் போது தனது மகன் அநுரா பண்டாரநாயக்காவையும் உடன் அழைத்துச் சென்றார். இதன் காரணமாக ஏற்பட்டுள்ள மேலதிகச் செலவு ரூபாய் 5000/-த்தையும் பிரதமரிடம் வசூல் செய்யுமாறு ஆடிட்டர் ஜெனரல் கூறியுள்ளார் என்று தெரிகிறது.

மாதாந்தத் தவணையில் ரூ. 1500 வீதம் செலுத்துவதாக பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

## ஊதிய உயர்வுத் தடையை எதிர்த்து அற்ரோனி-ஜெனரல் மீது வழக்கு

### அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆதரவில் தனி நபர் தாக்கல்

கேகாலைக் கச்சேரியில் கடமையாற்றுபவரும், அரசாங்க எழுது வினைஞர் சங்க செயற்குழு உறுப்பினருமாகிய திரு. செ. கோடீஸ்வரன் அவர்கள் அரசாங்க எழுது வினைஞர் சங்க ஆதரவுடன் ஊதிய உயர்வுத் தடையை எதிர்த்து அற்றோர்னி-ஜெனரல் மீது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 10ம் திகதி அன்று ஓர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இது அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட மூன்றாவது வழக்கு.

முதலாவதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திறைசேரி 555ம் சுற்று நிருபத்திற்கு எதிரானதாகும். இவ் வழக்கையொட்டி அற்றோர்னி ஜெனரல் தனது பதிலைச் சென்ற வெள்ளிக்கிழமை தாக்கல் செய்துள்ளார். இவ் வழக்கு இம்மாதம் 20ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும்.

சிங்களம் மட்டும் சட்டத்தையும், ஊதிய உயர்வை நிறுத்தும் திறைச்சேரிச் சுற்று நிருபத்தையும் எதிர்த்து அரசாங்க எழுது வினைஞர் சங்கம் இரண்டாவதாகத் தாக்கல் செய்த வழக்குக்கு அற்றோர்னி-ஜெனரல் அவர்கள் தனது பதிலை இம்மாதம் 2ம் திகதி தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது திரு. செ. கோடீஸ்வரன் தாக்கல் செய்திருக்கும் வழக்கு, தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு, இன்றைய ஆட்சியாளர் இழைத்துவரும் கொடுமைகளை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மூன்றாவதாகும்.

முன்னர் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளும் தமிழ் எழுது வினைஞர் சங்கத்தின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டவை. இது சங்க ஆதரவுடன் தனி நபரால் தாக்கல் செய்யப்பட்டதாகும்.

சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாதபடியால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அவரது ஊதிய உயர்வை எதிர்த்தே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம் மூன்று வழக்குகளிலும் வாதிகள் சார்பில்

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு ASTHMA சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர்ர் புர்ர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டைவலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்சால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில்

# மீண்டும் கோப்பிச் செய்கை பயனளிக்குமா?

**கோப்பிக் கொட்டைப் பஞ்சம் இப்போது இலங்கையில் தோன்றியதனால் கோப்பிப் பிரியர்களின் பாடு பெரும் பாடாகிவிட்டது. வெளி நாடுகளிலிருந்து வரும் கோப்பிக் கொட்டைக்கு இறக்குமதிக் கட்டுப்பாடு போடப்பட்டுள்ளது.**

**இலங்கையில் ஒரு காலம் கோப்பிப் பயிர்ச் செய்கை சிறந்து விளங்கியது. இங்கிருந்து கோப்பிக் கொட்டை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இன்று...மீண்டும் இலங்கையில் கோப்பி பயிரிடலாமா? அதனால் பலன் ஏற்படுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாவிடினும் சுய தேவைப் பூர்த்தியாவது ஏற்படுமல்லவா?**

இலங்கையின் தேசாதிபதியாக இருந்த ஸர் எட்வேர்ட் பார்ண்ஸ் என்பவரால் கோப்பிச் செடியானது இலங்கைக்கு முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டது. அக்காலம் முதல் இலங்கைக்குப் பெரு வருவாயைத் தந்த ஏற்றுமதிப் பொருள்களிலொன்றாக இது விளங்கியது. இடைக் காலத்தே வீழ்ச்சியுற்றிருந்த இப் பயிர்ச் செய்கையானது இப்பொழுது மீண்டும் புத்துயிர் பெற்று மக்களது கவனத்தை ஈர்த்துள்ளது. இத் தருணத்திலே இதற்கான விபரங்களைத் தருவது அவசியமெனக் கருதுகின்றோம்.

வர்த்தகச் சிறப்புப் பொருந்திய கோப்பியினங்களான அரேபியா கோப்பி, இலைபீரியா கோப்பி உரோபஸ்ரா கோப்பி, என்னும் மூன்றினங்களுக்குள்ளும் எங்களது நாட்டு சுவாத்திய நிலைக்கேற்ற இனத்தை தெரிவு செய்தல் வேண்டும். அரேபியா கோப்பி இனமானது, கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்துக்கு மேற்பட்ட தரையிலேயே செய்கை பண்ணப்பட வேண்டும். இவ்வினம் எங்களது உலர் வலைய பிரதேசத்துக்கு உகந்ததன்று. கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வளரக் கூடியதும் எங்களது உலர் வலையத்துக்கு உகந்ததுமான இனம் உரோபஸ்ரா கோப்பியினமேயாகும். இச் செடியானது இலை நோயை எதிர்த்து நிற்கக்கூடியது. நிழற் பாதுகாப்பு தக்கதாக இருப்பின் வேகமாக வளர்ச்சியடையக் கூடியது.

### சுவாத்தியம்

தேசத்தின் சுவாத்திய நிலைமை பற்றிய அறிவு இக் கோப்பிச் செய்கை வெற்றியடைவதற்கு மிகவும் அவசியமாகும். கோப்பிச் செடியின் வளர்ச்சிக்கு சுமார் 70 அங்குலம் முதல் 80 அங்குலம் வரை மழை பரவலாக ஆண்டு முழுமைக்கும் இருத்தல் வேண்டும். புயற்காற்று கன்றுகளைப் பாதிக்காத வண்ணம் தக்க பாதுகாப்புக்களைச் செய்தலும் வேண்டும்.

கோப்பிச் செய்கைக்கு உகந்த நிலத்தை முதலிலே தெரிவது அவசியமாகும். மக்கிப்பாங்கற்றதும் மணற்றன்மை இல்லாததும் கற்பார்—களித்தரையற்றதுமான பூமியில் சராசரி வளமுடையதும் வடிகால் வசதி உடையதுமான மண், கோப்பிச் செடி செய்கைக்கு ஏற்றதாகும். இதற்குரிய மண்ணானது அமிலத் தன்மை மிக்கதாக இருக்காது, இரசாயனத் தன்மையிலும் பார்க்க பௌதிக இயல்புகளை அதிகம் கொண்டதாகவும் ஆழம்-வடிகால் வசதி-காற்றோட்டம் உள்ளதாகவும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

புத்தம் புதிய இடங்களைத் தயார் செய்யும் போது அவ்விடங்களிலுள்ள மண்ணைப் பேணுதற்கு ஆரம்பம் முதலே தக்க நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். இன்றேல் ஆண்டுதோறும் வருவாய் குறைவதை தவிர்க்க மண் வளப் பாதுகாப்புக்கென ஏராளமாகச் செலவு செய்ய நேரும். நல்ல வடிகால் வசதியுடைய சாதாரண சரிவுடைய நிலம் விரும்பத்தக்கது.

### நடும் முறை

உரோப்ஸ்ரா கோப்பிக்குரிய கன்றுகளை 12 அடி இடை வெளியில் இரண்டு அடிச் சதுரமும் இரண்டு அடி ஆழமும் கொண்ட குழிகளைத் தோண்டி அவற்றை வானிலைத் தாக்கத்துக்கு விட்டுவைத்து பின்னர் மேல் மண்ணுடன் உலர்ந்த மாட்டெரு அல்லது கூட்டுப் பசளையை அவற்றிலே இட்டு நிரப்பி மையத்திலே உயரமாக விட்டுவைத்தல் வேண்டும். இக் கன்றுகளை நடுவதற்கு முன்பதாக ஏதாவது ஒருவகை நிழல் தரும் மரங்களை நாட்டி வளர்ப்பது அவசியமாகும். சடைத்து வளரும் பசுந்தாழ்ப் பசளைச் செடிகளை நிழல் மரங்களாக வளர்ப்பது விசேடமாகும். அதிகமாக வேர் பரந்து மற்றச் செடிகளுக்கு இடையூறாக இருக்கும் நிழல் மரங்களை உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.

கோப்பி விதைகளை மணற் படுகைகளிலே இட்டு முளைக்கச் செய்து பின்னர் நன்றாகப் பண்படுத்தப்பட்ட நாற்று மேடைகளில் மாற்றி நடுதல் வேண்டும். மணற் படுக்கைகளில் ஒரு அங்குல இடைவெளியிலும் அரையங்குல ஆழத்திலும் விதைகளையிட்டு, மேலே குழைகளால் நிழலிட்டு தினசரி நீரூற்றி வருதல் வேண்டும். நான்கு வாரகாலத்தில் விதைகள் முளைவிடும். இதன் பின்னர் குழைகள் அகற்றப்பட்டு மேலே நிழற்பந்தர் இடப்படும். கன்றுகள் 2-3 அங்குல உயரம் வளர்ந்ததும் அவை பெயர்க்கப்பட்டு பண்படுத்தப்பட்ட நாற்று நடப்படும். இந் நாற்று மேடைகள் சுமார் ஒரு அடி ஆழத்துக்கு கல், வேர் முதலியவற்றை அகற்றுவதற்காக நன்கு கொத்திப் பணபடுத்தப்பட்டு நன்றாக உலர்ந்த மாட்டெரு அல்லது கூட்டெரு இடப்பட்டும் 3—5 அடி அகலமாகவும் 4—6 அங்குல உயரமாகவும் விரும்பியவாறும் வசதிக்கேற்றவாறும் அகலமுடையதாகவும் அமைக்கப்படல் வேண்டும். 2—3 அங்குல உயரம் வளர்ந்த கன்றுகளை ஆறு அங்குல இடைத் தூரத்துக் கொன்றாக நாட்டுதல் வேண்டும். மேலே நிழல் வசதி அமைக்கப்படல் வேண்டும். முதலிலே தினசரி இரண்டு வேளையிலும் நீரூற்றிவரல் அவசியம். படிப்படியாக நீரூற்றலையும் நிழலையும் குறைத்து கன்றுகளை வலுப்பெறச் செய்தல் வேண்டும். ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் கன்றுகளைப் பெயர்த்து நடலாம். இக் கன்றுகளை மழை காலத்திலேயே பெயர்த்து நடுதல் அவசியமாகும். ஒரு ஆண்டுக்கு மேற்பட்ட கன்றுகளாயின அவற்றின் கிளைகளை நறுக்கி விட்டு கட்டைக் கன்றுகளாக நடுதல் வேண்டும்.

மணி

தோட்டங்களிலே கன்றுகளுக்குப் போதிய நிழல் அளிக்கப்படுதல் அவசியமாகும். இடையிடை கன்றுகள் பட்டிருப்பின் அவ்விடங்களுக்குப் புதிய கன்றுகளை நட்டு வளமாக்கிகளை உபயோகித்து மற்றக் கன்றுகளுக்குச் சமமாக அவற்றை வளர்த்தல் வேண்டும். எங்களது வரண்ட பிரதேசங்களில் உள்ள நிழல் மரங்களையே நாம் உபயோகிப்பதுடன் மழை இல்லாக் காலங்களில் கிணறுகளிலிருந்து நீர்ப்பாய்ச்சியும் அவற்றைப் பாதுகாக்கலாம்.

### விளைச்சலைப் பெருக்கும் வகை

கோப்பிச் செடி வளர்ந்து வருங்காலத்திலே, அவற்றை கத்தரித்து விடுதலும் அவசியமாகும். கோப்பிச் செடி கத்தரிக்கும் [illegible] களுள் ஒன்றின்படி கோப்பிச் செடி ஒழுங்காகக் கத்தரிக்கப்படும். கத்தரித்தலில் தனித் தண்டு முறை ஒன்று. இதன்படி நிறுதிட்டமாக வளரும் தண்டுகள் ஒழுங்காகத் துணிக்கப்படும். இவ்வாறே முதற்றண்டும் நாலு அங்குலம் வரையான உயரத்திலே துணிக்கப்படும். அடுத்து, பட்டுப்போன அல்லது நோயுற்ற பாகங்களும், வேண்டியிராத பக்கக் கிளைகளும் களையப்படும். இதனால் செடியின் உட்புறம் காற்றும் ஒளியும் ஊடுருவிச் செல்லும். தொகுதித் தண்டு முறையில் நடுத் தண்டின் அடியிலிருந்து வேறு பல முதற்றண்டுகள் இரண்டு முதல் நாலு அடிவரை நெடியனவாக வளர விடப்படும். இம்முதற்றண்டுகளும் பூத்துக் காய்க்க விடப்படும். இத்தண்டுகளிலிருந்து கிடைக்கும் பயன்கள் காலகதியில் குன்றிவிட அவை பின்னர் நீக்கப்பட்டு நிறுதிட்டமான புதிய தண்டுகள் அடிப்பாகத்திலிருந்து வளர விடப்படும். இவ்வாறு விளைவினைப் பெருக்குதல் வேண்டும்.

மண்ணை வளமாக்குவதற்கு வேண்டிய சேதன உறுப்புப் பொருள்களைக் கூட்டுதற்கு பசும் பசளையை மண்ணுள் இடுதல் வேண்டும். ஆண்டுக்கு ஒரு தடவை ஒரு ஏக்கருக்கு இரண்டு அந்தர் அமோனியம் சல்பேற்று (நவச்சாரக்கந்தகை), ஒரு அந்தர் சுபோசு பொசுபேற்று, ஒரு அந்தர் பொற்றாசியம் மியூறியேற்று அல்லது பொற்றாசியம் சல்பேற்று கொண்ட கலவை வளமாக்கியை உபயோகிக்கலாம். இக் கலவையைத் தூவிய பின்னர் பசும் பசளையைப் பரப்பி இரண்டினையும் ஒருங்கே மண்ணுள் செலுத்தலாம். மண்ணில் அமிலத் தன்மை கூடுதலாக இருக்குமாயின் இடையிடையே சுண்ணாம்பு தூவுதல் வேண்டும்.

கோப்பிச் செடியானது பொதுவாக மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் பூத்துக் காய்க்கத் தொடங்கும். எனினும், ஆறும் ஆண்டளவிலே தான் முறையாகப் பலன் கிடைக்கத் தொடங்கும். இச் செடிகளில் முற்றிப் பழுத்த காய்களே கைகளால் பறிக்கப்படும். ஒரு ஏக்கருக்கு 13 முதல் 16 அந்தர் வரை பயன்கிடைக்கும். இவ்விளைவைப் பதப்படுத்தி நன்றாக உலர்த்தி எடுக்க வேண்டும். இவ்விதம் நன்கு பதப்படுத்தினால் மூன்று முதல் ஆறு அந்தர் வரை கோப்பிக்கொட்டை கிடைக்கும்.

(11-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### தமிழரசை வரவேற்கிறோம்

ஆங்கிலேயர் ஆட்சியிலே இலங்கையர்களுக்கு இருந்த உரிமைகளனைத்தையும், மலை நாட்டுத் தமிழர்களும் பெற்றிருந்தார்கள். ஆனால் இன்றைய சுதந்திர இலங்கையிலே, இருந்த உரிமைகளனைத்தையும் இழந்து விட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். தோட்டங்களில் வேலை செய்யும் உரிமையும் இன்று பறிக்கப்பட்டு வருகிறது.

பதவி மோகமும், பணப் பித்தும் பிடித்தவர்கள் தங்களை மலை நாட்டுத் தமிழ்த் தலைவர்கள் என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டு, அரசாங்கம் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு உடந்தைகளாக இருந்து வருகின்றார்கள். மலை நாட்டிலே இன்று இயங்கி வரும் தொழிற் சங்கங்கள் ஒவ்வொன்றும், மக்களைப் பிளவுபடுத்தும் நோக்கத்தோடும், அவர்களை ஏமாற்றும் எண்ணத்தோடும் இயங்கி வருகின்றனவே தவிர, உரிமைகளைப் பெற்றுத் தரும் உண்மையான நோக்கத்தோடும் இயங்கி வருவதாகத் தெரியவில்லை. இதனை இன்று மலைநாட்டுத் தமிழர்கள் நன்றாக உணர்ந்து விட்டார்கள்.

மலைநாட்டுத் தமிழர்களது உரிமைகளை என்று அரசாங்கம் பறிக்கத் தொடங்கியதோ, அன்று முதல் இன்று வரை தமிழர்களுக்காக அரசாங்கத்தோடு போராடிவருவது தமிழரசுக்கட்சியென்பது யாவரும் அறிந்த உண்மை. இனிமேலும்போராடத் தயாராகயிருப்பதும் தமிழரசுக் கட்சியேயாகும்: சிலர் தமிழரசுக் கட்சியைப் பற்றி அவதூறாகப் பொய்ப் பிரசாரங்கள் செய்தாலும், அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. போலித் தலைவர் எத்தனை நாட்களுக்குத் தான் மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்க முடியும்? இப்படிப்பட்ட தலைவர்களுக்கு மக்கள் தக்கதோர் பாடம் கற்பிக்கும் நாள் வெகு தூரத்திலில்லை.

மலை நாட்டில் வாழும் தமிழர்களாகிய நாங்கள் தமிழரசுக் கட்சியிலேயே உண்மையான நம்பிக்கை வைத்துள்ளோம். தமிழரசுக் கட்சி என்று தனது கிளைகளை மலைநாட்டில் நிறுவும், நாங்கள் தமிழரசு அணியிலே திரண்டு எங்களது உரிமைகளைப் பெறுவோம் என்ற அவாவோடு இருந்தோம். எங்களது அவாவை நிறைவேற்றுமுகமாக தமிழரசுக் கட்சியும் தனது கிளைகளை மலையகத்தில் நிறுவ முன் வந்துவிட்டது. இம் முடிவு எங்களைப் பேரானந்தக் கடலில் மூழ்கச் செய்கிறது. என் போன்ற இளைஞர்களும், அநேக தோட்டத் தொழிலாளர்களும் தமிழரசுக் கட்சிக்குப் பேராதரவு அளித்து வரவேற்கத் தயாராக இருக்கின்றோம்.

வை. துரைச்சாமி.


கவுலகெனு,
லிண்டுலா.

### அவசியம் தேவை

தமிழரசுக் கிளைகள் மலை நாட்டில் மறுக்க முடியாத அவசியம்.

தமிழர்கள் மட்டக்களப்பில் வாழ்ந்தால் என்ன? மலைநாட்டில் வாழ்ந்தால் என்ன? எங்கெங்கு தமிழர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தமிழரசுக் கிளைகள் நிறுவ வேண்டியது அவசியம். தமிழரசுக் கட்சி ஒரு

(11-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. பாலசுப்பிரமணியம், தெல்லிப்பழை.

கே: திருவாளர் அ. அமிர்தலிங்கம், எங்கள் ஊரில் நடந்த வன்னியசிங்கத்தின் நினைவு விழாக் கூட்டத்தில் தனது மனைவியாரை தனக்கு முன் பேசவிட்ட காரணம் யாது?

ப: மாதர் குலத்துக்கு முதலிடம் அளிப்பதற்காக...

ஃ

றபீக், கேகாலை.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்து வந்தேன். அந்தப் பெண்ணுக்குச் சென்றவாரம் கலியாணம் நடந்துவிட்டது. நான் என்ன செய்ய?

ப: நீங்களும் கலியாணம் செய்து கொண்டு பதிலடி கொடுங்கள்.

ஃ

றகுலசிகாமணி, வல்வெட்டித்துறை.

கே: சிறிமாவோவின் அரசாங்கம் நிலைக்குமா?

ப: 7-10-62-ல் சுதந்திரன் முதற்பக்கத்தில் முதற் செய்தியை வாசித்துப் பாருங்கள்; நிலைமை தெரியும்.

கே: உங்களுக்கு அப்பாக்குட்டி அம்மான் என்ன முறை?

ப: எனக்கும் உங்களுக்கும் எல்லோருக்கும் அவர் அம்மான்தான்.

கே: பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது பெண்களுக்கு இடவசதி செய்து கொடுத்து ஆண்கள் எழுந்து நிற்பதேன்?

ப: பெண்கள் கையாலாகாதவர்கள் என்பது அந்த ஆண்களின் எண்ணம்.

ஃ

திவொலி. ஏனஸ்ட், நுவரேலியா.

கே: குயுக்தியாரே, இலங்கைக்கு விஜயம் செய்த ஒரு கனடா மங்கையிடம் சில பாராளுமன்ற எம்.பி.க்கள் தங்களுடைய கைவரிசையைக் காட்டி விட்டார்களாமே. அந்தப் பித்தர்களின் பெயர்களை உம்மால் கூற முடியுமா?

ப: முடியும்.

ஃ

இ. பாலேந்திரன், பலாங்கொட.

கே: எனது அண்ணா கூறுகிறார்: இவ்வுலகில் பெண்களே அதிகமாக உள்ளனர் என்று, ஆனால் நான் கூறுகிறேன்: ஆண்களே அதிகம் என்று. யார் சொல்வது சரி?

ப: ஆண்கள் இரண்டாந் தாரம், மூன்றுந் தாரம், நான்காந்தாரம் என்றெல்லாம் மணமுடித்துக்கொள்வதைப் பார்த்தால், அண்ணா சொல்வதுதான் சரியாக இருக்க முடியும்.

ஃ

'திராவிடராஜன்:, களுதாவளை-4.

கே: இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'திராவிட நாடு' கோரிக்கை கைகூடினால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அதனால் விமோசனம் கிடைக்கலாம் என நான் நினைக்கிறேன். தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ப: தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போருக்கு இன்னும் அதிகமான தார்மீக ஆதரவு கிடைக்கும்.

ஃ

'கலையரசன்', பண்டத்தரிப்பு.

கே: விபச்சாரம்தான் முதலில்லாத வியாபாரம் என்கிறான் என் நண்பன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அந்த வியாபாரத்திற்கு மூலதனம் விலைமதிக்க முடியாத ஒரு பொருள்; அதுதான் ஒழுக்கம்.

ஃ

''துறையூர்க் கிறையோன்'' துறைநீலாவணை.

கே: தற்போதைய எழுத்தாளர்கள் ஒரு விடயத்தைப் பல பத்திரிகைகளுக்கு அனுப்பிப் பிரசுரமாவதைப் பற்றித் தங்கள் வாய்ச் சொல் என்னவோ?

ப: என்ன செய்யலாம்? ஒரு விடயத்துக்கு மேல் அவர்களால் எழுத முடிகிறதில்லையே!

ஃ

வி. ச. சிவம், ஹாலி-எல.

கே: சி. பி. டி. சில்வாவிற்கும் பீலிக்சுக்குமுள்ள குரோதமென்ன?

ப: குரோதமில்லை-பிரதமரைத் தங்கள் கருத்துக்கு இணங்கச் செய்வதில் அவர்களுக்குள் போட்டி.

ஃ

க. துரைச்சாமி, வெள்ளவத்தை.

கே: ஒரு வருஷத்தில் இரண்டு கலியாணங்கள் ஒரு வீட்டில் செய்யப்படாதாமே! நியாயம் சொல்லுவீர்களா?

ப: யார் சொன்னது—எங்கள் தெருவிலுள்ள ஒரு வீட்டில் வாரம் இரு கலியாணங்கள் நடைபெறுகின்றன.

ஃ

மார்க்கண்டு, புங்குடுதீவு கிழக்கு.

கே: மருதானை இரவுராணிகளுக்கு அரசாங்கம் புது வரி விதிக்குமா?

ப: இரவு ராஜாக்களை மட்டும் விட்டு விட்டீரே! நீர் தப்பிவிடலாமென்ற எண்ணமோ?

ஃ

சபா. சிவநேசராசா, மாதகல்.

கே: ஒருவர் பெயரிலே ஒருவர் பத்திரிகைகளிலே கேள்விகள் கேட்பதன் நோக்கம் என்ன? அவர்களை எப்படிப் பட்டவர்களாகக் கருதலாம்?

ப: அவர்கள் கோழைகள்-சிலர் பெண்களின் பெயரால் கேள்வி கேட்டு, தாங்கள் பெண் பித்தர்கள் என்பதைக் காட்டிக் கொள்கிறார்கள்.

ஃ

எஸ். கே. சண்முகநாதன், வண்ணார்பண்ணை

கே: ஒரு பிரமுகர் தன்னைச் செனட்டராக்க வேண்டுமெனத் தமிழரசுக் கட்சியினரிடம் கேட்டதாகவும், அதற்கு அவர்கள் இணங்காததாலேயே, அவர் கட்சியிலிருந்து விலகியதாகவும் (சிலர்) கூறுகிறார்களே, உண்மையா?

ப: நெருப்பின்றிப் புகையுமா?

கே: மாமா! இனிமேல் வெளிநாடுகளுக்கு, ஆங்கிலத்தில் முகவரி எழுதவேண்டுமாமே. ''எல்லாந் தமிழியக்கம்'' இதற்கு ஒத்துவருமா?

ப: சர்வதேச நியதியின்படி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களில் முகவரி ரோமன் லிபியில் எழுதப்படவேண்டும். அதாவது பெயர்களை ஆங்கில எழுத்தில் எழுத வேண்டும். ஆனால் தென்னகத்திலிருந்து இலங்கைக்கு தமிழில் முகவரி எழுதப்பட்ட கடிதங்களில் அங்குள்ள தபாற் கந்தோர் அதிகாரிகள் முகவரியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தமிழ் முகவரியின் பக்கத்தில் எழுதி விடுவார்கள். இலங்கை தபால் அதிகாரிகளோ அதைச் செய்ய மறுக்கிறார்கள்.

ஃ

ஜெயரஞ்சன், மத்துகம.

கே: ஆண்டவன் லஞ்சம் வாங்காமல் கடமையைச் செய்கிறான் என்று 30—9—62 சுதந்திரனில் விடை கூறியுள்ளீர்களே. ஆண்டவனுக்குப் பக்தர்கள் செலுத்தும் அர்ச்சனை, நேர்த்திகைலஞ்சமில்லையா? இதற்கென்ன கூறுகிறீர்?

ப: இல்லை. நேர்த்தி, காணிக்கை ஆகியவை ஆண்டவனுக்குக் கொடுக்கும் இலஞ்சமல்ல. ஆண்டவனுக்கும், காணிக்கை கொடுப்பவருக்குமிடையேயுள்ள இடைத்தட்டுக் காரர்களுக்குக் கொடுப்பவைகளே அவைகள்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

பி. பொன்னையா, கொஸ்லாந்தை

கே: தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணாவும் — தமிழ்வாணரும் தமிழர்கள்தானே! இருந்தும் தமிழ் நாட்டைப் பிரித்து கொடுக்கக் கூடாது என்று தமிழ்வாணர் சொல்லுகிறார். அண்ணா தமிழ் நாட்டைப் பிரித்து கொடுக்கத்தான் வேண்டும் என்று சொல்கிறார். ஏன்?

ப: தமிழர்களாயிருப்பினும் வெவ்வேறு அரசியற் கொள்கையுடையவர்கள். தமிழ்வாணன் காங்கிரஸ்காரர்—ஏக இந்தியாவில் நம்பிக்கையுடையவர். அறிஞர் அண்ணாவோ திராவிடச் சமஷ்டியை நிறுவப்போராடுகிறார். தமிழ்நாடு அச் சமஷ்டியில் ஒரு 'யூனிட்'டாக இருக்கும்.

ஃ

ஏ. சேகர், கொழும்பு-(8)

கே: ஒற்றுமை வேண்டும் என்று கூறுகிறவர்கள் தமிழ் பேசும் மக்கள் ஒன்று படுவதை ஏன் எதிர்க்கிறார்கள்?

ப: அவர்கள் தலைவர்களை ஒன்று படுத்த முயற்சி செய்கிறவர்கள்-மக்களையல்ல. எனவே மக்கள் ஒன்றுபடுவதை எதிர்க்கிறார்கள்.

ஃ

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: திரு. டட்லி சேனநாயக்கா தற்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கிறார்?

ப: ஜாதகத்தை திருப்பித் திருப்பிப் பார்க்கிறார். விரல்களை மடக்கி விரித்து ஏதோ எண்ணுகிறார். தான் மீண்டும் பிரதமராகும் நாளைக் கண்டு பிடிக்க முயற்சி செய்கிறார் போலும்!

ஃ

பற்குணம் குமாரசாமி, கோட்டை.

கே: சில சிங்களவர்கள் தமிழர்களைக் கண்டால் ''கள்ளத் தோணி'', ''தலதெல்'' ''தோசை'' என்றெல்லாம் ஏன் பேசுகிறார்கள்?

ப: அவர்கள் வகுப்புவாத சிங்களத்தலைவர்களின் ஊதுகுழல்கள்.

ஃ

என். லிங்கம், மாதகல்.

கே: வாலிபர்கள் சைக்கிள் மணி அடித்தாலும் விலகாமல் நடுத் தெருவில் நடனமாடும் குமரிகளை என்ன செய்யலாம்?

ப: பார்த்து ரசிக்கலாம்—பிறகு வாழ்க்கையில் ஆட வேண்டிய ஆட்டங்களுக்கு இப்பொழுதே ஒத்திகை நடத்துகிறார்கள்.





சில்லிங்டன் ஸ்தாபனத்தார் பண்ணைகளுக்கும், தோட்டங்களுக்கும் தேவையான உலகிற் சிறந்த உபகரணங்களை உற்பத்தி செய்கின்றனர். ''முதலை'' அடையாளம் தரித்த ஆயுதங்களை வாங்குவதன் நலனை யாவரும் அறிவர். ''முதலை'' மார்க் மண் வெட்டிகள் தேர்ந்தெடுத்த எஃகிலிருந்து நிபுணர்களினால் நன்கு உருக்கிப் பதம்செய்யப்பட்டு உற்பத்தியாகின்றன. மண் வெட்டியில் சிறிதளவேனும் பழுது உண்டானால் அதை கழித்து விடுகின்றனர். நீங்கள் ஒரு சில்லிங்டன் ''முதலை'' மார்க் மண் வெட்டியை வாங்கும்போது இரட்டிப்பான உறுதியைப் பெறுவீர்கள். (1) ''முதலை'' மார்க் சில்லிங்டன் ஸ்தாபனத்தார் உற்பத்தி (2) பிரவுண்ஸ் குறுப்பினரால் அது விற்பனவு செய்யப் படுகிறது. பிரவுண்ஸாரிடம் வாங்கும்போது சிறந்ததையே வாங்குகிறார்கள் என்பதை யாவரும் நன்கு அறிவர்.



"முதலை" மார்க்
ஆயுதங்கள்

BROWNS GROUP
பிரவுன் அன் கொம்பெனி லிமிட்.
டார்லி வீதி, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

## காலகண்டன்

### மாகாளி வரப்பிரசாதமோ ?

கொழும்பில் 'திம்பிரிகஸ்யாய'ப் பகுதியில் அண்மையில் ஒரு பிரமாண்டமான வீடொன்று கட்டப்பட்டிருந்தது. ஊர்சுற்றி வந்த அம்மானுக்கு அவ்வீடு கண்ணில் பட்டதும், வீட்டினை நன்ருகப் பார்த்தாராம். ஏழு, எட்டுப் படுக்கையறைகளுடைய பெரிய மாடி வீடு. குறைந்தது ஒன்றரை லட்ச ரூபாயாவது செலவாகியிருக்கும் என்று பலரும் கூறினுர்கள். ஆனுல் வீட்டுக்குச் சொந்தக்காரனைக்கண்டதும் அம்மானுக்கு தூக்கிவாரிப் போட்டது. வயிற்றுப்பாட்டிற்குவழியில்லாத 'பச்சைத் தண்ணி' அப்புக்காத்து ஒருவருக்கு இவ்வளவு பணம் எப்படிக் கிடைத்தது என்று தன்னையறியாமலே முணுமுணுத்தார்.

கட்டிடத்து உரிமையாளரோ பலகாலமாக அப்புக்காத்துப் பட்டத்துடன் கொழும்பு 'ஹல்ஸ்டோர்ப்' நீதி மன்றத்தில் 'ஈ' ஓட்டி வந்தவர். 'ஈ' ஓட்டினுல் வயிறு நிறையுமா? திடீரென இவருக்கு ஞானம் பிறந்தது. அரசாங்கத்தின் வாலாக மாறித் தமிழ்த் துரோகியானுர். ஆனுல் மக்களோ இவரை நிராகரித்து விட்டனர். ஆனுல் அரசாங்கமோ இவர்மேல் கருணை கொண்டு இவருக்கு ஒரு உத்தியோகம் கொடுத்தது. கிடைக்க வேண்டிய தலைமைப் பதவி தமிழர் என்ற காரணத்தால் கொடுக்கப்படாவிடினும், ஒரு உதவித் தலைவர் பதவியாவது கிடைத்ததேயென்று ஸ்ரீ மாகாளிவைத் தொழுது வந்தார். ஊரார் வீட்டுப் பணத்தில் உலகம் சுற்ற ஆசைப்பட்ட இவரோ அலரி மலர் சொரியும் ஸ்ரீ மாகாளியின் சன்னிதானத்தண்டை சென்று தேவிக்குச் சிற்றேவல் கூடச் செய்து வந்து, தான் வேண்டிய வரமும் பெற்ருராம்.

இப்படிப்பட்ட 'பச்சைத் தண்ணி' அப்புக்காத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபா எப்படிக் கிடைத்தது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது. ஸ்ரீமாகாளியின் பக்தர்கட்கு உதவும் லஞ்ச தேவதையின் அருளோ அன்று வேறேதும் புதிய சுரண்டல் தேவதை அருளோ! என்று அம்மான் திகைத்து நிற்கிருர்.

### வேம்படிக்கு வணக்கம்

வேம்படியில்சிலர்வெட்கம் மானமின்றிச் சிங்களம் படித்து வந்தார்கள் என்று அம்மான் முன்பொரு முறை கூறியிருந்தாரல்லவா? இம்முறை அம்மான் அங்கு சென்றிருந்த போது சிங்கள வகுப்புகள் நின்றுவிட்ட செய்தியை அறிந்தார். மானம் காத்த மறத் தமிழ்க் குடிப் பெண்கள் பலரின் ஏகோபித்த எதிர்ப்பின் விளைவாக மானத்தை இழந்து திரிந்த அந்த மெனக்கெட்ட வேம்படியர் தங்கள் இழிசெயலை நிறுத்தி விட்டார்களாம். இனித் திரும்பவும் வேம்படியின் சிறப்பு சுடர் விட்டுப் பிரகாசிக்கும். தாய்க்குலத்தின் மதிப்பைக் காப்பாற்றிய மானமுள்ள தமிழ்ப் பெண்களுக்கு அப்பாக்குட்டி அம்மானும், காலகண்டனும், சிரந்தாழ்த்தி வணக்கம் தெரிவிக்கின்றனர்.

### கருநாகத்தின் சீற்றம்

திரிப்பிலும் மழுப்பிலும் முன்னணியில் நிற்கும் தினசரிபற்றிக் கேள்வியுற்ற அம்மான், தன் தொந்தி குலுங்கக் குலுங்க, அத்தினசரிக் காரியாலயம் நோக்கி ஓடிச் சென்ருர். மெதுவாக ஒன்றுமறியாத அப்பாவிபோல காரியாலயத்துள் சென்று ஆசிரியர்கள் வேலை செய்யும் பகுதியை அடைந்தார். பலர் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருந்தனர். ஒரு குழப்பமற்ற சூழ்நிலை. இந்த அப்பாவிகளா இந்த திரிப்பிற்கும் மழுப்பிற்கும் காரணம் என்று அப்பாக்குட்டியம்மான் யோசித்தார். திடீரென்று பக்கத்து அறைக் கதவு திறந்தது. ஒரு நெட்டைக் கருநாகம் தன் விஷச் சீற்றத்துடன் வெளிப்பட்டது. அமைதி குடிகொண்ட இடத்தில் ஒருவித சலசலப்பு.

'ராஜா இங்கே வாரும்'— கருநாகம் சீறிற்று.

தன் பாட்டில் கடமையைச் செய்துகொண்டிருந்த வாலிபர் ஒருவர் எழுந்தார்.

'இராசதுரை எம். பி. தான் இறக்கும்போது தன் சடலத்தை மூடும்கொடி தமிழரசுக் கொடியாக இருக்கும் என்று கூறியதாக எழுதியது நீர் தானே?'

ராஜா; ஆம். எமது யாழ் நிருபர் அனுப்பிய செய்தி. அப்படியே எழுதினேன்.

கருநாகம்: 'அப்படி ஒருக்காலும் நடந்திராது. ராஜதுரை அப்படிச் சொல்லியிருக்க மாட்டார். எனக்குத் தெரியும்.'

ராஜா: 'எனக்கு அதைப் பற்றித் தெரியாது. இதோ யாழ் நிருபர் அனுப்பிய செய்தி' என்று யாழ் நிருபரின் செய்தியைக் கொடுத்தார்.

கருநாகம் மிரண்டது. ஆத்திரத்தில் சீறியது. சுற்றிவர இருந்தவர்கள் தங்களுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்கள்.

'இதில் ஏதோ பிழை நடந்திருக்க வேண்டும். ராஜு அப்படிச் சொல்லியிருக்க மாட்டார். நீர் எழுதியதைத் தாரும். நான் திருத்தி [திரித்து] எழுதுகிறேன்.' கருநாகம் சீறிக்கொண்டு தனது புற்றுக்குச் சென்றது, அறையில் அமைதி நிலவிற்று. அம்மானுக்கு நிலைமை விளங்கிற்று. மெதுவாக வந்த வழியே திரும்பினர்-

### 'கூ' காட்டும் அரசியல் வாதி

இராணுவச் சதி வழக்கு பற்றிய தீர்ப்பு வெளிவந்த நாள். அன்று வழக்கைப்பற்றித் தான் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சிலர் ஒரு அப்புக்காத்தின் வாதமே வெற்றிக்குச் சால் என்றனர், சிலர் வேறு ஒருருடைய வாதமே என்ருர்கள். இந்தக் கதைகளைக் கவனித்து வந்த அம்மான் அன்றிரவு காற்சட்டை கோட் மாட்டிக்கொண்டுஒரு'கிளப்' பிற்குப் போனுர்.

அந்தக் 'கிளப்'பில்பல தமிழ்ப் பெரிய புள்ளிகள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் 'கூ'க் கதைதான் பேசிக் கொண்டிருந்தார்களாம். அவர்களில் ஒருவர் தனிப்பெரும் தலைவரின் பக்தர். எல்லோரும் வழக்கு இவ்விதம் தீர்க்கப் பட்டது நல்லதே என்று கூற, இந்த தனிப் பெரும் தலைவர் பக்தர் தன் பக்திமயத்தை வெளியிட்டார். "இனி எம் தலைவருக்கே தமிழ் மக்களின் ஆதரவு பெருகும்" என்ருர்.

இதைக் கேட்டதும் எல்லோரும் சிரித்தனர். ஒருவர் "மைடியர் மான், வழக்கு இத்தோடு முடிந்தது என்று நினைக்க வேண்டாம் முக்கியமானதும், கஷ்டமானதுமானபகுதிஇனித்தான்வரும் அது ஒரு புறமிருக்க தனிப்பெரும் தலைவர் வழக்குப் பேசுவதற்கும், அரசியலுக்கும் தொடர்பில்லை. இனியும் அவர் தமிழ் மக்களைக் 'கூ'க் காட்டலாம் என்று கனவிலும் நினைக்க முடியாது. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது 'மான்'. அதைப்போலவே அப்புக்காத்து என்றவுடன் அரசியல் பேசலாம் என்று நினைக்க வேண்டாம். போன தேர்தலின் போது நடந்த ருசிகரமான சம்பவமொன்று கூறுகிறேன்" என்று கூறத் தொடங்கினுர்.

### பயந்த காரணம் யாதோ?

தேர்தல் முடிந்தபின் திரு. அல்பிரட்டின் ஆட்களுக்கும் இத் தலைவரின் ஆட்களுக்கும் ஏதோ அடிபிடி வந்ததாம். அதனைத் தனிப்பெருந் தலைவர் தான் பொலிசுக்கு அறிவித்து, திரு. அல்பிரட்டின் ஆட்களைப் பொலிசார் கைது செய்தனராம். இதைக் கேள்வியுற்ற திரு. அல்பிரட், முறைப்பாடு கொடுத்தவரே முதல் சாட்சியாக இருக்கவேண்டுமென்பதால் தனிப்பெரும் தலைவரே முதல் சாட்சியாவார், அவரைச் சாட்சிக் கூண்டில் சாயம் கழற்ற வேண்டும், அதற்கு தக்க ஆள் பாலசுந்தரம் என்று, அவரை வழக்காட ஏற்பாடு செய்தாராம்.

திரு. பாலசுந்தரம் ஏற்படுத்தப்பட்டார். அவர் தன் சாயத்தைக் கழற்றி விடுவாரென்ருே என்னவோ செய்தி கேள்விப் பட்டவுடன் தனிப்பெரும் தலைவர் வழக்கை வாபஸ் பெற்று விட்டாராம்.

இது தான் அவர் கூறிய கதை.

ஜி. ஜி. பக்தர் தலை கவிழ்ந்தது. மெதுவாக நகர்ந்து வேறு சிலருடன் கதைக்கத் தொடங்கினுராம்.

---

**அடுத்த வாரம்**

**கேசரி தயாரிப்பது எப்படி**

(நவீன திரிப்புச் சமையல் வி(த்)த்தை விளக்கும் கட்டுரை)

எழுதுபவர்:

**அப்பாக் குட்டி அம்மான்**

---


**பண்டிகைகளிலும், வைபவங்களிலும் முதல் இடம் பெறுபவை**

**லதா**

**மணிப்புரி சாரிகளே!!**

**லதா மணிப்புரி சாரிகள் ;**

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினுலான இழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.



**45" X 6 யார்**

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

**எலைட் சுப்பர்லோன்**

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

**குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,**

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி, 110&114, மெயின் வீதி:

**கொழும்பு.**

—Mylads/KL.570/62—


# கண்ணுடியின் வரலாறு

## விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இன்றியமையாத ஒரு பொருள்

மனிதன் தோன்ருக் காலத்தே தோன்றியது கண்ணுடி. வரலாறு காணுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் இயற்கையாகக் கிடைத்த கண்ணுடியை எடுத்து, மான்கொம்பின் உதவியால் அதைச் சீவித் தனக்கு வேண்டிய வகையில் பயன்படுத்தக் கற்றுக் கொண்டான். பின்னர், செயற்கையாகக் கண்ணுடி செய்யும் முறை தற்செயலாக பினீசியர் சிலருக்குத் தெரிய வந்தது என்று பழங்கதை ஒன்று கூறுகிறது. பினீசிய மாலுமிகள் சிலர் கடற்கரை மணலில் சோடா உப்பு மண்ணை அடுப்புக் கூட்டிச் சமையல் செய்யத் தொடங்கினுர்கள். சமையல் முடிந்து, சாப்பிட்டுவிட்டு அங்கேயே கண்ணயர்ந்தார்கள். வழித்துப் பார்த்தால், என்ன வியப்பு! அடுப்பின் வாயிலிருந்து பளபளக்கும் பொருள் ஒன்று உருகி ஓடி இறுகியிருப்பதைக் கண்டார்கள். மணலும் சோடா உப்பும் சூட்டினுல் உருகிக் கண்ணுடி ஆகியிருப்பதை அறிந்தார்கள்.

உருகிய கண்ணுடியை ஊதி உருக்கொடுக்கும் ஊதுகுழல் ஏறக்குறைய கி. மு. 300-ல் கண்டுபிடிக்கப் பட்டது. இதனுல் கண்ணுடியின் பயன் பெருகிற்று. பதினுருவது நூற்ருண்டிற்குள் கண்ணுடித் தொழில் ஒரு பெரிய தொழிலாகத் தழைத்துவிட்டது. அமெரிக்க நாட்டில் பதினேழாவது நூற்ருண்டின் தொடக்கத்தில் அங்கு குடியேறியவர்கள் பலர் கண்ணுடிக் கைவினைத் தொழிலின் திறனெல்லாம் நன்கறிந்தவர்கள்.

கண்ணுடி செய்யும் கைவினைஞர்கலை அன்றும் இன்றும் அடிப்படையில் ஒன்ருகவே உள்ளது. விஞ்ஞான ஆராய்ச்சிக்குக் கண்ணுடி இன்றியமையாத ஒரு பொருள். கண்ணுடித் தளவாடங்களில் தான் விஞ்ஞானி தன் சோதனைகளைச் செய்து பார்க்கிருன். கண்ணுடி மற்றப் பொருள்களோடு எளிதில் சேர்வதில்லை. அதனுல் சோதனை துப்புரவாகவும் துல்லியமாகவும் நடைபெற அது சிறந்த உதவியாக உள்ளது. இத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சிக்குக் கண்ணுடிச் சாமான்களைச் செய்யும் கைவினைத் தொழில் இல்லாமல் தீராது. இயந்திரங்கள் மலிந்த இக்காலத்திலும் இவ்வாறு ஊதுகுழலும் சிற்சில எளிய கருவிகளும் அனுபவமும் பொறுமையும் மனிதனது கையும் மூச்சுமே தேவைப்படும் ஒரு முக்கியமான தொழில் சிறப்பாக நடந்து வருவது விந்தையாகத் தோன்றலாம். எனினும், இது உண்மை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்னைக்குக் கடிதம்

# பாலுடன் எனக்கு பழந்தமிழர் பெருமை புகட்டி வீரத்தை ஊட்டிய அன்னையே!

## 'போய் வா மகனே போர்க்களத்துக்கு' என்று பூரிப்புடன் விடை கொடு தாயே!

அறிவழகன்

அம்மா !

தமிழ்த் தலைவர்கள் தமிழன்னையின் விடுதலைக்கு வாருங்களெனத் தமிழ் பேசும் மக்களை அழைக்கிறார்கள்; போகிறேன் நானென்றெழுதிய கடிதத்தைக் கொண்டு நீயெழுதிய அஞ்சல் எனக்குத் திகைப்பைத் தந்தது. என்னையொரு தன்மானமுள்ள தமிழனாக வளர்த்த எனதன்னை தான் இக் கடிதத்தை வரைந்தாளென்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

பாசம் உனது கண்களை ஒரு கணம் மூடிவிட்டது. அந்த வேளையில் வரையப்பட்டது தான் அக் கடிதம். எனக்குத் தெரியும், நெஞ்சார நீயென்னை விடுதலைப் போருக்குப் போகாதேயெனத் தடுக்க மாட்டாய். நீயொரு தமிழ்த் தாயல்லவா?

பாலுடன் நீ எனக்குப் பழந்தமிழர் பெருமை புகட்டினாய்; வீரத்தை அமுதாக வார்த்தெனக்குத் தந்தாய். சிறு வயதிலே உணவு ஊட்டும் போது, தீரர்களின் கதைகள் கூறி உணவோடு தீரத்தையுமன்றோ ஊட்டினாய்? மராத்திய மன்னன் சிவாஜியின் மாதா போல் நீ எனக்கானாய். உத்தமன் காந்தி போல் அன்புள்ளமும், சிறையிலே செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் போன்ற வீரமும் கொண்ட அஞ்சாத தமிழனாயென்னை வளர்த்து விட்டாய்.

### மறந்து விட்டாயா?

இளம் பருவத்திலெனக்கு கொடிகாக்க உயிர் கொடுத்த உத்தமன் கதை நீ கூற அது கேட்டு நான் கண்ணீர் மல்கி "அம்மா! தென்னகத்திற்கொரு குமரனென்றால் ஈழத்திற்கொரு அறிவழகன்" எனக் கூறியது கேட்டு நீயெனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு மகிழவில்லையா? அவ்வப்போது நீ என் செலவுகளுக்கென்று தந்த காசை, தேசத்திற்காகவும், இனத்திற்காகவும் உயிரையும் உடமையையும் கொடுத்த உத்தமர்களின் கதை கூறும் நூல்கள் வேண்டிப்படித்தது கண்டு, நீ எனது மகன் வீரனாக வளருகிறான் என்று சொல்லி உவகை கொண்டதை மறந்து விட்டாயா?

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் எனக்கு உயிரிலும் மேல். எனது தாயை ஒருவன் அவமானப்படுத்தினால் அவனைக் கண்ட இடத்திலே கண்டதுண்டமாகக் கூறு போட்டு விடுவேன். எமது சமுதாயத்தின் தாய்—ஈழத் தமிழன்னை—ஆட்சியாளரால் அவமதிக்கப்படுவதை நாம் எப்படியம்மா பொறுப்பது?

சிங்களம் மட்டும் சட்டத்தால் அன்னை விலங்கிடப்பட்டிருக்கிறாள். குடியேற்றத் திட்டம் என்னும் சட்டத்தால் அன்னை அழிக்கப்படுகிறாள். அவளது பிரதேசங்களை ஆக்கிரமித்து அன்னையை இந்நாட்டினின்றும் விரட்டியே விடுவதென மார்தட்டி நிற்கிறது அரசாங்கம். இலட்சக் கணக்கான அவளது மக்கள் மாக்களாக மதிக்கப்பட்டு குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு, வாழ்வற்றுத் தாழ்வுற்றிருக்கிறார்கள். அருள் சொரியும் அன்னையின் விழிகளின்று நீரைச் சொரிகின்றன. அவள் கண்ணீரைத் துடைப்பதற்கு கடலலையெனக் கட்டியங் கூறி நிற்கிறார் கணக்கிலடங்காதோர். அடலேறு போல ஆர்த்தெழுந்து விட்டனர் ஆயிரமாயிரவர். தளையறுப்பதே எனத் திரண்டெழுந்து விட்டது தீரர் கூட்டம். இவ் வேளையிலே நான் மட்டும் அரிதுயிரென அஞ்சி அடங்கிடலாமா?

### பொங்கி எழுந்து விட்டது!

சிங்கத்தமிழினம் பொங்கி எழுந்து விட்டது. ஆட்சிபீடத்திற்கு அடிவருடி, அவர்களிட்ட சின்னஞ் சிறு சலுகைகளைப் பெற்று வாழத் தமிழன்னையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஒரு கே. எம். பி. ராஜரத்தினாவும், சில பிக்குகளும் எமது சமுதாயத்தின் விதியை மாற்றியமைக்க முடியுமானால் இதை விட இழிநிலை வேறென்ன இருக்கிறது? எமது தலை விதி இன்று சிங்கள அரசியல்வாதிகளின் பகடைக் காயாக மாறிவிட்டது. இவர்களின் விளையாட்டுப் பொருளாக இனிமேலும் இருக்க முடியாதம்மா, தமிழ் பேசுமினம்.

இந்த அரசாங்கத்தின் செயல்கள் யாவும் உறங்கிக் கிடந்த எமது இனத்தின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி விட்டன. சென்ற வருடம் எமது போராட்டத்தின் போது இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும், அதன் தூண்டுதலின் பேரில் இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் நடந்து கொண்ட கீழ்த்தரமான கொடிய போக்கும் கண்டு குமுறும் எரிமலையாக மாறாத உள்ளங்களும் உண்டோ? ஒவ்வொரு செயலும் தமிழனது உதிரத்தை எரிமலைக் குழம்பாக மாறச் செய்தது. எம்மை இந்த அரசாங்கம் அடிமைகளிலும் கேவலமாக மதிக்கத்தானே இச் செயல்கள் எடுத்துக் கூறுகின்றன? எம்மை நாமே ஆண்டால் இந்த அஞ்சிவாழும் அவல நிலை இருக்குமா?

எவனெவனோ எல்லாம் சிங்களம் படிக்கிறான், பதவி உயர்வு பெறப்போகிறான்; நீ மட்டும் படிக்காமல் என்ன சாதிக்கப் போகிறாய்? உன்னைப் பற்றி நான் எண்ணிய கனவுகள் வீணாயிற்றே என்று பிரலாபிக்கிறாய். இப்படி நீ கூறுவதை விட, எவனெவனோ தற்கொலை புரிகிறான்; நீயும் தற்கொலை புரி என்று கூறியிருந்தால் நான் அதை மன மகிழ்வுடன் செய்வேன். இது என்ன பேதமை அம்மா? தவறு செய்பவர்களைத் தடுத்துச் சரியான பாதைக்கு இட்டுச் செல்வதா அன்று அவர்களது நாச பாதையில் நாமும் நடப்பதா? எம்மை அடிமைகளாக்கி வரும் அரசாங்கத்திடம் பட்டமும் பதவியும் பெறுவதில் பெருமை என்ன இருக்கிறது? சோற்றுக்காகச் சொந்த இனத்தை, விற்பதை விடச் சிறுமை வேறென்ன இருக்கிறது உலகில்? எனது சமுதாயத்தை வீழ்த்துவதற்காக விரிக்கப்பட்ட வலையில் வஞ்சகர்களின் கையாளாக வீழ்ந்து, லஞ்சமாக ஒரு பதவி பெறுவதை விடக் கயமையும் வேறு உண்டோ?

### பெற்றவள் என்று பெருமைப்படு

இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றுவதன் பயனாக நான் உயிரிழக்க நேரிடலாம். அப்படி நேர்ந்து விட்டால் நீ வருத்தப்படாதே. வருங்காலம் வளமுறுவதற்காக, அன்னையின் தளையறுப்பதற்காக உயிரைப் பலிபீடத்தில் வைத்த தன்மானமுள்ள தீரனை மைந்தனாகப் பெற்றேன் எனப் பெருமைப் பட்டுக்கொள். இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிக்க இன்னும் மக்களைப் பெற்றெடுத்து வளர்த்து விடும் பேறு அற்றேனே என வருத்தப்படு. என்றோ ஒரு நாள் நான் இறப்பது நிசம். என்றோ ஒரு நாள் எப்படியோ, போயே தீரவேண்டிய எனதுயிரை இன்றே எனது சமுதாயத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்பேன்.

சென்ற வருடம் எமது பிரதேசங்களிலே இராணுவத்தின் ராட்சத தர்பார் நடக்கையிலே அப்பாவி வண்ணானொருவன் அநியாயமாகச் சுட்டுத் தள்ளப்படவில்லையா? இவர்கள் கள்ளுண்ட மயக்கத்திலே கனவேகமாய் ஓட்டிச் சென்ற வாகனங்களுக்குப் பலர் பலியாகவில்லையா? வீடுகள் எரிக்கப்படவில்லையா? கன்னிகள் கற்பழிக்கப்படவில்லையா? பெண்மை பறிக்கப்படவில்லையா? வீதியிலே சுதந்திரமாக நடமாட முடியாத நிர்ப்பந்தம் ஏற்படவில்லையா? எம்மைப் பட்டினி போடவில்லையா? இதையெல்லாம் நாம் உயிருள்ள வரை மறக்க முடியுமா? இதையெல்லாம் செய்யும் அரசாங்கம் தான் உருத்திராட்சப் பூனை போல் ஒற்றுமையைப் பற்றி நமக்கு உபதேசம் பண்ணுகிறதம்மா!

(9-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

# எழுதுகிறேன்!

மூ. சடாட்சரன்

கையிலே பையில்லை காலில் செருப்பில்லை
பையிலே 'பாக்கர்ப் பவுண்டனும்'
மெய்யாய்;
மடிப்புக் குலையாத பட்டு உடையும்;
பிடிக்கக் குடை; மணிக்கூ டில்லை
படிக்கிறேன்.
வீட்டிலே 'ரேட்டில்' விளையாட்டரங்கிலே;
'கோட்டில்' கடையில் கூடிடும்
நாட்டவர்;
காட்டிடும் உண்மையைக் காண்கிறேன் கண்ணினால்!
"வீட்டில் மனைவியும் மக்களும்
பட்டினி
கடன்" என்று நீட்டிடக் கையால் கொடுத்தோன்
நடக்கிறான் நாளெலாம்; நன்றி
கடந்தோன்
கிடக்கிறான் வீதியில்; கீழ்மைப் பழக்கம்.
நடக்கும் மனிதர்க்கே நாணம்
கடக்கிறார்.
வாடும் இனமாம் "தமிழர் நாம்" என்றவர்
கூடுகிறார் மன்றம் குலைகின்றார்
ஓடுகிறார்.
நாடுகிறார் சாதியினை நாய்போலும் மோப்பத்தால்;
சாடுவோம் என்றவர் சத்தியம்
மூடுகிறார்.
கூட்டத்தில் நின்றுநற் கொள்கை முழக்கினார்
நாட்டத்தில் ஒன்றையும் கொள்கிலார்;
ஓட்டமாய்
தன்மக்கள் வாழ்ந்திடத் தன்கொள்கை விற்றிடும்
மன்னர் மடமையின் மாண்புளோர்;
கண்ணியம்
காசுக்கு வாங்க களஞ்சு விலைகேட்கும்
மாசின் உருவம் மனவெழுச்சி
பேசும்;
புயற் காற்றாய் நெஞ்சம் பொருமும்; இவைகள்
வயற் புறத்துக் காட்சியிலே - வந்து
துயர் போக்கும்;
'பா'வாய்[ச்] சுரக்கும் பலநாளாய் நெஞ்சினிலே
காவாய் தமிழைக் கருத்துடனே;
சாவாமல்;
வாழ வழி செய்து வற்றா வளம் பெருக்கி
ஆள நமதினத்தோர் ஆற்றிவால்
நாளும்
பழுதொன்றும் வாராமல் பார்த்தேன் இதயத்தால்
எழுதுகிறேன் கண்ணே இனி.


## திருமண அழைப்பு

திரு. எம். பொன்னையாவும் பாரியாரும் (வவனியா)
தங்கள் புத்திரி
**செல்வராணிக்கும்**
திரு. எஸ். பொன்னுத்துரை தம்பதிகளின்
(ஹம்ப்டென் லேன், வெள்ளவத்தை)
சிரேஷ்ட புத்திரன்
**பரமபதத்துக்கும்**
யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில்
ஒக்டோபர் 19-ம் திகதி பி. ப. 8 மணிக்கு
நடைபெறவிருக்கும்
**திருமண வைபவத்திலும்**
அதன் பின்னர்
முதலியார் வளவு, தலையாளி, யாழ்ப்பாணத்திலுள்ள
பெண் வீட்டு விருந்துபசாரத்திலும்
தங்கள் உறவினர், நண்பர்கள் யாபேரையும் கலந்து
சிறப்பிக்குமாறு விழைகின்றனர்.
தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

திறமையுடன் தயாரிக்கப்படுவதும்!
நம்பிக்கையுடன் வாங்கப்படுவதும்!!
திருப்தியுடன் உபயோகிக்கப்படுவதும்!!!
சிறந்த ரக
ஜப்பானிய
**"ஓனோடா"** போட்லண்ட் சிமெந்தே
(பிரிட்டிஷ் நிர்ணயத் திட்டத்திற்குச் சமதையானது)
விநியோகஸ்தர்கள்:
**சென்ற் அந்தனீஸ்**
**ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,**
516, ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு,
கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் பாரதி விழா

## தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

லண்டன் தமிழ் சங்கத்தின் ஆதரவில், லண்டன் மாநகரில், பாரதி தின விழா சங்கத் தலைவர் டாக்டர் சேகர் தலைமையின் கீழ், ஜேர்மன் கிறிஸ்தவ இளைஞர் சங்க மண்டபத்தில் 23-9-62 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில், மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

தலைவர் பாரதியாரைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறி விழாவை ஆரம்பித்து வைத்தார். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தாரால் லண்டன் தமிழ் சங்கத்திற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்ட இசைத் தட்டுகள் மூலமாக இன்னிசை விருந்தளிக்கப்பட்டது.

சொற் பொழிவு நிகழ்ச்சியிலே, முதலாவதாக திரு. மில்கியோ பேசியதாவது:

“பண்டைக் காலத்தில், தமிழ் சமுதாயத்தில் மலிந்து கிடந்த அநியாயங்கள் வள்ளுவனுக்குப் பிடிக்கவில்லை. வறுமையும், சிறுமையும் ஆண்டவனின் செயல் என்றும், கர்மம், தர்மம் என்னும் பெயர்களைச் சொல்லி ஆண்டவனின் மேல் பழியைச் சுமற்றி, வறுமையைச் சுரண்டி உல்லாச வாழ்வு வாழ்பவர்களும் வள்ளுவன் காலத்தில் இருந்திருக்கின்றார்களே.

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின், தமிழகத்தில் தோன்றினன் வள்ளுவன் பரம்பரையில் ஒருவன்; பாரதி; புரட்சிக் கவிஞன். அவன், தமிழினத்தைக் காண, எட்டியாபுர மாளிகைக்குப் போகவில்லை, அல்லது சமஸ்தான அறைகளிலோ, செல்வந்தர் மாளிகையிலோ காணவில்லை. தமிழினம் பாட்டாளி இனம் என்பதை உணர்ந்தான். தமிழினத்தை வியர்வை கொட்டும் வயலில் கண்டான். தமிழினத்தை தஞ்சாவூர் நெற் கழனிகளின் சேற்றில் கண்டான். தமிழரின் தாய் இனத்தை ஈழ நாட்டின் மலை நாட்டுத் தேயிலைத் தோட்டங்களிலே கண்டான். தமிழகத்தில், யுவதிகளைக் கரும்புத் தோட்டங்களிலே கண்டான்; மனம் வெதும்பினன். தாய் நாட்டில் தொழிலுக்கும், உழவுக்கும் வழியின்றித் தமிழினம் தவிப்பதைக் கண்டு பாடினன்.

“இவர்கள் துயர் தீர்க்க வழி யிலையோ?” என்று புலம்புகிருன். தாய் நாட்டில் வயிற்றைக் கழுவ, வழியின்றித் தமிழினம், தொழில் தேடி நாடோடியாய் அலைகிறதே, பிற நாட்டில் அடிமை வாழ்வு வாழ்கிறது.

எங்கள் அடிமைத் தனத்திற்கு, தமிழ் நாட்டிலே அடிப்படைக் காரணம் பொருளாதார மின்மையே என்பதை உணர்கிருன். புதுப் புதுத் துறைகள் துவங்க வேண்டும். நம் நாட்டிலே, மக்களுக்குத் தொழில் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் நல் வாழ்வு அளிக்க வேண்டும். சொல்கின்ருன் “ஆயுதம் செய்வோம் நல்ல, காகிதம் செய்வோம்.........உலகனைத்தும் தொழில் அறிந்தே செய்திடுவோம்” என்று பாடுகிருன்.

அடுத்து, திரு. கே. விக்கினராஜா ஆங்கிலத்தில் பேசியதாவது:

“கவியுலகில் சிறந்த கவிஞர்களில் ஒருவரான கவிஞர் பாரதியாரின் ஞாபகத்தினத்தையொட்டி, பல கூட்டங்கள், வைபவங்கள், விழாக்கள், தமிழ் பேசும் நாடுகளில் பல்வேறு பகுதிகளில் நடை பெற்றுவருகின்றன. பாரதியாரைப் பற்றிப் புகழ்ந்து, மக்கள் தமிழ் மொழியில், மிகத் திறமையாகவும், அழகான நடையிலும், இனிமையான சொற்களால் அடுக்கு மொழியில் சொற்பொழிவாற்றுகின்றனர். மனித சமத்துவ வாழ்வுக்கே, தனது வாழ் நாள் பூராவையும் சமர்ப்பணம் செய்தார் பாரதியார். ஆனல், இன்று அவர் உயிருடன் வாழ்ந்திருந்து, எமது சமுதாயத்தைப் பார்த்திருப்பாராயின், அவர்தான் எதிர் பார்த்த மக்களின் வாழ்வைக் காணுததற்கு, ஒருபடியேனும் அவர்களுக்கு வழி காட்ட முன் வந்திருக்கத் தயங்கியிருப்பார்.

நாம், தொடர்ந்து, சொன்னதைத் திருப்பிச் சொல்லும் கிளியின் வாழ்வைப் போல், பாரதியாரைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதில் எமது காலத்தைக் கழிக்கிறோம். பாரதியாரின் பாடல்களைப் பாடிப் புகழ்வதிலோ அல்லது அவர் எழுதியவற்றைப் பற்றிப் பேசிப் புகழ்வதிலோ, யாம் ஒரு வித பயனையும் அடையப் போவதில்லை. அவர் காட்டிய வழியைப் பின் பற்றிச் செயலில் செய்து காட்டுவதே சிறந்த வழி.

மற்றவர்களின் நலனுக்காகப் பாடு பட்டு, வாழ்ந்து வரும் மனிதனையே, ஓர் சிறந்த பெரிய மனிதன் என்று அழைக்கிறோம். தனது கௌரவத்திற்காக வாழ்ந்து வரும் மனிதனை, ஓர் சின்ன மனிதனுகக் கணிக்கிறோம். இன்று, இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ, அல்லது உலகத்தின் வேறு எந்தப் பாகத்திலோ, எமது சமுதாயத்தைச் சற்று உற்றுப் பார்ப்போமாயின், பாகுபாடுள்ள சமுதாயத்தையே காண முடிகிறது. பாரதியார், குடும்ப வாழ்க்கையையும், அதன் நேசத்தையும், சந்தோஷத்தையும் பற்றி மிக அழகாகப் பாடியிருக்கிருர். ஆனல், இன்று எமது குடும்ப வாழ்க்கையைப் பார்த்தால், அது ஓர் வியாபாரக் கழகமாய் (Business Institution) காட்சியளிக்கின்றது. தற்போது, ஒரு பெண், ஆடவனை நேசத்திற்காக நாடாமல், சீவியத்தைக் கொடுக்கும் உத்தியோகத்திற்காகவே நாடுகிருள். இதே போன்று, ஓர் ஆடவன் மகிழ்ச்சியையும், இதய பூர்வமான நேசத்தையும் பரிமாறக்கூடிய பெண்ணை நாடாமல், சீவியத்திற்கு வருவாய் கொடுக்கக் கூடிய கொழுத்த சீதனத்தைக் கொண்டுவரும் பெண்ணையே நாடுகிருன்.

இப்படியான தமிழ் மக்களின் வாழ்க்கையில், எப்படிச் சிந்தித்து, ஆக்க வேலைகளில் ஈடுபட்டு, அரசியல், கலாச்சாரம், தத்துவ ஞானம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புதுப் புது விஷயங்களைக் கண்டு பிடித்து, உலக படத்திலே இடம் பெறமுடியும்? இதையறிந்து, பாரதியார் பாடினர்: “வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா, மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகளிலடா”

சொற்பொழிவு நிகழ்ச்சியிலே, இறுதியாக திரு. ஈ. வி. சிங்கன் பேசியதாவது:

‘சேற்றின் மத்தியில் செந்தாமரை மலர்ந்ததுபோல், முள் கதிர் நடுவிலே மோகன ரோஜா எழுந்தது போல், உவர் கடலின் ஆழத்தில் ஒளி முத்து மலர்ந்தது போல்” பாரத பூமியிலே எட்டியா புரத்திலே, பாழும் வறுமை மடியிலே பாரதியார் பிறந்தார். அவர் ஐந்து வயதில் கொஞ்சும் குழந்தைப் பருவத்தில் ஆருயிர் அன்னையை இழந்தார். தந்தை அரவணைந்து தமிழ் நூல்களைப் பயின்ருர். ஆங்கில பாடசாலைக்குக் கல்வி கற்கும்படி அனுப்பப் பட்டார். ஆனல், துள்ளித் திரியும் பருவம் பாடசாலைக்குப் போகாது, இயற்கை எழில் வெளிக் காட்சிகளைக் கண்டு இன்புறுவதற்காக, வண்ணச் சோலையிலே, வாவிக் கரையினிலே, வானம் பாடியெனப் பறந்து திரிந்தார். இயற்கை, அவரை இரு கரமும் நீட்டி அழைத்தது. இன்பமும், அவர் இதயத்தில் நிறைந்தது. வானிலவு, மதுரைக் கனி, இளந்தென்றல், அந்தி வானம், அருவிகள் யாவும் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. உறங்கிக் கிடந்த அவரது கவிதைச் சக்திக்கு உயிர் ஊட்டின. பாடினர்: “நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமின்றி, வஞ்சனை சொல்லுவாரடி கிளியே...... ......வாய் திறந்து சும்மா வந்தே மாதரம் என்பார்.”

காலம் ஓடியது. சுப்பிரமணிய பாரதியார் தேசிய கவிஞனுக மாறினர்; பரகவி என்று வாழ்த்தப்பட்டார். புரட்சி எண்ணம் புதுமைத் தியாகம் கொண்ட பாரதியார் ஆயிரம், ஆயிரம் கவிதைகளைப் பாடினர். தமிழ்ப் புலவர்களுக்கு, தனக்கு உற்சாகம் கொடுத்த புலவர்களை “கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோதனைப் போல், பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை” என்று பாடினர்.

அடுத்ததாக, செல்வி ஆர். சன்னியின் பரத நாட்டியம் இடம் பெற்றது.

திரு. என். கருணதேவா புல்லாங்குழல் வாசித்து, விழாவில் பங்கு பற்றிய அனைவரையும் மகிழச் செய்தார்.

(13-ம் பக்கம் பார்க்க)

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி ஸ்பெஷல்
காரம், மணம், குணம் நிறைந்தது.
புகைப்போருக்கு புத்துணர்ச்சியை ஊட்டும்.
யானை பீடி கம்பனி
62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு. தொலைபேசி 7651

## சங்கப் பலகை

### எங்கள் கதிர்காமம்

ஆசிரியர்: சி. சின்னையா, கச்சாய்.
வெளியீடு: சுதந்திரநாத அச்சகம்,
திருநெல்வேலி.
விலை: ரூபா 1-00

இந்து சமயத்தவரின் ஆலயமான கதிர்காமம், இன்று பௌத்த ஆதிக்கத்தின் கீழ் இருப்பது தெரிந்த விடயமே. இதனல் இந்து சமயக் கலாச்சாரங்கள் தவறடைந்து வருவது மக்கள் அறிந்ததே. இந் நிலையைக் கண்டு மனமுருகி வடித்த பாக்களே இந்நூலாகும்.

கந்தப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்தைப் பற்றித் தமிழில் பாடுவதாயின் யாருக்குத் தான் இன்பம் ஏற்படாது? காரணம்- தலைச் சங்கத்தில் இருந்து தமிழாராய்ந்தவர் அல்லவா கந்தப் பெருமான்?

நூல் முழுதும் சந்தவின்பம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கந்தப் பெருமான் அருணகிரிநாதரைப் பார்த்துப் பணித்தவரல்லவா ,சந்தம் மிக்க செந்தமிழ்ப் பாடல்களைப் பாடுமாறு? அதையுணர்ந்து தான் போலும் ஆசிரியரும் சந்தச் செய்யுளால் நூலை நிறைத்து விட்டார்.

அணிந்துரைகள் அதிகரித்து விட்டன. தரமான ஒன்றை மட்டும் இணைத்துக் குறையை நீக்கியிருக்கலாம்.

—சங்கர்

---

### ஞானசூரியன்

ஆசிரியர்: இ. சுந்தரராஜ சர்மா
வெளியீடு: ஸ்ரீ லங்கா கஷ்ட நிவாரண சங்கம்
76/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
விலை: சதம் 50

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்துக்கு உரை விளக்கம் கண்ட வித்துவ சிரோமணி சி. கணேசையர் வாழ்க்கையை விவரிப்பதே இச் சிறு நூல்.

ஐயர் அவர்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு அளப்பரியது. அதில் ஒரு பகுதியையே இந்நூல் மூலம் நமக்குக் காட்ட முடிகிறது.

பழைய பாணியிலே நூல் எழுதப்பட்டுள்ளது என்ருலும், ஆசிரியரிடம் இருக்கும் ஆற்றலை ஓரளவு இந்நூல் வெளிப்படுத்தியுள்ளது.

-சங்கர்-

---

### தோட்டத் தொழிலாளியே திரும்பிப்பார்!

ஆசிரியர்: சாமி.
விலை. சதம் 30

தோட்டத் தொழிலாளர்கள் ஒற்றுமையின்றி வாழும் நிலை கண்டு எழுந்த மனக் குமுறலின் பிரதிபலிப்பே இந் நூல்.

தோட்டத் தொழிலாளர்கள் ஐக்கியம் சிதறி அவல நிலைக்காளாகியிருப்பதன் காரணங்களை ஓரளவு விளக்கியுள்ளார் ஆசிரியர்.

“வெளி நாடு சென்று தொழிற் சங்கம் படித்த பண்டிதர்களால் பாமர மக்கள் நிதி பாழாகியதல்லாமல் பாட்டாளி வர்க்கம் பெற்ற நன்மையென்ன? மலை நாட்டு மக்கற் மனக் குறை தீர்ந்ததா?” இப்படிப் பல கேள்விக் கணைகளைத் தொழிற் சங்கத் தலைவர்கள் மீது தொடுத்து அவர்களை நன்ருகச் சாடியுள்ளார்.

மலையக மக்கள் உயர்வு ஒற்றுமையொன்றிலேயே தங்கியுள்ளது என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

நூல் சிறியதாயினும் விடயம் பெரியது.

-சங்கர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல்களினுல் அவலப்படும் தமிழினம் ஒரே அணியில் திரள வேண்டும்

இலக்கியம்:

## இவள் எத்தகைய பெண்?

—தேனீ—

நூலைவனுக்குத் தலைவி மேல் தீராக் காதல். அவளுடைய உருவமே அவன் இதயத்தை நிரப்பி இருக்கிறது.

எங்கு சென்ருலும் அவனுக்கு அவளுடைய எண்ணம்தான்.

எங்கு பார்த்தாலும் அந்த அழகியின் உருவத்தைத் தான் அவன் கண்கள் காண்கின்றன.

அவள் மயிலைப் போன்ற தன்மையாள். ஆகவே, அவள் மயிலோ என்று மயங்குகிருன் அந்த மறக்குலத் தலைவன்.

அவளால்—அவள் நினைவால்—அவன் அடையும் வருத்தத்துக்கோ எல்லை இல்லை. உள்ளமும், உடலும் ஒருங்கே வாதைக்குள்ளாகின்றன.

ஆகவே, அவள்—அதுதான், அவன் காதலி—ஒரு வேளை அணங்காக இருப்பாளோ என்றும் ஐயுறுகிருன் தலைவன்.

இவையுமில்லாமல், அவள் ஒரு தமிழ்ப் பெண்ணுக மட்டும் இருப்பாளோ?

காதிலே குழை அணிந்த இந்த மெல்லியலாளை, இப்படிப்பட்டவள் என்று எப்படி வரம்பிட்டுக் கூறுவது? அவள் எந்த வரம்பிர்கும் உட்பட்டவளாகத் தென்படவில்லையே!

தலைவனுக்குத் தலை சுற்றுகிறது. நோயையும் தந்து அந்த நோய்க்கு மருந்துமாகும் இந்தப் பெண் ஏன் தான் என்னை இப்படி வருத்துகிருளோ?

அவளை நினைத்தால், இன்பமும் துன்பமும் கலந்த ஒருவகை உணர்ச்சி.

அவளுடை உருவம் உள்ளத்தில் தோன்றியதும், மயக்கம்.

அருகிலே இருக்கும்போது தான், ஊடி என்னை வருத்துகின்ருள் என்ருல், தூரச் சென்ற பின்னும் தொடர்ந்து வருத்துகிருளே? இவள் எத்தகைய பெண்?

அவள் அழகுக்குத்தான் எத்துணை சக்தி! அவள் இயல்புக்குத்தான் எத்துணை உரம்!

இவளை எப்படிப் பெண் என்பது? இவளை எப்படி மெல்லியலாள் என்பது?

என்னை வருத்தும் நோய் என்று தான் அவளை அழைக்க வேண்டும்.

ஆனுலும், நோயாக இருப்பவள் எப்படி மயிலைப் போன்ற அழகுடைத்தவளாவாள்? அப்படியால், அவள் மயிலே தான்!

அல்லது...இவள் ஒரு தமிழ்ப் பெண்ணே? தமிழ்ப் பெண்களுக்குத்தான் இப்படித் தம் காதலரை வருத்தும் தனிக் குணம் உண்டோ?

இப்படிப் பல கேள்விக் கணைகளால், தலைவனின் நெஞ்சம் தாக்கப்பட்டு, மயக்கமுறுகிறது.

தலைவனின் இப் பரிதாப நிலையை, வையகத்து வாழ்வுக்கு வழிகாட்டியாம் வள்ளுவன், தமது களவியலின் முதற் குறளிலேயே, அழகாகப் படம் பிடிக்கிருன்.

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு.

(அணங்கு—வருத்தம்)

## மன்னுர் மாநாட்டு முடிவு வரவேற்கத் தக்கது

(எஸ். குணநாயகம், தலைவர், கிராமச்சபை, கட்டைபறிச்சான்.)

மலைநாட்டிலும் கட்சியின் கிளைகளை நிறுவுவதென்று, அண்மையில் நடைபெற்ற மன்னுர் மாநாட்டில் தமிழரசுக்கட்சி முடிவுசெய்தது குறித்துப் பலவிதமான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. கட்சியின் முன்னுள் பொதுச்செயலாளரும் 'இந்த முடிவு குறித்துக் கட்சி புனராலோசனை செய்ய வேண்டும்' என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிருர் இலங்கை தமிழரசுக் கட்சி முற்றிலும் ஒரு சனநாயக அமைப்பாகும். எனவேதான் கட்சியில் இருப்பவர்கள் கூடத் தங்கள் கருத்துக்களைத்தாராளமாக வெளியிடுவதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கிருர்கள்.

மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் எங்கள் சோதரராவர். தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தினுல் இவர்கள் இன்று மொழி உரிமை, குடியுரிமை ஆகியவற்றை இழந்து நாடற்றவர்களாக வாழவேண்டிய கவலைக்கிடமான நிலையில் தள்ளப்பட்டிருக்கிருர்கள். இந்தியர்கள் என்று எள்ளிநகையாடப்படும் இவர்களில் பெரும்பான்மையினர் இந்திய மண்ணிலேயே காலடியெடுத்து வைத்தறியாதவர்கள். இந்த நாட்டிலேயே பிறந்து, இந்த நாட்டிலேயே வளர்ந்து, வாழ்ந்து, நாட்டின் செல்வத்திற்கு முதுகெலும்புபோன்று உழைத்து வரும் இந்த உத்தமர்களுக்கு இலங்கைதான் தாயகமாகும். என்ருலும் "இந்தியனே திரும்பிப்போ" என்று ஏவுகணைகளைத் தொடுக்கின்றது இலங்கை அரசாங்கம்.

### ஓடப்பரும் உயரப்பரும்

தேயிலைச் செடிகளுக்கும், ரப்பர் மரங்களுக்கும் தங்கள் வியர்வையை நீராக்கி, உதிரத்தை உரமாக்கி, உழைத்து, உழைத்து உலகச் சந்தையில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு உன்னத தானத்தை ஏற்படுத்திக்கொடுத்து, இன்று ஓடப்பராயிருக்கும் இந்தத் தொழிலாளர்கள் தங்கள் மொழியுரிமை, குடியுரிமை பெறவேண்டி, விழிப்புணர்ச்சியடைந்துவிட்டதைக் கண்டதும், இந்த ஓடப்பர்களைத் தொழிற் சங்கங்கள் என்ற பெயரில் சுரண்டிப் பிழைத்த சில உயரப்பர்கள் பொங்கிவரும் புத்துணர்ச்சிக்குப் புதைகுழி தோண்டும் முயற்சியில் முதற்படியாகப் பல புனைந்துரைகள் கூறி நாட்டுமக்களை ஏமாற்றலாம் என்று நம்புகின்றனர். ஓடப்பனைப் பார்த்து உயரப்பன் சிரித்த காலம், சீறிய காலம் அவன் சிரத்தையே சீவி எறிந்த காலம் ஒன்று இருந்தது அன்று. ஆனுல் இன்று?......... அந்த ஓடப்பன், உயரப்பனும் தானும் ஒப்பப்பன் என்ற உண்மையைப் புரிந்து கொண்டுவிட்டான். இந்த நிலையில் அந்த ஓடப்பன் உதையப்பனுக மாறுவதற்கு முன்பு உயரப்பன் ஒதுங்கி விடுவதே மேலான செயல் என்று நான் கூறவிரும்புகிறேன்.

தமிழரசுக்கட்சி மலைநாட்டிலும் தனது கிளைகளை நிறுவப்போகின்றது என்ற செய்தியைக் கேட்டதும், நாட்டின் பிரதமரே "விபரீதங்கள் விளையப்போகின்றன!" என்று தமிழரசுத்தந்தைக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்கள். இந்த முயற்சி தடுக்கப்படவேண்டுமென்று திருவாளர் தொண்டமான் துடிப்புடன் பேசுகிருர். அன்பர் அஸீஸ் அறிவுரை கூறுகிருர். தமிழரசுக்கட்சியின் இந்த முடிவைக்கண்டு இவர்கள் அனைவரும் ஏன் பதட்டமடைய வேண்டும்? சாத்வீக முறையில் உரிமைகளைப் பெற விரும்பும் ஒரு கட்சியின் முடிவுகண்டு இவர்கள் ஏன் கலங்கவேண்டும்? இன்று மலைநாட்டில் இயங்கி வரும் தொழிற் சங்கங்கள் மூலம் எக்காலத்திலும் உரிமைகளைப் பெறமுடியாது என்பதை ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் நன்ருக உணர்ந்து கொண்டு விட்டான். வாழ்க்கையின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட பின்பு, தொழிற்சங்கவாதம் பேசுவது, புதைகுழிக்குச் சென்றுவிட்ட பிணத்தைமீண்டும்தோண்டியெடுத்து, அதற்குப் புனுகு பூசி- புத்தாடை அணிவித்து அழகு பார்ப்பதைப் போலாகுமென்பது தோட்டத் தொழிலாளர்களுக்குப் புரியாத விடயமல்ல. எனவேதான் அவர்கள் இன்று தமிழரசுக்கட்சியின் கீழ் ஒன்று சேருவதற்கு முன்வந்து விட்டனர்.

### நேசக்கரம் நீள்கிறது

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்கள் நீட்டும் நேசக்கரம் கண்டு, மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்களும் அன்புக்கரம் நீட்டி அணைத்துக் கொள்வதற்குத் தயாராகி விட்டனர். இந்தப் பாச உணர்ச்சியின் மூலம்தான், இந்த நாட்டுத் தமிழ்பேசும் இனத்தின் எதிர்காலம் நாசமடையாமல் தடுத்து நிறுத்த முடியும். வடிகட்டிய வகுப்பு

(13-ம் பக்கம் பார்க்க)

## இடுப்பை முறித்து-அந்த இலுப்பையின் கீழ் போட்டிடுவேன்

துறைநீலன்

அவள் வாலைக் குமரி! வண்ணமாக வளர்க்கப்பட்டவள். வேறு எண்ணம் அவள் மனதிற் குடிபுகுந்திடக் கூடாது என்பது, அவள் தம் மாதாவின் ஆசை! இதனுல், மகள் தண்ணீர் எடுக்கப் போகின்ற இடத்திலுள்ள இளைஞன் அவள் கண்ணிற் பட்டிடக் கூடாது என்று அந்தத் தாய் உள்ளம் எண்ணியது, எனவே தான், மகளைத் தண்ணீருக்கு அனுப்பும் போது 'அந்த இளைஞன் கரி நிறமுடையவன்—அழகற்றவன்; அவனைப் பார்க்கவே வேண்டாம்; சுணங்காமல் வா' என்று புத்தி கூறி அனுப்புகிருள் அந்தத் தாய். அவன் அழகற்றவன் என்று சொன்னுல், தன் மகள் அவனை விரும்பமாட்டாள் என்ற எண்ணம் அவளுக்கு!

தண்ணீருக்குப் போ மகளே
தரியாமல் வா மகளே!
கன்னங்கரியவனைக்
கடைக்கண்ணுலும் பாராதே

காற்றிடைமேற் குடமேந்தி அவள் செல்லும்போதே அந்த கன்னங்கரியவன் அவள் எண்ணத்திற் கலந்திட்டான். எங்கே தடையுண்டோ, அங்கே அதைத் தாண்டி விடத்தானே மனித மனம் எண்ணுகிறது! இதற்கு அவள் மட்டும் விதிவிலக்கா என்ன? அடிக்கடி அவர்கள் ஒருவரையொருவர் பார்ப்பதனுல் காதல் உண்டானது......! அவள் தண்ணீர் எடுக்கும் சாட்டில் வந்து வந்து, அவனேடு இன்பப் பொழுது போக்கிப்போனுள்.

### கிராமிய இலக்கியம்

இதைக் கண்டாள் பக்கத்து வீட்டுப் பெண்ணெருத்தி, இதை வளரவிட்டால், காளை அவளைக் கெடுத்திடுவான் என்று எண்ணினுள். உடனே அந்த வாலைக்குமரியின் தாயிடம் வந்தாள். தான் கண்டதை நேரில் விளங்கச் சொல்ல அச்சம் கொண்டு, சிலேடையாக இப்படிக் கூறுகிருள்:


வெட்டுக்கிடா நாம்பன்
விசுகொம்பன் தாமரை
யான்
பள்ளத்து வெள்ளாமையைப்
பால் பறக்கத் தின்னு
தல்லோ!

இதைக் கேட்ட அந்தத் தாய்க்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. தண்ணீருக்குப் போவதாகச் சொல்லி, என் கண்ணில் மண்ணைத் தூவி விட்டாளே பாதிகியென்று மனம் புண்பட்டாள். 'வரட்டும் அவள்' என்று ஆத்திரத்தின் மிகுதியால் எண்ணிக்கொண்டு, அவள் வரும் வழிமேல் விழி வைத்திருந்தாள் அந்தத் தாய்.

அப்போது—காற்றிடைமேற் குடமேந்தி, கான மயிலென ஒயிலாக ஆடி அசைந்து வந்துகொண்டிருந்தாள் அந்த வண்ணச் சிலை! அந்தத் தாய் தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, தான் கேள்விப்பட்டது உண்மைதானு வென்றறிய, தன் மகளை இப்படி வினவுகிருள்;

வார்த்து முடித்த கொண்டை
[illegible]
கொண்டை

(13-ம் பக்கம் பார்க்க)

ராஜ பீடி
ராஜ பீடி ஸ்பெஷல்
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்
ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.
டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஒக்டோபர் மாதம் 14-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# கடற்படையை அகற்றுக!

வட இலங்கையிற் கடற் படையினர் அட்டகாசம் எல்லை மீறுகிறது. வட பகுதி அவர்களின் விளையாட்டுப் பூமி—துப்பாக்கிதான் அவர்களின் விளையாட்டுக் கருவி.

கடற்றொழிலாளர்களைச் சுடுவது அவர்களுக்கு ஒரு விளையாட்டு. மீன்களைக் கொள்ளையிடுவது ஒரு பொழுது போக்கு. "கள்ளக் கடத்தலைத் தடுத்தல்" என்பதுதான் இவ் விளையாட்டின் பெயர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையுமி அவர்கள் ஒரு மீன் பிடிப் படகைச் சுட்டனர். இருவருக்குப் படுகாயம்; ஒருவர் நிலைமை அபாயம். இச்சம்பவம் வல்வெட்டித்துறையில் நடந்தது. அப்படகில் ஆயிரம் ரூத்தலுக்கு மேல் மீன் இருந்ததாம்.

ஏன் சுட்டார்கள்? துப்பாக்கி பிடித்த கை சும்மா இருக்காது என்பதற்காகவா? இன்றேல், அந்த மீனை "அபேஸ்" செய்யவா?

இத்துப்பாக்கி விளையாட்டைப் பருத்தித்துறை பா. உ. திரு. துரைரத்தினம் பாராளுமன்றத்தில் இவ்வாரம் வன்மையாகக் கண்டித்தார். தமிழரசுத் தந்தையும் இது பற்றி பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

விசாரணை நடை பெறுகிறதாம். விசாரணையின் விளைவு பற்றி நாம் கவலைப்படவில்லை. சிலருக்குத் தண்டனை விதிப்பதால் இப்பேயாட்டம் நின்றுவிடுமா?

கடற்றொழிலாளரைச் சுடுவது இது முதன் முறையன்று. அடிக்கடி மீன் பிடிப் படகுகளைச் சுடுகின்றனர். சில நாட்களுக்கு முன்பு ஆறு மீன் பிடித் தொழிலாளரைச் சுட்டுத் தள்ளினர்.

படகுகளில் கொண்டு வரும் மீன்களையும் வாரிக் கொண்டு போகிறார்களாம். "தோரமாலு" (அருக்கலா) என்னும் மீனில் அவர்களுக்கு அளவற்ற ஆசை. படகில் வரும் மீனைத் துப்பாக்கி கொண்டு வேட்டையாடுகின்றனர்.

இன்று கடற் றொழிலாளர் கடலுக்குச் செல்லவே அஞ்சுகின்றனர். கடற்றொழில் அபாயகரமானது. அதிலும் துப்பாக்கிக் குண்டுக்கு வேறு பலியாக வேண்டுமானால் தொழில் செய்வதெப்படி? மீன் பிடித் தொழில் பாதிக்கப் பட்டுள்ளது. அத்தொழிலை நம்பி வாழும் குடும்பங்களின் கதி யென்ன?

மீன் உணவு பதார்த்தங்களில் முக்கியமானதொன்று. இலங்கை கடல் சூழ்ந்த நாடு. கடற்றொழிலை நவீன முறையில் விருத்தி செய்தால் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க உதவும். ஆனால் இங்கு நடப்பதென்ன? இராணுவக் கெடுபிடியால் தொழில் நாசமாகிறது.

கள்ளக் கடத்தலைத் தடுக்கக் கடற்படை—கள்ளக் குடியேற்றத்தை ஒழிக்கக் காவல் நிலையம், என்றெல்லாம் கூறி வட இலங்கையில் இராணுவத்தைக் குவித்துள்ளனர். அந்த இராணுவச் செலவோ நாட்டின் பொருளாதாரத்துக்கு வெடி வைக்கிறது.

வட இலங்கையில் படை பலத்தைப் பெருக்கும் காரணம் பகிரங்க இரகசியம். மக்களை மிரட்டப் படை பயன்படும். உரிமைப் போரை நசுக்கவும் அதனைப் பயன்படுத்தலாம். எனவே கள்ளக்கடத்தலைத் தடுத்தல் என்பது உண்மையை மறைக்கும் ஒரு போர்வை.

கடற்படையினர் கள்ளக் கடத்தலையா தடுக்கின்றனர்? வெறும் கண் துடைப்பு. இக் கடத்தல் தொழிலில் பெரும் புள்ளிகள் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள். அமைச்சர்களின் அடிவருடிகள். அமைச்சர்கள் வட இலங்கைக்கு வரும்போதெல்லாம் வரவேற்பு உபசாரம் நடத்துபவர்களும் அவர்களே!

ஒரு பக்கத்தில் அமைச்சர்களுக்கு விருந்துபசாரம்—மறுபக்கத்தில் கள்ளக் கடத்தல். இரண்டும் ஏக காலத்தில் நடைபெறுகின்றன. உடுப்பிட்டி பா. உ. திரு. சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் இந்த இரகசியத்தை அம்பலப்படுத்தி விட்டார். அப் பெரும் புள்ளிகளின் கடத்தலைத் தடுக்க கடற்படைக்குத் திராணியுண்டா? அப்பாவி மக்களை மட்டும் சுட்டுத் தள்ளி கைவரிசை காட்டுகிறார்களே!

வட பகுதியில் இராணுவ நடமாட்டம் எதற்கு? அது சிங்கள ஆட்சியாளர் ஆக்கிரமித்த பிரதேசமா? ஆக்கிரமிப்புப் படைகளைப் போலல்லவா அவர்கள் அட்டகாசம் செய்கின்றனர். இக் கெடுபிடிகள் ஏன்?

வட இலங்கையில் இராணுவ நடமாட்டம் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும். வெறுப்பு உணர்ச்சியைக் கிளறி விடும்.

இராணுவத் துப்பாக்கிப் பிரயோகம் மக்களின் ஆத்திரத்தைத் தூண்டியுள்ளது. கொதிக்கும் உள்ளங்களுக்கு ஆத்திரமூட்டினால் விளைவு விபரீதமாகலாம். இராணுவ அட்டூழியங்களை மக்கள் என்றும் சகித்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணுவது தவறு. ஆத்திரத்தைக் கிளறி விடும் நடவடிக்கை ஆட்சியாளருக்கு நன்மை பயக்காது.

மிரட்டல் இனிப் பலிக்காது. கடற்றொழிலாளரைச் சுடும் அட்டூழியத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். வடபகுதியிலுள்ள படைகளை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றவேண்டும். இராணுவ முகாம்களை மூடி விட வேண்டும். மக்களின் அமைதியான வாழ்வுக்கு வழிகோல வேண்டும்.

கள்ளக் கடத்தல் தடுக்கப்பட வேண்டும். அதற்குத் தான் சுங்க இலாகா இருக்கிறதே! கள்ளக் குடியேற்றம் தடுக்கப்பட வேண்டும். அதைத் தான் பொலிஸ் படை செய்யலாமே! பொலிஸ் காவற் படையும், சுங்க இலாகாவும் சேர்ந்தால் எத்தகைய கடத்தலையும் தடுத்து விடலாமே! இராணுவம் எதற்கு?

கள்ளக் குடியேற்றக் காரர்கள் குண்டு, துப்பாக்கி சகிதம் இலங்கை மீது படையெடுக்கிறார்களா? அவர்கள் ஆயுதம் கொண்டு வந்தாலும் கூட அவர்களைச் சமாளிக்க பொலிஸிடமுள்ள ஆயுதங்கள் போதாதா என்ன?

கள்ளக்கடத்தல் இலங்கையில் மட்டுமா நடைபெறுகிறது? இதர நாடுகளில் இல்லையா? இந்தியாவிலும் தான் கள்ளக் கடத்தல் நடைபெறுகிறது அதைத் தடுக்க அங்கெல்லாம் இராணுவத்தையா ஏவிவிடுகிறார்கள்?

கள்ளக் கடத்தல் என்ற பெயரால் அமைதியான மக்களைச் சுட்டுத்தள்ள இனியும் அனுமதிக்க முடியாது. அரசாங்கம் கடற்படையை உடனடியாக அங்கிருந்து அகற்ற வேண்டும்.

வட இலங்கையில் யுத்தமும் இல்லை. படையெடுப்பும் இல்லை. அங்கு இராணுவமும் வேண்டாம்!

# சுதந்திரனை நசுக்க மற்றோர் உபாயம்

## விளம்பரதாரர்களை மிரட்ட கையாளும் நரித்தந்திரம்

"அரசியல் ஞானமற்றகுருட்டுத் தமிழ்மக்களிடம் வகுப்புவாத உணர்ச்சிகளைத்தூண்டி விடுவதற்கும், மதிப்புவாய்ந்த அரசாங்கத்தையும், மதிப்புக்குரிய சிங்களத்தலைவர்களைத் திட்டுவதற்கும், சமாதானம் விரும்பும் சிங்களப்பொதுமக்களைத் தாக்கவும் வெளி வந்து கொண்டிருக்கும் 'சுதந்திரன்' பத்திரிகையைக் கைப்பற்றி, அதற்கு ஆதரவளிப்பவர்களைக் கண்காணிக்க வேண்டும்" என்று பிரதம மந்திரிக்கும், சில மந்திரிமார்களுக்கும், சில இலாகாத் தலைவர்களுக்கும், இரு எம். பிக்களுக்கும், திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமிக்கும், விளம்பரதாரர்களுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

இத்தகைய செயலை சிங்களவர் எவரும் செய்யவில்லை. சுதந்திரனில் முன்பு தொடர்பு கொண்டுழைத்தவர்களாலேயே இநநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. விளம்பர தாரர்களை மிரட்டுவதே இச் சுற்று நிருபத்தின் நோக்கம் என ஊகிக்கலாம்.

'சுதந்திரன்' பத்திரிகை ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளைக் கடந்து மீண்டும் புதுப் பொலிவுடன் நாட்டில் வலம் வருவதைக் கண்ட சில பொறாமைப் புல்லுருவிகளும், நயவஞ்சக நச்சுப் பாம்புகளும், காட்டிக் கொடுக்கும் 'கனவான்'களும்; பதவிப் பித்தேறி பண்பிழந்தவர்களும் தங்கள் நச்சு வலையை விரிக்கின்றனர்.

### என்றுமே பின்னின்றதில்லை

நேர்மையை, நீதியை, நிலையான கொள்கையை தமிழ் பேசும் மக்களுக்கு போதித்து வருவதுடன், அவர்கள் செல்லவேண்டிய பாதையை செம்மையாக்கிக் கொடுக்கும் பணியினை சுதந்திரன் செய்து வருகிறது. இதே வேளையில் குறுக்குப் பாதையிலே செல்வோரையும், கோணல் புத்திக்காரரையும் காட்டிக் கொடுத்துக் காலாட்சேபம் செய்யும் கயவர்களையும், பதவி ஆசை கொண்டு, பண்பைத் துறந்து பகல் வேஷம் போடும் எத்தர்களையும் சந்திக்குக் கொண்டுவந்து சவுக்கடி கொடுப்பதற்கும் சுதந்திரன் என்றுமே பின்னின்றதில்லை.

தங்கள் சுய உருவம் 'சுதந்திரன்' மூலம் வெளியாகி விடுகின்றதே, சாயம்வெளுக்கிறதே என்று ஏங்கித்தவிக்கும் எத்தர் கூட்டம் சுதந்திரனை ஒழித்துக்கட்டி விடக் கங்கணங்கட்டிக் கொண்டுள்ளது எத்தனையோ வழி வகைகளைக் கையாண்டனர், சுதந்திரனின் சேவையை முறியடிக்க. தோல்வியைத் தவிர வேறு எதையும் அவர்கள் காண முடியவில்லை.

மக்கள் மத்தியிலே மங்காத ஒரு இடத்தைப்பெற்று வளர்ந்து வருவது சுதந்திரன். தமிழ் பேசும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது சுதந்திரன். தமிழ் பேசும் மக்களுக்காக தன்னுடைய தன்னலமற்ற சேவையை அளித்துவருவது சுதந்திரன். எந்த நிலையிலும் தமிழ்பேசும் மக்கள் சுதந்திரனைக் கைவிடப் போவதில்லை.

### பச்சோந்திப் புரட்டர்கள்

இத்தகைய சுதந்திரனின் சேவையை ஒழித்துக் கட்டி விட, தமிழ் பேசும் மக்களுக்குள்ளேயே உள்ள சில தறுதலைகள் முயன்று வருகின்றனர். காலத்துக்குக் காலம் கொள்கையை மாற்றிக் கொண்டு காக்காய் பிடிப்பவர்கள்; வேளைக்கு வேளை வெள்ளைச் சால்வையைப் பச்சையாகவும், பச்சையை அவசிய மேற்படும்போது நீலமாகவும் மாற்றிக் கொள்ளும் புரட்டர்கள்தான் இவர்கள் என்பதை தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிவார்கள்.

'சுதந்திரன்' பத்திரிகை செய்து வரும் சேவையைக் கண்டு பொறாமை கொண்ட மேற்குறிப்பிட்ட ஒருவர் பி. ஜே. அலோசியஸ் என்று கையெழுத்திட்டு பம்பலப்பிட்டி எல்பின்டேல் அவெனியூ என்றுவிலாசமிட்டு ஒரு சுற்று நிருபத்தை பிரதமருக்கும், இரண்டு பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் விளம்பரம் கொடுக்கும் சில வியாபார ஸ்தாபனங்களுக்கும், மற்றெருருவருக்கும் அனுப்பி வைத்துள்ளாராம்.

குறிப்பிடப் பட்டுள்ள முகவரியில் கையொப்பமிட்ட எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. இது போன்ற கடிதங்கள் மந்திரிமார் எவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. சில அதிகாரிகளை விசாரித்ததில் இப்பேர்ப்பட்ட சுற்று நிருபம் தமக்குக் கிடைக்கவில்லையெனவும், அத்தகைய மொட்டை நிருபம் கிடைப்பின் 'குப்பைக் கூடை' இருக்கவே இருக்கிறது என்றும் கூறினர்.

### விளையாட்டுப் பிள்ளைகளல்ல!

சுதந்திரனுக்கு விளம்பரம் கொடுக்கும் வியாபார ஸ்தாபனங்களில் சிலரிடம் விசாரணை செய்தபோது, அவர்களும் மேற்கண்டவாறே கூறினர். வியாபார விற்பன்னர்களை விளையாட்டுப் பிள்ளைகளாகக் கருதிவிட்டனர் போலும். அவர்கள் அறிவில் தேர்ச்சி பெற்றவர்கள். ஒரு பொருளை ஒரு பத்திரிகையில் விளம்பரம் செய்வதனால் ஏற்படும் நன்மை தீமைகளை நன்கு உணர்ந்தவர்கள். புல்லுருவிகள் சிலரின் வெல் வெருட்டுகளுக்கு மசிந்து தங்கள் வியாபார நிலையங்களை மூடி விட்டுவிடுவார்கள்—அங்கே போய் நமது பெருச்சாளி வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று வீண் கனவு காண்கின்றனர் இந்த வீணர்கள்.

பத்திரிகைகள் எத்தகையதாக இருப்பினும் தங்கள் வியாபாரப் பெருக்கத்தை விரும்பிய ஸ்தாபனங்கள் விளம்பரம் கொடுப்பதுண்டு. தமிழ் பேசும் மக்களிடம் சிறந்த செல்வாக்குப் பெற்று விளங்கும் சுதந்திரன் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுப்பதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் மன்றத்தில் தங்கள் வியாபாரப் பொருட்கள் விளம்பரமாகின்றன என்பதை நன்கு உணர்ந்தவர்கள், வர்த்தகர்கள்.

### சிபார்சு வேண்டியதில்லை

அரசாங்கத்தை எதிர்த்தெழுதும் பத்திரிகைகள் நாட்டில் பல உள. ஏரிக்கரைப் பத்திரிகைகள், 'டைம்ஸ் ஒப் சிலோன்' ஸ்தாபனப் பத்திரிகைகள் யாவும் அரசாங்கத்தின் செயல்களை அடிக்கடி ஆணித்தரமாகக் கண்டிக்கத்தான் செய்கின்றன. அத்தகைய பத்திரிகைகளை ஒடுக்கவே அரசாங்கம் சட்டங்கள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதை, யாவரும் அறிவர். அதற்காக எந்த வியாபார ஸ்தலமாவது மேற்படி பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்க மறுக்கவில்லை.

சுதந்திரனைப் பொறுத்தவரையில் நடுவு நிலை கோணாது, அநீதியை எடுத்துக்காட்டி அவ்வப்போது கண்டிக்கத் தவறியதில்லைத் தான், தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அவ்வப்போது துணிவுடன் கண்டித்து வந்துள்ளது. எதையும் ஒளிவுமறைவின்றி எடுத்துரைத்து வந்திருக்கிறது சுதந்திரன். இது பற்றி அரசாங்கமே நன்கு அறியும். சுதந்திரனில்வெளியாகும் கருத்துக்களை சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்து அமைச்சர்கள், அதிகாரிகள் அனைவரும் படித்து வருகிறார்கள். அப்படியிருக்க 'சுதந்திரனி'ன் போக்கு பற்றிய சிபார்சு தேவைப்பட நியாயமில்லை.

### சம்பந்தமில்லாத ஒரு கனவான்

சில மந்திரிமார்கள், சில அரசாங்க அதிகாரிகள், இரு பாராளுமன்றப்பிரதிநிதிகள் ஆகியவர்களுடன் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி என்பவருக்கும் மேற்படி சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினரல்ல. அவருடைய பெயர் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டது பெரிதும்விந்தையான ஒரு செய்கையாகும். அவருக்கும், இச் சுற்று நிருபத்தை அனுப்பியவர்களுக்குமிடையில் நெருங்கிய உறவு உண்டு என்பது இத்தால் புலனாகின்றது.

### அடக்கிவிட முடியாது

1958ம் ஆண்டு சுதந்திரன் ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு இலக்காக்கி ஆறு மாதங்கள் வெளிவர முடியா

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமைக்கு வித்திட்ட உத்தமர்

## அமரர் வன்னியசிங்கம்

### மட்டக்களப்பு கோப்பாய்க் கோமான் அரங்க விழாவில் சொற்பொழிவுகள்

(மட்டக்களப்பு நிருபர்)

**தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தான பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற உள்ள ஒரே இயக்கம்தான் தமிழரசுக் கட்சி. தமிழரசுக் கட்சியின் இயக்கம் வெற்றியடைய மிகவும் அத்தியாவசியமானது தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதுதான் என்பதை உணர்ந்து, வட-கிழக்கு மாகாண மக்களின் ஒற்றுமைக்கு வித்திட்டு, ஒற்றுமை வளர அயராது உழைத்தவர் அமரர் வன்னியசிங்கம்.**

மட்டக்களப்பு கோப்பாய் கோமான் அரங்கத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற அமரர் வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்த விழாவில் தமிழரசுத்தந்தை திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

#### ஊர்வலம்

அரசடிச் சந்தியில் இருந்து, அமரர் வன்னியசிங்கத்தின் திருவுருவப் படம் மூவர்ண மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, இசை வேளாளர் மன்றத்தின் மேள வாத்தியத்துடன், மட்டு நகர் பிரதான வீதிகளினூடாக ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. கோப்பாய்க் கோமான் அரங்கச் செயலாளர் திரு, சாமி- முருகமூர்த்தி, திரு. வ. பாலசிங்கம் அவர்களின் பெரு முயற்சியினால் கோலாகலமாக நடைபெற்ற இம்மாபெரும் ஊர்வத்தில் தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், செனட்டர் மு. மாணிக்கம், பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம், கல்குடா எம். பி. திரு. பி. மாணிக்க வாசகர், மூதூர் எம். பி. ஜனுப். முகமதலி ஆகியோர் உட்படப்பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பாட்டாளி புரத்தில், மூவர்ணக் கொடிகள் கம்பீரமாகப் பறக்க விடப்பட்டிருந்த, கோப்பாய்க் கோமான் அரங்கப் பந்தலில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசியதாவது:—

இலங்கையில் வட கிழக்கு மாகாணங்களில் தான் மிகக் கூடுதலான தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இரண்டாவது அதிகக் கூடுதலான தமிழ் பேசும் மக்கள் கிழக்கு மாகாணத்தில் வாழ்கிறார்கள். இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தவர்கள் தனித்தியங்கி வெற்றிபெற முடியாது. அதே போல இலங்கையின் மிகக் கூடுதலான தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற வட மாகாணத்தவர் கூட தனித்தியங்கி வெற்றி பெற முடியாது. ஆகவே நம் இயக்கம் வெற்றி பெற முதலில் வேண்டியது ஒற்றுமையாகும். தமிழ் பேசும் மக்கள் ஒன்று பட்டு, தமிழரசுக் கட்சியில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து, தமது ஒத்துழைப்பைக் கொடுத்து தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போருக்கு உதவ வேண்டும்.

#### ஈழத்து விவேகானந்தர்

தமிழரசுக் கட்சியின் தலைவரும், பட்டிருப்பு எம் பி. யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:—

பகவான் இராமகிருஷ்ணரின் போதனைகளை, சுவாமி விவேகானந்தர் எவ்வாறு அமெரிக்க நாட்டில் பரப்பி, இராமகிருஷ்ணரின் கொள்கைகளை மக்கள் மனதில் ஊறவைத்தாரோ அதே போல, அமரர் வன்னியசிங்கமும், தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக் கொள்கைகளை ஈழத்தில் குறிப்பாக வடகிழக்கு மாகாண மக்களிடையே போதித்து, மக்கள் மனதில் தமிழரசுக் கொள்கைகளை ஊறவைத்தார். எத்தனையோ இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் சிறிதுமே மனம் சளைக்காமல், மென்மேலும் உற்சாகத்துடன் கட்சிக்காகவும், தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் விசுவாசத்துதன் திரு. வன்னியசிங்கம் செயல் புரிந்தார். அவரது எண்ணம் வெற்றியடைய அவர் விட்டுச்சென்ற பாதையில் தொடர்ந்து செல்வோம்.

#### மொழியால் ஒன்றுபட்டவர்கள்

மூதூர் முதலாவது எம். பி. ஜனுப் முகமதலி பேசியதாவது:—முஸ்லிம் மக்களும் சமயத்தால் வேறுபட்டவர்களானாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். தமிழ் மொழிக்கு ஏற்படுகின்ற ஆபத்து தமிழர்களை மட்டும் பாதிக்கப் போவதில்லை. தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் தான் பாதிக்கும். ஆகவே முஸ்லிம் மக்களும் தமிழரசுக் கட்சிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டியது அவசியம். 'சமஷ்டி' என்றால் நாட்டைப் பிரிப்பது என்று தவறான ஒரு பிரசாரத்தை நமது அரசியல் விரோதிகள் முஸ்லிம் மக்களிடையேயும் பரப்பி வருகிறார்கள். நமது அரசியல் விரோதிகளின் இத்தகைய சூழ்ச்சிகளுக்கு முஸ்லிம்கள் இடமளித்தால், முஸ்லிம்களின் எதிர்காலம் மிகவும் ஆபத்தாகவே அமையும்.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி செ.இராசதுரை, திரு. வ. பாலசிங்கம், மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம், திரு. செ. பத்மநாதன், செனட்டர் மு.மாணிக்கம், கல்குடாப் பிரதிநிதி திரு. பொ. மாணிக்கம் உட்படப் பல பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர். திரு. இரா. பத்மநாதன் நன்றியுரை கூறினார்.

கோப்பாய் கோமகன் அமரர் வன்னியசிங்கத்தின் திருவுருவப்படத்தை வரைந்தளித்த கலைஞர் குமார் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

#### பொன்னாடை

இலங்கையில் பலபாகங்களுக்கும் சென்று தங்கள் நகைச்சுவை வில்லுப்பாட்டினால் புகழீட்டி மீண்ட மாஸ்டர் சிவலிங்கம் குழுவினருக்கு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் பொன்னாடை போர்த்தினார்.

---

## தமிழ் தந்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிட்டு வைத்திருக்கின்றனர். ஆனால் தமிழ் பேசும் மக்கள் அதனைப் பயன்படுத்துவதில்லை. தமிழ்ப் பாரங்களைக் கேட்டு வாங்குவதுமில்லை.

ஆங்கிலப் பாரங்களையே கேட்டு வாங்கிப் பயன்படுத்துகின்றனர். தமிழ் பேசும் மக்களே தமிழ்ப் பாரங்களின் மீது இம்மாதிரி வெறுப்பைக் காட்டினால், ஆங்கிலப் பாரங்களுக்கு ஆதரவு நல்கினால், தமிழ் மொழி எப்படித்தான் வளரும்?

தமிழ் பாரங்களைத் தமிழ் பேசும் மக்களே உபயோகிக்கத் தவறியதால் மீண்டும் தமிழ்ப் பாரங்களை அச்சிடாதிருக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதில் ஆச்சரியமென்ன? அதனை நாம் எப்படித்தான் ஆட்சேபிக்க முடியும்?

இத்தகைய மனோபாவத்தைத் தமிழ் பேசும் மக்கள் மாற்றிக் கொள்ளவேண்டியது அவசியமாகும். தமிழ் மொழியை உபயோகிக்க வாய்ப்புகிடைத்தபோதெல்லாம், வசதிகள் கிடைத்த போதெல்லாம் அதனை உபயோகிக்கத் தயங்கக்கூடாது.

---

## தமிழ்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரராஜா அவர்களும் அழைக்கப்படவிருந்தாராம்.

இந்த நிலையில் கல்லூரி அதிபர் திடீரென்று தடைவிதித்து விட்டாரென்று அறியப்படுகிறது. காரணம் கேட்டதற்கு 'அது உத்தரவு—கல்லூரியில் தமிழ் விழா நடத்த அனுமதி கிடையாது' என்று கூறிவிட்டாராம்.

இக் கல்லூரியை அரசாங்கம் மேற்கொண்ட பிறகு தான் தமிழ் விழாவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொண்டதால், பாடசாலைகளில் தமிழ் மொழி எவ்வாறு நசுக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

---

## சுதந்திரனை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. 1961ம் ஆண்டிலும் ஒரு வருடம் சுதந்திரனின் குரல் ஒலிக்கவில்லை. சுதந்திரனை ஒழித்துக்கட்ட ஆட்சியாளர்கள் முயற்சி எடுத்தும் முடியவில்லை.

சின்னத்தனங்களினாலும், சிறுமதியினாலும், சூழ்ச்சிகளினாலும், சதித்திட்டங்களினாலும் தமிழ் பேசும் மக்களின் அபிமானம் பெற்ற சுதந்திரனை வீழ்த்திவிட முனையும் துரோகக் கும்பலின் செய்கைகள் எந்த வகையிலும் பயனளிக்கப் போவதில்லை என்பது உறுதி. மேலும் மேலும் இத் தீச் செயல்களுக்கு வித்திடுபவர்கள் மக்கள் மன்றத்தில் மத்தியில் நிறுத்தி மானபங்கப்படுத்தப்படுவார்கள் என்பது திண்ணம்.

---

## பாலுடன் எனக்கு பழந்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அக்கிரமங்களை எல்லாம் பொறுத்து வாழலாமா நாம்? ஒவ்வொரு கணமும் சாவதை விட ஒரேயடியாக இறப்பது மேல். என்னைப் பெற்றெடுக்க நீ எத்தனை தியாகங்களைச் செய்தாய்? பத்து மாதம் சுமந்தென்னைப் பெற்றெடுக்கப்பட்ட பாடுதான் கொஞ்சமா? என்னை ஈன்றெடுத்த அந்த வேளையிலே சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராடினாய். அந்த ஜீவ மரணப் போராட்டத்தின் முடிவிலே, "குவா குவா" என்ற எனதழுகுரல் கேட்டது. நீ பட்டபாடெல்லாம் மறந்து மகிழ்ச்சியோடு முக மலர்ந்தாய், நீ செய்த தியாகங்களையெல்லாம் தியாகமாகவே கருதவில்லை. உனது பிறவிப் பயனாகவே எண்ணினாய்.

#### இன்முகம் காட்டி வழி அனுப்பு

இது போன்ற ஒரு ஜீவ மரணப் போராட்டத்திலே தான் இன்று எமது சமுதாயம் இருக்கிறது. இதில் ஈடுபடுவதை நான் எனது பிறவிப் பயனாகவே கருதுகிறேன். பெற்றெடுத்த என்னை நீ எப்படிப் பேணி வளர்த்தாயோ, அது போலவே நாமும் பெற்றெடுக்கும் விடுதலையைக் கருத்துடன் காப்பாற்றி வளர்க்க வேண்டும்.

விளையாட்டுப் பருவத்திலே வீரத்தாய் கதைக்கு விளக்கங் கூறுவாயே? அந்த வீரத்தாய் போல எனக்கு விடை கொடு தாயே! இன விடுதலைக்காக புறப்படும் எனக்கு இன்முகம் காட்டி வழி அனுப்பு. ஐந்து வருடத்திற் கொருமுறை பந்து போல் எமது விதி உருட்டப் படுவதையும், எவர் வருவார் பதவிக்கு? எமக்கு விடிவு ஏற்படுமா? என்று ஏங்கி நிற்கும் பரிதாப நிலையையும் மாற்றிவிட நடத்தப்படும் போராட்டத்திற்குப் போகுமெனக்குப் பூரிப்புடன் "போய் வா மகனே" என்று கூறம்மா!

இங்ஙனம்,
உனது அன்பின் மகன்,
அறிவழகன்.

---

## ஊதிய உயர்வு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாளர்கள் எம். திருச்செல்வம் கியூ. சி., சி. இரங்கநாதன், ஜி. ரி. சமரவிக்கிரம எஸ். சர்வானந்தர் ஆகியோர் வழக்கறிஞர் லூசியஸ் பெரேராவின் அனுசரணையுடன் ஆஜராவார்களென்று அறியப்படுகிறது.

---


**ஆங்கிலம்**
**ENGLISH**

ஆங்கிலப் பாஷையைச்
சிறப்பாக
* பேச
* வாசிக்க
* எழுத

மிகக் குறுகிய காலத்துள் கற்றுக்கொள்ள இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

**அற்லஸ் ஹோல்,**
723, மருதானை ரோட்,
கொழும்பு-10.


### விற்பனையாளர்கள் கவனத்துக்கு

சுதந்திரன் விற்பனையாளர்கள், தற்போது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையில், மாற்றம் செய்ய விரும்பினால், அதை ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைக்கு முன்பதாக எமக்கு தெரிவித்துவிட வேண்டும்-அதற்குப்பின் வரும் அறிவிப்புகள் மறுவாரம் தான் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். —நிர்வாகி


**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பற்றும் பாசமும்



வீர வாள் கொண்டு மினுங்கும் ஈட்டி கொண்டு அக்குரோணிக் கணக்கான பகைவரையும், கூரிய கொம்புகளையுடைய மத யானைக் கூட்டத்தையும் புறங் கண்ட தமிழன்— ஆம்! அந்த வீர பரம்பரையின் நேரடி வாரிசாக வந்தவன்- வேல்,கொள்ளவில்லை —வாள் கொள்ளவில்லை— கவசம் கொள்ளவில்லை — வெடி குண்டுகள் வருமேயென்று அச்சமும் அவன் கொள்ள வில்லை! சரித்திரங்கள் கூறும் தமிழர்தம் தன்மான உணர்ச்சியை— வீர எழுச்சியை இந்த இருபதாம் நூற்றாண்டிலே உலகம் முழுவதுமே கண்டது!

சரித்திரத்திலே சாகா வரம் பெற்ற அந்த ஐம்பத்தேழு நாட்கள் நடந்த இன விடுதலைப் போராட்டத்திலே ஒரு நாள்......—

யாழ்ப்பாணக் கச்சேரி முன்றிலில் நடந்த மறியல் இயக்கத்திற் பங்கு பற்றுவதற்காக யாழ்ப்பாணத்தின் ஏழு தீவுகளிலுமுள்ள மக்கள் திரள் திரளாகச் சென்றனர். தீவு மக்களின் விசேடமான நாள் அது கோலூன்றும் 'குடு குடு' கிழவர் கிழவிகள்— குமரர் குமரிகள் — ஏன், பச்சிளம் பாலகர்கள் கூட— வீடுகளிலே மீதியின்றிப் படையெடுத்தனர். 'தோள் கண்டோர் தோளே கண்டார்' என்ற கம்பராமாயணப் பாடலுக்கும் அடங்காதபடி ஒரே மக்கள் வெள்ளம்!

எது எப்படி இருப்பினும் நெடுந்தீவுப் பிரயாணம் ஒரு தனி ரகம்! நாற்பது பேரை மட்டும் ஏற்றிச் செல்லும் 'சில்வர் ஸ்பிறே' என்ற இயந்திரப்படகு ஒரு சிறு காற்றடித்தாலும் ஓடுவதற்கு விதண்டாவாதம் செய்யும். இருப்பினும் 'அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்' என்பது போல் நெடுந்தீவு மக்களுக்கு அதைவிட தஞ்சம் வேறில்லை.

வழக்கம்போன்ற நாளென்றால் 'சில்வர் ஸ்பிறே' ஒரு விதமாகச் சமாளித்திருக்கும். ஆனுல் அன்று அப்படியல்லவே! தமிழர் தம் உரிமைக் குரலை— உயிரினும் மேலாகப் போற்றும் தாய் மொழிப்பற்றை என்னதான் தடுத்து விடும்? எந்த அசுர சக்தி தான் அடக்கிவிடும்.

பாய் வள்ளம், வத்தை. கட்டுமரம், இயந்திரப்படகுகள் ஆகிய சாதனங்களை முன்னேற்பாட்டின் படி ஒழுங்கு செய்து நெடுந்தீவுக் கடலை, மக்கள் கடக்கச் செய்வதிலே மும்முரமாக ஈடுபட்டிருந்தான் மனோகரன். இன்னும் சிலரும் ஏற வேண்டியது தான் பாக்கி! அந்த நேரந்தானு சுகவீனமாயிருக்கும் அவனது பாட்டியின் நினைவு வரவேண்டும்? அவன் மீது தன் உயிரையே வைத்திருக்கும் அந்த முதிர்ந்த சீவனை — சிங்கள ஆட்சியின் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை மறுப்பதற்கு இன்றோ நாளையோ என்றிருக்கும் அந்தத் தமிழ்க் குலத்தாயை கடைசியாக ஒரேயொரு முறை பார்த்துவிட வேண்டுமென்று ஓடோடிச் சென்றுன். இன விடுதலைப் போராட்டத்திலே கலந்து கொள்ளும் அவன் சில சமயம் தன் அற்ப உயிரைக் கொடுக்க வேண்டி வந்தால் அவனை வளர்த்துப் பெரியவனுக்கிய பாட்டியைக் காண முடியாதென எண்ணி விட்டான் போலும்!

"பாட்டி, பாட்டி......"வீட்டினுள் நுழையும் பொழுதே அன்பாகக் கூப்பிட்டான்.

"ராசா...... வந்திட்டியா எங்கே உன்னைப் பாராம போயிடுவேனே எண்டு பயந்திட்டன்"

"என்ன பாட்டி அப்படிச் சொல்லுருய்? நீ எங்க போகப் போருய்!"

"இல்ல ராசா எனக்கு மேல இருந்து அழைப்பு வந்திட்டுது..."

"பாட்டி......! பேசாதே பாட்டி அப்படி'..."

"நீ அப்படித் தான் சொல்லுவாய்......" முனகினுள்.

"பாட்டி... மனதை அலட்டிக் கொள்ளாமல் இருந்து கொள். உனக்கு ஒன்றுமே வராது. நேரமாயிட்டுது. எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாங்க. 'நான் போயிட்டு வாறன் பாட்டி"

"ம்... ம்... ராசா, எனக்கு என்னவோ ஒரு மாதிரியாக இருக்குது. உன்னுடைய அம்மா போய்த்தானே இருக்கிருள்' நீயும் போகவா வேணும்? என்னோடு நில்லேன்"

"பாட்டி... நான் கட்டாயம் போகத்தான் வேண்டும். என்னைத் தடுக்காதே பாட்டி. தங்கச்சி இருக்கிருள் தானே. அவள் உன்னைப் பார்த்துக் கொள்ளுவாள்." எழுந்தான் மனோகரன்.

அவனது பிடிவாதத்தை அவளுக்குத் தெரியாதா என்ன! தலையைக் குனிந்து கொண்டே முனகினுள். என்னதான் செய்ய முடியும் அவளால்? தழுதழுத்த குரலில் 'ம்... சரியப்பா போயிட்டு வா'. கூறும் பொழுதே வெளிவந்த இரு கண்ணீர்த் திவலைகளைத் தன் பேரனுக்கு அவள் காட்டிக் கொள்ளவில்லை.

"வரேன் பாட்டி" திடீரென எழுந்த அவனது உச்சியில் 'படார்' என்று வீட்டுத் தாவாரத்தின் 'வளை' அடித்தது. 'ஆ!... ஐயோ......' அவனைவிட அதிக வேதனை அடைந்தாள் பாட்டி. "ஒன்றும் நோகவில்லை பாட்டி. நான் போயிட்டு வரேன்"



தடுத்தால் நிற்கும் குணம் அவனுக்கு இல்லையென்று அவளுக்குத் தெரியுமாகையால் தடுக்கவில்லை. "காயம் பட்டுதா என்று பாரடா" கடிந்தாள்.

"ஒன்றுமில்லை. நான் போயிட்டு வரேன்"

ஓடிச்சென்று 'ரேட்கேட்'டைத் திறக்கும் பொழுது காலிலே கல்லொன்று அடித்தது. அதன் மூலம் சிந்தும் இரத்தத்தை அவன் கவனிக்கவில்லை. வெளியே வெற்றுக் குடத்துடன் ஒரு பெண் சென்று கொண்டிருந்தாள். இவ்வபசகுணங்களொன்றும் அவன் கண்ணுக்குப் பட்டதாய்த் தெரியவில்லை. அவனது குறிக்கோள் ஒன்று மட்டுந் தான் எண்ணத்தில்!

விரைந்து சென்றுன் கட்டுமரம் நின்ற கடற்கரைக்கு.

அங்கே... கட்டுமரத்தைக் காணவில்லை! 'பகீர்' என்றது. தலை சுற்றுவது போன்று ஏற்பட்ட ஒருபிரமையையும் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தான். கட்டுமரம் இரண்டு மைல்களுக்கப்பாற் சென்று கொண்டிருந்தது. வாயில வந்த உமிழ் நீரை விழுங்கிக் கொண்டு சத்தமிட்டான். முழங்காலை மறைக்கும் நீரலையில் இறங்கி நின்று கத்தினுன். தொண்டை அலறும் வரைக்கும் கத்தினுன். பலனில்லை.

அழுதுவிட வேண்டும் போலிருந்தது. சிந்திக்கச் சக்தியற்றவனுய் அங்குமிங்கும் நடந்து விட்டு வேறேதாவது கட்டுமரம் கிடக்கின்றதாவெனத் தேடினுன், கிடைக்கவில்லை.

சபலம் தட்டியபோதும் அதற்கு இடம் கொடுக்க அவன் தயாராக இல்லை. வீட்டுக்குத் திரும்புவதிலுள்ள அவமானம்! சத்தியாக்கிரக இயக்கத்திலே மறுநாட் காலையாவது பங்கு கொள்ள வேண்டுமென்ற ஆவேசம்! உலைக்காற்றுப் போல் மூச்சு வந்தது. மார்பு ஏறி இறங்கியது. கண்கள் திரண்டன. உருண்டன. சிவந்தன. பற்கள் 'நறு நறு' வென்றன, நவரத்தினசாமியின் நினைவு! அவரும் ஒரு தமிழன் என்ற பெருமை! 'ஆறேயாறு மைல் தானே' கைகள் தாமாகவே சட்டையைக் கழற்றின! கட்டியிருந்த வேட்டியைக் 'கொடுக்காகக்' கட்டினுன். அடுத்த விநாடி... கைகளும் கால்களும் இயந்திரம் போல் வேலை செய்தன. நீந்திக் கொண்டிருந்தான்!

சிங்களத் தீவிரவாதிகளின் அநியாயங்கள் போன்று அடுக்கடுக்காய் வந்த அலைகளைத் துச்சமாக மதித்தான். நெஞ்சத் துணிவென்ற கவசத்தில் மோதிய அலைகள் 'கோ' வென்று அலறிக்கொண்டு இருபக்கமும் விழுந்தடித்துக் கொண்டு ஓடின.

அரைவாசிக்கு மேற்பட்ட தூரத்தைக் கடந்த பின் எதிரே வந்து கொண்டிருந்தது இலங்கை கடற்படையைச் சேர்ந்த இயந்திரப் படகொன்று. அதையிட்டு அவன் மனதிலே எந்தவித சலனமும் ஏற்படவில்லை. கைகளும் கால்களும் அவனுடைய எண்ணத்திற்கு துரோகமின்றித் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன. இன்னமும் ஒன்றரை மைல்கள் தாம் போகவேண்டிய தூரம்...... அவனை நெருங்கி விட்டது 'டீயக்காவா' என்ற இயந்திரப்படகு! மனோகரன் இடை நீரில் நின்றுன். ஆச்சரியம் மேலிட்டவர்களாய் வாயைப் பிளந்தோர் சிலரும், சந்தேகக் கண் கொண்டோர் சிலருமாகப் பார்த்துக் கொண்டு நிற்க நூலேணியொன்றைப் படகினின்று இறக்கி 'நகிண்ட' என்றுன் ஒருவன். புன்முறுவலுடன் அலட்சியமாகப் பார்த்துக் கொண்டு நின்ற மனோகரனுக்கு, அவன் 'நகிண்ட 'என்று சொன்னதைத் தொடர்ந்து 'கல்ல தோனி பன்டி' என்றது ஒரு கணம் திகைப்பை உண்டு பண்ணியது. அடுத்த விநாடி அது ஆத்திரமாக மாறி 'பொத்தடா வாய்' என்று சொல்லி விழுங்கி விடுபவன் போல் அவர்களை ஒரு பார்வை பார்த்து விட்டுத் திரும்பவும் நீந்தத் தொடங்கினுன்.

'தம்பே! எங்கி தம்பே போறது? இங்க வா தம்பே! இங்கவா!' விரக்தியற்ற— விடுதலைத்தாகம் பொங்கிய —அவனது பார்வையும் துப்பாக்கி சகிதராய் நின்ற அந்தச் சிங்கள போர் வீரரின் மத்தியிலே 'பொத்தடா வாய்' என்று துணிகரமாகச் சொன்னதும் அவர்களை அடி பணியச் செய்து விட்டதோ என்னவோ'-தம்பே', என்று சிங்களத் தமிழில் அன்பு குழையக் கூப்பிட்டார்கள். இவர்கள் என்னதான் செய்து விடுவார்கள் என்ற எண்ணத்துடன் திரும்பி வந்து படகில் ஏறினுன். சுற்றி வளைத்துக் கொண்டு ஏதோ நூதனப் பொருளைப் பார்ப்பதுபோற் பார்த்தார்கள்.

"எங்க தம்பே போறது?" தெள்ளு தமிழ் விளையாடியது.

"சத்தியாக்கிரகத்திற்கு!"

"சத்தியாக்கிறகத்திக்கு?" ஒரே குரலில் எல்லோரும் கேட்டனர்.

"ஆச்சரியப்படாதிர்கள். சத்தியாக்கிரகத்திற்குத் தான் போகின்றேன். நெடுந்திவு லோஞ்சைத்தவறவிட்டு விட்டேன். அதனுல் நீந்திச் செல்ல வேண்டி ஏற்பட்டு விட்டது.

ஒருவரையொருவர் பார்த்தனர். நம்பாமல் இருக்க முடியுமா?

"சறியான கெற்டிக்காறங் தாங். ஓ...ஓ... சறி நாங்க கயிற்ட்ஸ் பாலங்கிட்ட விடுறது!"

"மிக்க நன்றி. இன்னமும் ஒரு மைல் தான், நீந்தியே சென்று புங்குடுதீவு வழியாகச் சென்று விடுவேன்." அவர்களது பதிலுக்குக் காத்திராமல் படகின் விளிம்பிற்கு வந்தான். இருபத்திரண்டு வயதைத் தாண்டாத அந்த இளைஞனின் தாய் மொழிப் பற்றும், அதனுல் எழுந்த அசாதாரண துணிவும் அப்படகின் தலைவனை நன்கு கவர்ந்துவிட்டது.

"தம்பே...நாங்க கொண்டு போ விடறது தம்பே!"

"மிக்க நன்றி. நான் வருகிறேன்"

"கொஞ்சங் கோபி குடிச்சுப் போ தம்பே" அவனது அன்புப் பிணைப்பு அவனைத் தடுத்தது. இத்தகைய சிங்களவரும் இருக்கின்றுரென எண்ணி உள்ளூர மகிழ்ந்தான். ஒரு பெருமூச்சு! அவன் மீது கருணை கலந்த ஒரு பார்வை!, சிங்கள ஆட்சியாளரின் மிருகத்தனமான போக்கு, நம்மிடையே இருக்கும் சகோதர பாசத்தையும் அறுத்து நெருங்கவொட்டாமற் தடுக்கின்றது." . என்று எண்ணினுனே என்னவோ— பாய்ந்தான் கடலில் — நீந்தத் தொடங்கி விட்டான். அவனையே பார்த்துக்கொண்டிருந்த சிப்பாய்கள் அனைவரும் தம் நிலைமறந்து சத்தியாக்கிரகத்தின் மகத்துவத்தையே சிந்தித்தனர். 'தமிழர்கள் எல்லோரும் இப்படியே இருத்தல் வேண்டும். எந்த எதிர்ப்பும் இவர்களை அணுகாதே! உரிமையைப் பறிப்பதென்பது எவ்வளவு கொடுமை!' இந்த அர்த்தத்திற் சிங்களத்திற் சொல்லிக் கொண்டான் 'கப்டன்'

மறுநாள் முற்பகல் பதினெரு மணி!

மனோகரன் கண்களை மூடிக் கொண்டு யாழ்ப்பாணக் கச்சேரி வாசலிலே, எறிக்கும் வெயில் முகத்தை எரிப்பதையும் பொருட்படுத்தா

(13-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன் சந்தா விபரம்
இலங்கை—இந்தியா உட்பட
வருடச் சந்தா ரூபா.10-00
இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

சுதந்திரன் அச்சகம்,
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன் போன் : 3411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக் காவலில் நாம்' 12.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

புதுமை லோலன்

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம.
17—5—1961

என் இரத்தப்படைப்பே! மகளே!

இன்று கைது செய்யப்பட்டு ஒரு மாதம் கழிகின்றது. சென்ற மாதம் பதினேழாம் திகதி தானே யாழ்ப்பாணம் கச்சேரி வாயிலிலே ஆண், பெண் தொண்டர்களின இரத்தம் ஓடிய நாள். சத்தியாக்கிரகம் என்ற புனிதத்தை உணர முடியாத இராணுவம் அட்டூழியம் செய்த தினம்; வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் அராஜகம் தலை விரித்தாடிய நாள் சென்ற பதினேழு தானே!

யான் கைதான காட்சி... கச்சேரி வாயிலில் நாம்...... பின்பு இங்கே கொண்டு வரப்பட்டமை...... என்பவற்றை எண்ணுகின்றேன்; எண்ணுகின்றேன். அடக்குமுறையே! உனது காலம் நீடித்ததல்ல...! உன் தாண்டவம் எந்த நாட்டிலும் வெற்றி கண்டதில்லை; நிச்சயம் தோல்வியே காணும்!

இன்று வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் ஹர்த்தால் எனக் கேள்விப் பட்டோம், உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்றோம். சிலர் உண்ணா விரதத்துடன், மௌனவிரதத்தையும் அனுஷ்டிக்கின்றனர். பகலில் இளநீர் மட்டுமே குடிப்பதாக ஒழுங்கு செய்துள்ளோம். பலர் பிரார்த்தனை செய்தபடி உள்ளனர். இங்கே நாங்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் அதே வேளையில், வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் பூரண ஹர்த்தாலும், கோயில், தேவாலயங்கள், மசூதிகளில் விசேட பூசையும் நிகழுகின்றது. இராணுவத்தின் அட்டூழியம், தமிழ் பேசுமினத்தின் ஒன்றுபட்ட போராட்ட உள்ளத்தை எதுவும் செய்து விடவில்லை, என்பதை இன்றைய ஹர்த்தால் மெய்ப்பிக்கின்றதே! இந்த ஹர்த்தால் மிக அமைதியாக நடக்க,வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் ஓடி ஓடி ஒழுங்கு செய்து வருகிறாராம் உடுப்பிட்டிச் சிவசிதம்பரம். அவருக்குத் தமிழினம் நன்றி கூறவேண்டும். அவருக்குப் பக்க பலமாகத் தமிழரசுக் கட்சியின் செயல் வீரர்கள் இருக்கிறார்களே! அதோ ஒரு கரம் பீற்றர் சோமசுந்தரம்......அதோ மறு கரம் வித்துவான் கந்தையா...... அதோ இன்னோர் கரம் கொக்குவில் அருணாசலம்... அதோ சங்குவேலி அரசரத்தினம் ஆசிரியர்...... அதோ துன்னாலை செல்லையா...... அதோ கைதடி செல்லத்துரை... அதோ ஆசிரியர் இ. க. தியாகராசா... அதோ மாநகர உறுப்பினர் நா. த. செல்லத்துரை... அதோ கந்தர் மடம் அருள், கார்த்திகேசு... கல்வியங்காடு மணி, பழனி...... அதோ நல்லூர் செல்வி பாமாசக்தி... அதோ இணுவில் முத்துலிங்கம், குமாரசாமி, பண்டிதர் இராசையா... அதோ ஊர்காவற்றுறை இம்மானுவல், அரங்கதாசன்... அதோ வல்வெட்டித்துறை இராமச்சந்திரன் ... வண்ணார்பண்ணை சிதம்பர ஈஸ்வரன், குணராசா, க. ஜீவகாருண்ணியம், தேகரம், இரும்புக்கடை மணியம், அம்பி, நாவேந்தன் ...... எத்தனை எத்தனை வீரர்கள் எது வரினும் தயங்காத வீர திலகங்கள்... இவர்களது பக்கபலம் இருக்கு மட்டும் ஹர்த்தால் என்ன...... எத்தனை போராட்டங்களையும் செய்யலாமே! நானறியாத, நான் பழகாத வீரச்செம்மல்கள் ஆயிரக் கணக்காக எமது பாசறையில் உண்டே! பின்பேன் தயக்கம்— புறப்பட்டு வீரர்படை!

ஆண்டு பல கடக்கலாம். உரிமை கிட்டும் வரை எங்கள் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கும் என்பதை இன்றைய ஹர்த்தால் மெய்ப்பிக்கும் மகளே! தமிழன் உறுதியற்றகோழையா? இல்லையே!

சென்ற ஏழாந்திகதி திரும்பவும் பதினேழு பேர் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கேள்விப் பட்டோம். அன்று எனக்கொரு தந்தி வந்தது. என் தந்தையின் அண்ணனாகிய, எனது பெரியையாவுக்குக் கடுமையான சுகயீனம் என்பதே அது. ஐயகோ! அவரது கடைசி காலமென்பதை உணர்கின்றேன். ஆனால் வர முடியுமா? பேச முடியுமா? என்னாலான உதவி செய்ய முடியுமா? என்றாலும் போய் வர உத்தரவு கோரியுள்ளேன்.

நாங்கள் திங்கட் கிழமையும், வியாழக் கிழமையும் மட்டும் ஒவ்வொரு மடல் வரைய முடியும்.

சென்ற எட்டாந் திகதி தான் எங்கள் கால்கள் பூமியை மிதித்தன. மேன்மாடியில் வாழ்வு, உணவுக்கு மட்டும் கீழ் மாடி என இருந்தோமல்லவா? எட்டாந் திகதி தொடக்கம் ஒரு மணித்தியாலயம் மாலையில், கட்டிட முன்றிலில் இறங்கி உலாவலாம், கைப் பந்தாட்டம் ஆடலாம், 'ரெனிகொயிற்' ஆடலாம். மாலையில் தேநீர் அருந்தியதும் மணி அடிக்கும். அப்போது மட்டும் இறங்கலாம். அப்போதெல்லாம் பொலிசார் சூழ வர ஜாராகக் காவல் புரிவர், கைகளில் சுழல் துப்பாக்கிகளுடன்...

நான் கைப் பந்தாட்டமாடினேன். பூமியில் கால் பட்டதாலோ என்னமோ ஏதோ ஒரு புது மகிழ்விருந்தது. தமக்குத் தமக்கு விருப்பான விளையாட்டுகளிலும் ஈடுபட்டார்கள். இப்போது கீழே இறங்கும் அந்த ஒரு மணித்தியாலத்தையும் ஆவலுடன் எதிர் பார்க்கின்றோம். எங்களுக்குள் பிரிந்து போட்டியாக விளையாடவும் ஒழுங்கு செய்துள்ளோம்.

சென்ற ஒன்பதாந் திகதி பெரியையா இயற்கை எய்திவிட்டதாகத் தந்தி கிடைத்தது. துயர உச்சியடைந்தேன். போக உத்தரவு கோரித் தந்தியடித்தேன்... [illegible] விதப் பதிலுமில்லை. அவரது உடலைப் பார்க்கக் கூட [illegible] முடியாதவனாகி விட்டேன்.

என் செய்வேன்! புதுப் பிடிப்பினைகள், புது வேதனைகள் என்னை அலைக்கழித்தன. எதையும் தாங்கும் இதயம் வேண்டுமாமே! இந்த ஒன்பதாம் திகதியே வானொலியும் ஓர் செய்தியைத் தந்தது. மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அறிவித்தது. நல்ல வேளை, மொழிப் பிரச்சினை யென்று ஒன்று இருக்கின்றதென்றாவது ஒப்புக் கொண்டுள்ளனரே! இச் செய்தி எமக்கு மகிழ்வு தரவில்லை. இப்படி எத்தனையோ செய்திகளைக் கேட்டவர்கள் நாம். நடைமுறை உண்மைகள் எமக்குத் தெரியாதா என்ன?

சென்ற பன்னிரண்டாந் திகதி ஒரு அறிவித்தல் கிடைத்தது. தொண்டமானும் அஸீஸும், செல்வநாயகம் வீட்டில், பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும், மொழிப் பிரச்சினை பற்றிக் கலந்துரையாடவும் என அறிவித்தல் வந்தது. சென்ற பன்னிரண்டாம் திகதி மாலை எம். பி.க்கள் பொலிஸ் காவலுடன், செல்வநாயகம் வீடு போய் வந்தனர். பேச்சு வார்த்தையில் மகிழ்வு தரக்கூடியதாக எச் செய்தியும் அமையவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சியின் குறைந்த பட்சக் கோரிக்கையை முன் வைத்துப் பேசியதாக அறிந்தோம். இப்பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியகாரணம் தென்னிந்தியாவில் தி.மு.க. நடாத்திய ஆர்ப்பாட்டங்களும் தீர்மானங்களுமே. தி. மு. க. தலைவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் ஆட்சிப் பீடத்தை அசைத்துள்ளன. சென்னைதொட்டு ஒவ்வொருகுக்கிராமங்களிலும் மாபெரும் ஊர்வலங்களும், கூட்டமும் போட்டு, இலங்கைப் பிரச்சினையை உலகறிய தி. மு. க. வழி சமைத்தனர். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், நாஞ்சில் மனோகரன், சிந்தனைச் சிற்பி சிற்றரசு,என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து என் போரது அறைகூவல் ஈழத்து ஆட்சியைச் சிந்திக்க வைக்கிறது. இவர்களது சொற்பொழிவுகளைப் படிக்க ஆவல். ஆனால், இங்கிருந்து முடியாதே!

தென்னிந்தியாவில் சாதாரண மக்களின் நம்பிக்கையின் சின்னம் தி. மு. க. கலை வளர்ச்சியோ, மொழி வளர்ச்சியோ, சமூக சீர்திருத்தமோ ,சினிமாவோ, அரசியலோ புது முறுக்குடன் புதுமையுடன் அமைய வழி சமைத்தவர்கள் தி. மு. க.

சாதாரண மக்களின் சக்தியின் மாண்பை, உயர்வை செயல்படுத்துபவர்கள் தென்னகத்தில் தி. மு. க. வினர் மட்டுமே!

எங்கள் தமிழரசுக் கட்சியின் வயதும் தி. மு. க. வின் வயதும் கிட்டத்தட்ட ஒன்று. அவர்களது வளர்ச்சியையும் அபரிதமான செல்வாக்கையும் காணும்போது அவர்களது பணியின் சிறப்பை உணரலாம்

சுதந்திரம் பெற்ற கட்சி, காந்தி மகாத்மா வளர்த்த கட்சி, அடிமை விலங்கறுக்க அறப்போர் செய்த கட்சி காங்கிரஸ் கட்சி. சுதந்திரத்துக்காக பாடுபட்ட ஒருகட்சி ஆட்சி பீடத்தைச் சமைப்பதால், நன்மை வரும் என்பது நிச்சயமல்ல. அக் கட்சியின் பழம் பெருமை மட்டும் போதாது, நாட்டில் சுபீட்சம் நிலவ.

ஆகவே, காலப் போக்கும் வாழ்வுப் போக்கும், தி. மு. க. பக்கம் மக்களைக் கவர்ந்து இழுத்தன. அதற்கேற்ப தி. மு. க. வின் பணியும் அமைந்திருந்தது. தி. மு. க. தலைவர்களின் பிரமாண்டமான பிரச்சாரமும், யாராலும் தகர்க்கமுடியாத ஒப்பற்ற கொள்கைகளும், அவர்களை வானுயர வளர்த்தன. உதய சூரியன் காலிக்குமிடமெங்கும் அவர்கள்தம் பணியின் பெருமை பேசப்படுகின்றது.

அப்படிப்பட்ட தி. மு. க. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்காக மாபெரும் கூட்டம் கூட்டினர்; பிரேரணைகளை நிறைவேற்றினர். இலங்கைத் தூதுவரிடம் நேரில் ஊர்வலமாகச் சென்று தந்தனர். தூதுவர் மூலம் பிரதமர் சிறிமாவுக்கு அனுப்பினர். இவர்களது அன்புரிமையை, தமிழரின் நேசத்தை, ஒட்டுறவைக் கண்ட ஈழத்து ஆட்சி கொஞ்சம் மிரளவே செய்தது. அதனாலேயே மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என

(13-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் கோப்பிச் செய்கை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பிக்கொட்டை பதனிடுதற்கு இரு முறைகளுள. ஒன்று ஈரமுறை, மற்றது உலர்வு முறை. உலர்வு முறையில் நன்றாக முற்றிப் பழுத்த காய்கள் பறிக்கப்பட்டு 10—12 தினங்களுக்கு உலரவிடப்படும். விற்பனைக்கு முன்னர் உலர்ந்துள்ள அதன் மேல் தோல் நீக்கப்படும். அத்தோலை நீக்குவதற்கு அவற்றை உரலிலே யிட்டுக் குற்றலாம். அல்லது இயந்திரத்திலேயிட்டுத் தீட்டலாம்.

ஈரமுறையில் பக்குவப்படுத்துதற்கு முற்றிய காய்கள் பறிக்கப்பட்டதும் தோல் நீக்கப்படும். இத்தோலைக் கையால் அல்லது வலுவுடைய தோல் நீக்கிகளைக் கொண்டு நீக்கலாம். பின்னர் இவை ஒரு பெட்டியில் இடப்பட்டு கழுவப்படும். இதனால் மேலேயுள்ள மினு மினுப்பான தோல் நீக்கப்பட்டுவிடும். பின்னர் இவை வெயிலிலே பரப்பிக் காய விடப்படும். அல்லது பரண்களில் இடப்பட்டு சூடான காற்றைச் செலுத்தி உலர்த்தப்படும். இதன் பின்னர் இவை விற்பனைக்கு வைக்கப்படும்.

இக் கோப்பிச் செய்கையானது எங்களது உலர் வலயப் பிரதேசத்திலும் கையாளப்படக்கூடியது. ஆகவே, ஈழத்து மக்கள் தாமதியாது இக் கோப்பிச் செய்கையில் ஈடுபடுதல் அவர்களது பொருள்வளத்தைப் பெருக்குவதற்கு உதவியாக இருக்கும்.

## மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழனுக்காக உருவாக்கப்பட்டதொன்றல்ல; இலங்கை யெங்கும் பரந்து கிடக்கும் தமிழரது உரிமைகளைப் பெறும் நோக்குடன் அமைக்கப்பட்ட ஸ்தாபனம் தான் அது.

தமிழரசுக் கட்சியை என்றும் தாக்கி வந்தவர்கள், கட்சிமீது அடக்கு முறையை ஏவினவர்கள், தமிழரசுக் கட்சிக்கு மக்கள் அளிக்கும் பேராதரவைக்கண்டு பொறாமைப் பட்டவர்கள் தான்— இன்று மலைநாட்டுத் தமிழர் பகுதியில் தமிழரசுக் கிளைகள் திறக்கப்படுவதை எதிர்ப்பவர்கள். மலைநாட்டுத் தமிழர்களைத் தமிழரசு அணியில் சேர்க்க வேண்டும் என்பதுதான் தமிழர்களது விருப்பம். மன்னார் மாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் தமிழர்கள் விருப்பம்.

சி. பரமலிங்கம்,
இணுவில் தெற்கு.

### எல்லாம் தமிழ் எங்கே?

எல்லாம் தமிழ் என்று ஏடுகள் எடுத்துரைத்தன. நாட்டில் நடப்பதோ எல்லாம் ஆங்கிலம். இதைக் குறித்து தமிழ் பேசும் மக்கள் வெட்கப்படாமலிருக்க முடியாது. தனிச் சிங்களம் அமுலான உடன் சிங்களப் பெருமக்கள் அத்தனைபேரும் அந்நிய மொழியை (ஆங்கிலத்தை) அகற்றி விட்டு அன்றாட அலுவல்களை எல்லாம் சிங்கள மொழியிலே நடாத்துகின்றனர். அங்காடி நிர்வாகிகள், ஆலை அரசர்கள், தேயிலை, தெங்கு, இரப்பர் தோட்டச் சொந்தக்காரர்கள் எல்லாம் தாம் தொடர்பு கொள்ள வேண்டிய இலாக்காக்களுடன் சிங்கள மொழியில் தொடர்பு வைக்கிறார்கள்.

ஆனால் அன்னைத் தமிழை அகற்றிவிட்டு, ஆங்கிலத்தில் தான் நம் செந்தமிழ்ச் செல்வங்கள் எல்லாம் தொடர்பு வைக்கிறார்கள். இந்நிலையை மாற்றி அமைத்தால் தான், அடிமை நிலை அகன்று தமிழனும் இந்த நாட்டில் நெஞ்சை நிமிர்த்தித் தன்மானத்துடன் வாழ முடியும்.

கரவைச் [illegible]
கொழும்பு.




# தலை வலிக்கு

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

**108 மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது**

இதனைத் தலைக்கு வைத்துவரின் குணமாகும் வியாதிகள்:

கண் எரிச்சல், கண்சிவப்பு, கண்ணீர் வடிதல் பூ விழுதல், கண் அரிப்பு, காதில் சீழ் வடிதல், காதுக்குத்து, பீனிசம், செவிடு, காது இரைச்சல், காது மந்தம், மூக்கிலிருந்து நீர் வடிதல், ரத்தம் வருதல், ஓயாத் தும்மல், நாற்ற உணர்ச்சி காணல், வாசனை உணர்ச்சி இல்லாதிருப்பது, மண்டையிடி, மண்டைக் கரப்பான், பிடரி வலி, ரோமம் உதிர்தல் முதலியவைகளைக் குணப்படுத்துவதோடு தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு அடர்த்தியாக வளரச் செய்யும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**புட்டி 1க்கு ரூ. 5-75**
**அரைப் புட்டி ரூ. 3-00**

தபால் செலவு -/95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்மினி படங்களில் நடிக்க மாட்டார்

## டாக்டர் இராமச்சந்திரன் அறிவிப்பு

கல்யாணமான பின்னர் பத்மினி படங்களில் நடிக்க மாட்டார் என்ற செய்தி பலமாக அடிபட்டதும், அதைத் தொடர்ந்து பத்மினி படங்களில் நடிக்காதிருந்ததும் அறிந்த விடயமே. பின்னர் சில நாட்களுக்குப் பிறகு பத்மினி படங்களில் நடிக்க கணவர் டாக்டர் இராமச்சந்திரன் சம்மதம் அளித்திருந்தார். ஆனால் இப்போது மீண்டும் படங்களில் பத்மினி நடிக்க மாட்டார் என்று டாக்டர் இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

திருமணமாகி சில காலம் வரை பத்மினி படங்களில் தோன்றவில்லை. மொடர்ண் தியேட்டர்சாரின் 'காட்டு ரோஜா'வில் முதன் முதலாகத் தோன்றி நடித்து வருகிறார். அதைத் தொடர்ந்து பல படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ஸ்ரீ ராமுலு நாயுடு அவர்களின் ஸ்தாபனமான பட்சிராஜா ஸ்டுடியோ தயாரிக்கும் ஒரு தமிழ்ப்படத்திலும் சிவாஜி கணேசனுடன் நடிக்க பத்மினி ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

டாக்டர் இராமச்சந்திரன் இப்பொழுது திடீரென தனது மனைவியைப் படத்தில் நடிக்க வேண்டாமென உத்தரவிட்டுள்ளாராம். "காட்டு ரோஜா" படம் முடிவடைந்ததும், வேறு படங்களில் நடிக்க மாட்டார் என்று தெரிகிறது.

திரையுலகிலிருந்து விலகினாலும், கலை உலகை விட்டுப் பிரியவில்லை பத்மினி. 'வள்ளி திருமணம்' நாட்டிய நாடகத்தை நடத்தப் போவதாகவும், அதே போன்று பல நாட்டிய நாடகங்களை நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

## பந்த பாசம்

சிவாஜிகணேசன், தேவிகா, ஜெமினி கணேசன், சாவித்திரி, ரெங்கராவ், சந்திரபாபு முதலியோர் நடித்த சாந்தி பிலிம்ஸ் "பந்த பாசம்" இம் மாத இறுதியில் வெளியாகிறது. இப்படத்தின் கதை வசனத்தை வலம்புரி சோமநாதன் எழுதியுள்ளார். 'பா'னு' வரிசையில் வருவதனால் நிச்சயமாக இப்படம் பீம்சிங்கின் டைரக்ஷனில் தான் உருவாகும் என்பது குறிப்பிட வேண்டியதொன்றல்ல.

## முத்து மண்டபம்

எஸ். எஸ். இராஜேந்திரன் தயாரித்துள்ள 'முத்து மண்டபம்' இத் தீபாவளிக்கு வெளியாகிறதாம். இப்படத்தில் எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி, ராதா, அசோகன், ரெங்கராவ், சந்திரகாந்தா ஆகியோர் தோன்றுகின்றனர். இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்துள்ளார். கே. வி. மகாதேவன் இசை அமைத்துள்ளார்.

## புரட்சி நடிகரும், வைஜயந்தியும்

"நாக நந்தினி", "மாடப்புறு" ஆகிய படங்களைத் தயாரித்த பி. வி. என். புரொடக்ஷன்சார் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., வைஜயந்திமாலா இருவரையும் சோடி சேர்த்து ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம்.

"பக்தாத் திருடன்" படத்தில் எம். ஜி. ஆரும் வைஜயந்திமாலாவும் சோடி சேர்ந்து நடித்தனர். தென்னாட்டில் புரட்சி நடிகருக்கு அதிக கிராக்கி இருப்பது போல், வட நாட்டிலும், தென்னாட்டிலும் வைஜயந்திமாலாவுக்கு அதிகமான செல்வாக்குண்டு. இவ்விரண்டு பேரையும் ஒருங்கு சேர்ந்து படபிடிப்பில் கலக்க வைக்க போதுமான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லையாதலால் "பக்தாத் திருடன்" படப்பிடிப்பில் அதிக தாமதம் ஏற்பட நேரிட்டது.

இம்மாதம் 8-ம் திகதி படம் ஆரம்பமாகி டிசம்பர் மாத இறுதிக்குள் திரைக்கு வருமாம்.



ஹலோ!...அதிக நாட்கள் காக்க வைத்து விட்டேன் என்று கோபிக்கிறீங்களா? மன்னிச்சுக்குங்க...விரைவில் வந்திடுறன். இப்ப ஒரே பிசி பாருங்க. அவரைக் கவனிக்கணும்...அப்புறம் எங்க பையன்...அவன் தான் என் ஆசைக் கண்ணன்...அந்தப் போக்கிரிப் பயலின் குறும்புகளையும், கொட்டத்தையும் அடக்க வேணும், இதெல்லாத்தையும் பாத்திட்டுத்தானே உங்களோடு பேச முடியும். சரி...சரி...விரைவில் சந்திக்கிறேன் "செந்தாமரை" மூலம்...வரட்டுமா? டட்டா!...

சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ் திரைகளுக்கு விரைவில் வரும் "செந்தாமரை"யில் பத்மினி.



அமுதூறும் ஆரணங்கை அள்ளி அணைத்து அகமகிழ்கிறான் அந்த ஆடவன். வட்ட முழுமதியை வானத்தில் பார்த்ததனால், சொக்கிச் செயலிழந்து, நிலை மறந்த சுடர்க் கொடியாள், சுழலுகிறாள் அவன் மார்பில்.

சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் "ராகினி"யில் கிஷோர் குமார், ஜபீன்.

## தீபாவளி விருந்து

இவ்வருட தீபாவளியின் போது தமிழகமெங்கும் நல்ல திரைப்பட விருந்து கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. கீழே தரப்பட்டுள்ள படங்கள் எல்லாம் தீபாவளிக்கு வெளிவருமெனத் தெரிகிறது:

### விக்கிரமாதித்தன்

பல வருடங்களாக ஏமாற்றமளித்து வரும், எம். ஜி. ஆர்., பத்மினி, தங்கவேலு, ராகினி முதலியோர் தோன்றும் ஜெய் பாரத் புரொடக்ஷன்ஸ் 'விக்கிரமாதித்தன்' தீபாவளிக்கு நிச்சயம் திரைக்கு வந்து விடுவாராம். இப்படத்தின் கதை வசனத்தை 'என் தங்கை' நடராஜன் எழுதியுள்ளார். டி. ஆர். ரகுநாத், என். எஸ். இராமதாஸ் ஆகியோர் இப்படத்தின் இயக்குநர்களாவர்.

### அழகு நிலா

ராகவன் புரடக்ஷன்சாருக்காக மாலினி, கல்யாண் குமார், முத்துராமன், தங்கவேலு, எம். சரோஜா, வசந்தி முதலியோர் தோன்றும் 'அழகு நிலா' வும் தீபாவளிக்குத் திரைக்கு வருகிறதாம்.

### ஆயிரம் வாசல் இதயம்

ஸ்ரீதரின் டைரக்ஷனில் வளரும் விசாலாட்சி பிலிம்சாரின் 'ஆயிரம் வாசல் இதயம்' தீபாவளித் திரை விருந்தில் ஒன்றாகும். இப்படத்தில் ஜெமினி கணேசன், தேவிகா விஜயலட்சுமி, பாலாஜி, நாகேஷ் தோன்றுகின்றனர்.

## இலட்சிய நடிகரும் ஞானத்தின் ஆவியும்

சேலத்தில் நடைபெற்ற ஒரு படப் பிடிப்பில் கலந்துகொள்வதற்காக இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், சென்னையிலிருந்து தனது மோட்டாரில் போய்க்கொண்டிருந்தாராம். இரவு வேளையாதலால் எங்கும் ஒரே இருட்டாக விருந்தது.

பாதையின் அருகே பி. எஸ். ஞானம் நின்று கொண்டிருந்தார். திரு. இராஜேந்திரனைக் கண்டதும், "தம்பி என்னையும் உன்னோடு சேலத்துக்கு அழைத்துக் கொண்டு போகமாட்டாயா? நானும் உன் கூட வர்ரேம்பா, தம்பி ......தம்பி......" என்று கூறினாராம். இராஜேந்திரனுக்கு தூக்கி வாரிப் போட்டது. காடடர்ந்த பகுதியில் தனியாக திருமதி ஞானத்தைக் கண்டதும் இராஜேந்திரனுக்கு மட்டுமல்ல, எவருக்குத்தான் கிலி பிடிக்காது.

ஆனால் இராஜேந்திரன் காரை நிறுத்தவேயில்லை. படபடத்த இருதயத்துடன் காரைக் கனவேகமாக ஓட்டிச் சென்றாராம்.

திருமதி பி. எஸ். ஞானம் சேலத்துக்குப் படப்பிடிப்புக்குச் சென்று திரும்புகையில் விபத்துக்குள்ளாகி மாண்டது பலருக்கு ஞாபகமிருக்கலாம். அந்த விபத்து நடந்த இடத்திற்கு அருகிலே வண்டி சென்று கொண்டிருக்கும்போதுதான் ஞானத்தை (ஆவி உருவில்) கண்டதாக இராஜேந்திரன் கூறினாராம்.

இந்த விபரத்தை சரோஜாதேவி அண்மையில் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் நடந்த 'தங்க மலர்' படப்பிடிப்பின் போது கிடைத்த ஓய்வு வேளையில் ஜெமினி கணேசன், டைரக்டர் ராஜகோபாலன் ஆகியோருக்கு கூறினாராம்.



சினிமாஸ் திரைகளுக்கு வரும் "நாக நந்தினி"யில் தேவிகாவும், நம்பியாரும் இப்படிக் காட்சி தருகின்றனர்.

பட விமர்சனம்

## சொல்லு தம்பி சொல்லு

ஜமீந்தார் கணக்கப் பிள்ளை போன்ற பாத்திரங்களுடன் வளர்ந்து, நல்லவரான கணக்கப் பிள்ளை நாட்டு வைத்தியரின் சொல்லைக் கேட்டு நம்பிக்கைத் துரோகியாக மாறுவதும், அதனால் ஜமீந்தாரின் மகனைப் பைத்தியக்காரனுக்குவதும், அவனுக்குப் பைத்தியம் தெளிந்து பழையபடி வாழ்வதும்—இப்படியாகப் படத்தின் மூலக்கதை பழைய பாணியிலே செல்லுகிறது.

இழந்த சொத்தையும் அதற்குரிய உயிலையும் திருப்பிப் பெறுவதற்கிடையில், ஆள் மாறாட்டம், காதலர் வேதனை, நாடகக் கம்பனி இப்படியாகப் பல நிகழ்ச்சிகளைப் புகுத்தி எப்படியோ மூன்று மணி நேரம் இரசிகர்களைக் காகக வைத்து விடுகிறார்கள்.

இதுவரை நாம் பெரும்பாலும் திரைகளில் நம்பியாரை வில்லனாக மட்டும் பார்த்தோம். இப்படத்தில் அவரை நல்லவொரு குணசித்திர நடிகராகவும் நாம் பார்க்க முடிகிறது. பைத்தியம் பிடித்தவனாக வரும் பொழுது அவர் உண்மையிலேயே பைத்தியக் காரனாக மாறிவிடுகிறார். உயிலைத் தேடும் பொழுது அவருடைய வழக்கமான நடிப்பைக் காண முடிகிறது.

பிரேம் நஸீருக்கு அதிக இடம் கொடுக்கப்படாவிட்டாலும், கொடுத்த பாத்திரத்தைக் குறைவின்றி நடித்திருக்கிறார்.

கணக்குப் பிள்ளையாக இருந்து பின்னர் உயிலை அபகரித்து கருணாகரம் பிள்ளை என்ற நாமத்துடன் வாழும் டி. எஸ். முத்தையா தனது பாகத்தைக் குறைவின்றிச் செய்து முடித்து, தான் ஒரு அனுபவ நடிகன் என்பதை நிரூபித்துவிட்டார்.

கல்யாணியாக வரும் ராஜசுலோசனா, கமலாவாகவரும் சகுந்தலா இருவரும் தங்கள் பாகத்தை ஓரளவு குறைவின்றிச் செய்து முடித்துள்ளனர்.

பழம் பெரும் நடிகர்களான கே. சாரங்கபாணியும், டி. ஏ. மதுரமும் முற்பகுதியில் நம்மை நன்றாகச் சிரிக்க வைத்து விட்டு, பிற்பகுதியில் நம்மைக் கண் கலங்க வைத்துவிட்டார்கள்.

அங்கமுத்து, பிரண்ட் ராமசாமி, மாலி ஆகியோர் வரும்பொழுது நகைச் சுவைக்குப் பஞ்சம் ஏற்படாதல்லவா?

சில பாடல்கள் உயிர்த்துடிப்புள்ளதாக அமைந்துள்ளன டைரக்ஷனைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்கு எதுவுமில்லை.

காலங் கடந்து நமக்கு விருந்தளிக்க வந்த போதும், ஒரு முறை பார்த்து இரசிப்பதற்கு வேண்டிய அம்சங்கள் உள்ளன.

—சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையில் வள்ளம் சுடப்பட்ட சம்பவம்

## நிராயுதபாணிகளைத் தாக்குவதுதான் கடற்படை வீரரின் கடமையோ?

மீன் பிடித்துக் கொண்டு திரும்பியவர்களை இலங்கைக் கடற்படை வீரர்கள் சுட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை வல்வெட்டித் துறைக் கடற்கரையில் நடைபெற்றுள்ளது.

இலங்கைத் தற்காப்புப் படைகள் அனைத்தும் நிராயுதபாணிகளைத் தாக்குவதிலும்—சித்திரவதை செய்வதிலும் பெயர் பெற்றவர்கள். கடந்த காலத்தில் நடைபெற்ற அனேக சம்பவங்கள் இதை நிரூபிக்கின்றன.

எதுவுமே அறியாதவர்களாகத் திரை கடல் சென்று வழமை போல் மீன் பிடித்துத் திரும்பியவர்கள் மீது கடற்படை வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் கள்ளக் கடத்தல், கள்ளத்தோணி என்று இப்படியாகச் சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

அன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான வள்ளத்தில் 900 ரூபாவுக்கு மேல் பெறுமதியான மீன்களும், மீன் பிடிக்க உபயோகிக்கும் வலைகளும் இருந்திருக்கின்றன. மேலும் வள்ளத்தில் உள்ளவர்கள் எந்த வித எதிர்ப்பும் காட்டவில்லையென்பது விசாரணையின் போது தெரியவந்துள்ளது. ஆனால் கடற்படை வீரர்கள் அவர்கள் மீது பல தடவை துப்பாக்கிப்பிரயோகம்செய்திருக்கிறார்கள். அதன் பின்னர் கரைவந்த வள்ளங்களில் உள்ளவர்களுக்குப் பல கஷ்டங்களைக் கொடுத்து வள்ளங்களிலிருந்த மீன்களையும் கடற்படை வீரர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

இது தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவத்தினரும், கடற்படை வீரர்களும் செய்துவரும் அட்டகாசத்தின் ஒரு நிகழ்ச்சியே. இராணுவத்தினரையும் கடற்படை வீரர்களையும் கொண்டு பேயாட்டமாட்டுவித்து தமிழ்மக்களை அடக்கியொடுக்கி விடலாம் என்று ஆட்சியாளர் நினைத்தால், நிச்சயம் அவர்கள் ஏமாற்றமடைவார்கள்.

நாட்டில் வேறு துறைகளில் ஊழல்களும், லஞ்சமும் தாண்டவமாடுகின்றன; நாட்டில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களே இவற்றைச் செய்கிறார்கள். அவற்றை யார் கண்காணிக்கிறார்கள்?

அதிகமாக நடைபெறும் கள்ளக் கடத்தல்களை, கடற்படை வீரர்கள் கண்டும் காணாதது போல் விட்டு விடுகிறார்கள்—அவர்களிடம் ஏதாவது பெற்றுக்கொண்டு. ஆனால் ஒன்றுமறியாது, தங்கள் தொழில் உண்டு என்று வாழும் சாதாரண மீன் பிடியாளர்களைச் சித்திரவதை செய்கிறார்கள்.

அன்று நடைபெற்ற சம்பவத்தையொட்டி பருத்தித் துறைப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் பிரதமருக்கு அனுப்பிய தந்தியில் உடனடியாக விசாரணை நடத்தும்படி வேண்டியுள்ளார். மேலும் அவர், பிரஸ்தாப வள்ளம் அரசாங்கத்தின் கடனுதவிப் பணத்தில் செய்யப்பட்டதென்றும், இவ்வித சம்பவங்களால் கடன் செலுத்த முடியாத நிலைமையேற்படலாம் என்றும், தொழிலாளர்கள் மீன் பிடிக்கச் செல்லுவதற்கு அஞ்சுவதாகவும், அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

வள்ளத்தின் உரிமையாளரான திரு. பொ. கதிரவேற்பிள்ளை சம்பவத்தைத் தெளிவு படுத்தி பிரதம மந்திரி, மீன்பிடி மந்திரி, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மற்றும் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

மேற்படி தந்திச் செய்தியையொட்டி திரு. செல்வநாயகம், பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், அரசாங்க கடன் உதவி பெற்றுச் செய்யப்பட்ட வள்ளம் சேதமடைந்துள்ளபடியால், கடன் செலுத்துவதில் கஷ்டமேற்படலாம் என்றும், இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாதிருக்க வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளும்படியும், இச் சம்பவத்தையிட்டு விரிவான ஒரு விசாரணையை உடனடியாக நடத்தும்படியும் வேண்டியுள்ளார்.

இது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் பின்னர் உதவி 'லெப்டினன்ட்' ஜயநத்தி கைது செய்யப்பட்டுள்ளதாக அறிந்தோம். பின்னர், அவர் கைது செய்யப்படவில்லையென அரசாங்க தகவல் இலாகா பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளது. இது என்ன கண்துடைப்போ?

காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையிலும், மற்றும் இருவருக்குச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. எனவே இது சாதாரண நிகழ்ச்சியல்ல என்பதை ஆட்சியாளர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

## இன்னல்களினால்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதக் கட்சிகள் நாட்டில் சுற்றுலா வரும்பொழுது, இன உரிமையைக் கேட்கும் ஒரு இயக்கத்தைக் கண்டு இந்த நாட்டின் பிரதமரும், திருவாளர்கள் தொண்டமான், அஸீஸ் போன்றவர்களும் ஏனோ அஞ்ச வேண்டும் என்று எமக்குப் புரியவில்லை.

தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலந்தொட்டு மலைநாட்டுத் தமிழர்களின் மொழியுரிமை, குடியுரிமைகளுக்காகப் போராடுவதென்பது அதன் பிரதான கொள்கைகளில் ஒன்றாகும். எனவே மன்னார் மாநாட்டில்தான் இப்புதுக் கொள்கை பிரசவித்தது என்று எவரும் கூறமுடியாது.

### ஒரு நல்ல திருப்பம்

மன்னார் மாநாட்டின் முடிவு செயற்பட வேண்டுமென்றுதான் தமிழ்பேசும் மக்கள் விரும்புகின்றனர். மன்னார் மாநாட்டில் செய்யப்பட்ட இந்த நல்லமுடிவு, நமது இனத்தின் வெற்றியைத் தேடித்தரும் திட்டத்தில் ஒரு சிறப்பான கட்டமாகும். அங்கோலாவில் அலங்கோலமென்றால், கொங்கோவில் குழப்பமென்றால் அறிக்கைகள் வெளியிட்டும், அடித்துப் பேசியும் வரும் இந்த நாட்டின் மாற்றுக்கட்சியினர், பிறந்த நாட்டிலேயே தமிழ்பேசும் இனம் அடுக்கடுக்காக இன்னல்கள் அனுபவித்து வருவதைத் தடுப்பதற்காக ஒரே அணியின் கீழ் திரளுவதற்குத் தயாராவதைக் கண்டு ஆசி கூற வேண்டுமேயல்லாது, "அடாது" என்று இயம்புவது அரசியல் அநாகரிகமாகும். மலைநாட்டில் தமிழரசுக்கட்சியினர் கிளைகளை நிறுவுவதற்கு முன்வந்திருப்பது ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் ஒரு நல்ல திருப்பமாகும். இதைக் கண்டு ஆளுங்கட்சியினர் தயக்கமடைவதும், திருவாளர்கள் தொண்டமான், அஸீஸ், போன்றவர்கள் மயக்கமடைவதும் ஆச்சரியப்பட வேண்டிய சம்பவங்களல்ல, அனுதாபப்பட வேண்டிய விடயங்களாகும்.


## இடுப்பை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சீர்குலைந்து வேர்வை சிந்தச்
செய்த கடும் வேலை
யென்ன?

குற்றமுள்ள மனம்தானே; அது குறுகுறுத்தது! தனது எண்ணத்திற் கலந்து விட்டவனோடு கொஞ்சிக் குலவிய நேரத்தில் கொண்டை குலைந்திருக்கலாம் — என்று எண்ணி, தன் தாயின் வினாவிற்கு விடையேதும் கூறாமற் சிலையானாள். ஆமாம்! அந்தக் குற்றத்தை ஒப்புக் கொண்டாள் என்பதுதானே அந்த மௌனத்தின் கருத்து! மானத்திற்கு அஞ்சிய அந்தத் தாய், தனக்கு வந்த ஆத்திரத்தின் வேகத்தில் சற்றுச் சூடாகக் கட்டளையைப் போட்டு விடுகிறாள் இப்படி;

கடப்பை கடந்து நீ
காலெடுத்து வைத்தா
யென்றால்,
இடுப்பை முறித்து—அந்த
இலுப்பையின் கீழ் போட்டி
டுவேன்.



முதுகோடு முதுகு உராசிடும் போது மோகம் பிறக்குமா? அல்லது கோபம் பிறக்குமா? என்று சந்திரபாபுவும், ராகினியும் ஆராயும் போது, திருட்டு வேடமிட்டு திரு திரு என ராஜேந்திரன் விழிப்பதேனோ?
தீபாவளிக்கு "செந்தாமரை" மலரும், அப்போதுதான் புரியும் விடயம்.

## அன்பு மகள் அன்பரசிக்கு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி ஊதித்தீர்ந்தது, எத்தனை முறை "மொழிப் பிரச்சினையைத் தீர்ப்போம்" எனக் கூறி விட்டனர். கூற்றுக்கள் செயலானதா? இல்லையே! ஈழ ஆட்சி சொன்னபடி எதையாவது செய்யும் திறம் படைத்ததா? நேர்மைத் திறமோ, நெஞ்சுரமோ படைக்காத ஆட்சியிலா சொன்னது செய்யப்படும்? அப்படிச் செய்யப்பட்டால், இவர்களது வழமை என்ன ஆகும்?

ஆனால்......,

காலம் வழி காட்டவே செய்யும். எதிர்காலம் முடிவு கிட்டவே செய்யும். ஓரினத்து உரிமையைப் பறித்து, எந்த ஆட்சியும் அமைதியுடன் ஆளமுடியாது; ஆண்டதும் கிடையாது. கொலை செய்யப்பட்ட பண்டாரநாயக்காவின் மரண அனுதாபத்தில் எவ்வளவு காலம் ஆட்சியை ஓட்ட முடியும்? சிங்கள மக்கள் உண்மைகளை உணரும் காலம் நிச்சயமாக வரும். அப்பொழுது இந்த ஆட்சி மேல் பாணம் திரும்பும். தன்வினை தன்னைச்சுடும்! மகளே! எதிர்காலம் நாம் இவற்றைச் சந்திப்போம்—நிச்சயமாக. ஆகவே நாங்கள் எங்கள் கடமையை நெறி நிறை அற வழியில் புறமுதுகு காட்டாது நடாத்தினால் போதுமானது. ஒரு தமிழன் இருக்கும் வரை, உரிமைக் கோரிக்கை கேட்கப்பட்டபடியே இருக்குமென்பதை உணர்த்தவேண்டும். தியாக உள்ளம் நிறைய வேண்டும். இது இந்தக்கால கட்டத்தில் வாழும் தமிழரின் கடமை. கடமையைச் செய்வோம்! பணி செய்பவர் வீழ்வதில்லை; கடமை வீரர் நாடு காக்கும் பெரும்படையினராச்சே!

'ஆறிலும் சாவு நூறிலும் சாவு'... 'தூங்கையிலே வாங்குகிற மூச்சு, சுழி மாறிப் போனாலே போச்சு'...வியாதி வந்து இறப்பதில்லையா!... விபத்து வந்து மடிவது கிடையாதா?... நாடு காக்கும் பணியில் மடிந்தோம் என்றால்... அதை விடப்பேறு ஏது மகளே!

பழந் தமிழன் வீர மரணம் எய்தி மகிழ்ந்தான். புறமுதுகிடாது, மார்பைக்காட்டி வேல் ஏந்தி மடிந்த மறத் தமிழரின் வரலாறு வழி காட்டட்டும். அவ்வீரர் மடிந்ததும். வீரக்கல் நாட்டி மகிழ்ந்த மூதாதையர் நம்மவர். அவர் வழி வந்த நாம், தொடை நடுங்கிக் கொள்ளும் கோழைகளாவதா? சீ! வெட்கம்! வீரராவோம், எமது கல்லறைகள் வீரம் பேசட்டும்! எமது கல்லறைகள், புதிய சமுதாயம் பூக்க உதவும் உணர்ச்சியை ஊட்டட்டும். சாவு கண்டு பயப்படாதவனே போராட்ட வீரன்; அவனே நாடு காக்கும் படையில் சேர வேண்டியவன். இப்படித் தமிழ் வீரர் இருக்க வேண்டும். இனமுழக்கம் கொட்ட வேண்டும், எழுச்சி முரசு அறைய வேண்டும். நிச்சயம் சுதந்திர பூமியைக் காண வேண்டில் இப்படியானவர்களாக நாங்கள் புறப்பட்டேயாக வேண்டும். 'எலிகள் புசிக்க எல்லாம் கொடுத்த சிங்க ஏறுகள் தூங்கிடுமோ'

மகளே அன்பரசி! இவ்வாரம் ஒவ்வொருவரும் கையெழுத்துப் புத்தகம் (Auto graph-Book) வாங்கினர். ஒவ்வொருவரிடமும் கைச் சாத்தும், அவரது அறிவு மொழிகளும் பெற்றனர். நானும் ஓர் புத்தகம் வாங்கிப்பெற்றேன். அதுபற்றிய விபரங்களையும், எம்முடன் வாழ்வோர் பற்றிய பூரா விபரத்தையும் அடுத்த மடலில் வரைய எண்ணியுள்ளேன். உன் அம்மாவுக்கும், தம்பி அன்பழகனுக்கும் உன் அப்பாவின் சுக செய்திகளைக் கூற மறக்கமாட்டாய் தானே!

அன்புத் தந்தை
புதுமைலோலன்.

(தொடரும்)

## பற்றும் பாசமும்

• சிந்தாமணி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் முதல் நாள் நடந்த நிகழ்ச்சியை இடையிடையே எண்ணிக் கொண்டு படுத்திருந்தான். தேகம் பலவீனமுற்றிருப்பதை உணர்ந்த போது எழுந்திருக்கவே சக்தியற்ற நிலை. ஆனால் சிந்தனை இழைவிட்டோடியதைத் தடை செய்யவில்லை.

"தம்பே!" கப்டன் அழைப்பு ஒலித்தது....' ம்...போயிட்டு வாப்பா...' பாட்டியின் தழுதழுத்த வழியனுப்பல். சத்தியாக்கிரகத் தொண்டர்களின் தமிழ் வாழ்த்துப் பாடல்களின் பேரொலியினூடே அவர்களது குரல்... "தம்பே" நெற்றியைச் சுருக்கிப் புருவத்தை நெரித்தான் மனோகரன். 'தம்பே' தன் காதுகளையே அவனால் நம்ப முடியவில்லை. கண்களை விழித்துக் கொண்டே எழுந்தான்!எதிரே...

சுரந்து வந்த அன்புப் பிரவாகம் கண்களிலே பிரதிபலிக்க அகத்தின் வெண்மையைச் சிரிப்பிலே துலக்கி கையிலே கோப்பிக் குவளையை வைத்துக் கொண்டு மண்டியிட்டுக் கொண்டிருந்தான் அந்த கப்டன். திகைத்தான் மனோகரன். கண்கள் ஆனந்தக் கண்ணீர் உகுத்தன. உரோமங்கள் புளகாங்கிதம் கொண்டன! இருவருக்கும் அதேநிலை. இறுகத் தழுவிக்கொண்டு அழுதேவிட்டனர். அளவு கடந்த ஆனந்தம்! மகிழ்ச்சியின் உச்சநிலை.

'மனோகரா!' உரத்த குரலில் அழைத்துக் கொண்டே ஓடி வந்தான் மனோகரனின் நண்பன் அமரன்.

'மனோகரா...!உன்னுடைய பாட்டி செத்திட்டா...'

"பாட்டி...! பாட்டி...!! பாட்டி...!!!" அவ்வளவுதான்.

ஆனந்தம்—துக்கம், உச்ச நிலையை ஒரே நேரத்தில் அடைந்தால் இருதயம் நிற்காமல் என்ன செய்யும்?

(யாவும் கற்பனை)

## லண்டனில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இடை வேளையில், தேநீர், சிற்றுண்டி விருந்துபசாரம் நடைபெற்றது. பின் திருமதி ஆனந்த ராஜகோபாலன் அவர்கள், பாரதியின் பாடல்களைப் பாடி, ரசிகர்களை ஆனந்தக் கடலில் மிதக்கச் செய்தார். திரு. எஸ். முத்துலிங்கம் விழாவின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய [illegible] கூறினர். தமிழ் தேசிய பாடலுடன் விழா இனிது முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழந்தைகளின் மகிழ்ச்சிக்கான விளையாட்டு நந்தவனங்கள்

### எனது கிராமம்

## சாவகச்சேரி

—ந. புனிதராசா—

எனது கிராமமாகிய சாவகச்சேரி ஓர் அமைதியுள்ள கிராமமாக விளங்குகின்றது. இக் கிராமமாகிய சாவகச்சேரி முன்பு ஓர் வளமையற்ற நாடாக இருந்தது. இப்பொழுது தான் இக் கிராமம் சிறிதளவேனும் வளமை பொருந்திய நாடாகக் காணப்படுகின்றது.

எனது கிராமத்தில் தபாற் கந்தோர், சந்தை, பாடசாலைகள், ஆஸ்பத்திரி, புகையிரத ஸ்தலம், கடைகள், பொலிஸ் நிலையம் ஆகியன, இக் கிராமத்திலுள்ள ஜனங்களின் வசதிக்காக கிராமத்திலே ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இங்கே பற்பல இறைவன் சன்னிதானங்களும் நிறுவப்பட்டிருக்கின்றன.

எனது கிராமத்தில் அதிகமானோர் விவசாயத் தொழிலையே செய்கின்றவர்கள். இவர்கள் இத் தொழிலையே செய்து தங்களது வாழ்க்கையை நாளாந்தமும் செவ்வனே நடத்துகிறார்கள்.

இக் கிராமத்திலுள்ள மக்கள், பண்பாடுடைய மக்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குத் தொந்தரவையும், இடைஞ்சலையும் கொடுக்காதவர்களாகத் தங்களது வாழ்க்கையை அறவழி நடத்துகின்றனர்.

குழந்தைகளுக்கு விளையாட்டு மூலமேயே பல விஷயங்களை அறியவும், உணரவும் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

இதை மனதில் கொண்டு ஒரு அருமையான விளையாட்டு நந்தவனம் மேற்கு ஜெர்மனியில் உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் விளையாட்டுக்கான சாதனங்கள் எல்லாம் இதில் அமைந்திருப்பதுடன் குழந்தைகளின் சிந்தனைகளைக் கிளறும் வகையில் பல அமைப்புகள் இதில் இடம் பெற்றுள்ளன.

ஹாம்பர்க் (டாட்) குழந்தைகளுக்கு விளையாட சகல வசதிகளும் அமைத்துத் தருவதுடன் அவர்கள் சிந்தனையைத் தூண்டவும் அறிவு பெறவும் வழி செய்ய வேண்டும் என்பதைக்குழந்தைகள் கல்வி நிபுணர்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

குழந்தைகள் எதேச்சையாக சர்வ சுதந்திரத்துடன், ஆபத்தில்லாத வகையில் விளையாட வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு நூதனமான நந்தவனம் ஹாம்பர்க்கில் அமைக்கப்பட்டுள்ளது. 1963-ல் ஹாம்பர்க்கில் சர்வதேச தோட்டக்கலைக் கண்காட்சியை நடத்துபவர்கள் இந்த எண்ணத்தை மனதில் கொண்டு நூதன நந்தவனம் ஒன்றை அமைத்திருக்கின்றனர்.

பழைய ஹாம்பர்க் நகர எல்லைச் சுவர் பகுதி இதற்காக மாற்றப்பட்டு கலை கலாச்சாரக் கல்வி இவைகள் பற்றிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் இந்த விளையாடுமிடம் அமைக்கப்பட்டுள்ளது. 400 சதுர அடி விஸ்தீரணமுள்ள இதில் குழந்தைகளுக்கான சகல விதமான விளையாட்டுச் சாதனங்களும், ஒரு சிறு மலையும், பொம்மைகள் உள்ள ஒரு பகுதியும் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்குப் புதிதாகவும் ஆச்சரியப்படும்படியாகவும் பொருள்கள் அமையவேண்டும் என்பதை மனதில் கொண்டு இன்னதென்று சொல்ல முடியாத சில சித்திரப் பொருள்களும் இதில் வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சியின் போது விநியோகிப்பதற்காக "விளையாட்டுகள் பற்றிய கலாசார சரித்திரம்" என்ற ஒரு சிறு புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை எழுதியவர் ஜெர்ஹார்ட் அய்க். இவர் கூறுவதாவது:— "குழந்தைகள் மனதில் சிந்தனையைத் தூண்டிவிட வேண்டும். இந்த அரைகுறையான உருவங்களைப் பார்த்து குழந்தைகள் முழு உருவத்தை மனதில் உருவாக்கிக் கொள்வார்கள். இதனால் அவர்கள் மன வளர்ச்சிக்கு இடமுண்டு. நவீன விளையாட்டுச் சாதனங்கள் குழந்தைகளின் மன வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன."

### பால் மழை

ஒரு முறை யப்பானில் டோக்கியோ நகரில் பெரிய ஒட்டல் ஒன்றில் 'பாண்' செய்வதற்காக வைத்திருந்த 2000 றாத்தல் மா காற்றில் பறந்து விட்டது. அதற்குச் சில தினங்களுக்குப் பிறகு அங்கு பால் மழையாக அது பொழிந்தது.

## வளர்மதி புதிய மருமக்கள்

3552 எஸ். ராஜேந்திரன், தெரணியகல.

3553 எஸ். கோபாலன், தெரணியகல.

3554 நா. சிவநாதன், வேலணை.

3555 சு. தங்கேஸ்வரி, மத்துகம.

3556 ஜோசப் சிரோண்மணி, நாகசேனை.

3557 க. சிவசண்முகநாதன், கைதடி.

3558 மா. குலேந்திரா தேவி, பண்டத்தரிப்பு.

3559 மு. தமிழ் எழிலன், கடவலை.

3560 ஏ. டபிள்யூ.ஏ.கபீர், நிக்காகொள்ள.

3561 எம். ஈ. எச். முகம்மது மௌஜூத், பெரிய கிண்ணியா.

3562 வெ. மதிவதனி, உரும்பராய்.

3563 பவானி குமாரசுவாமி, மட்டுநகர்.

3564 என். எஸ். தியாகராஜா, சமுத்திரவல்லி.

3565 எம். அனுசூயா தேவி, கோப்பாய்.

3566 எஸ். பூரணி, நுணுவில்.

3567 ஏ. எம். நிசாகரன், பெரிய கிண்ணியா.

3568 க. சாந்தகுமாரி, கந்தையா, கொழும்பு-13.

## எவரினல்...?

—எம். எஸ். பாலு—

அழித்தல் காத்தல் படைத்தல் மூன்றும்
ஆவதுலகில் எவரினல்?
ஆறும் கடலும் குளமும் பெருகி
மீறும் வலிமை எவரினல்?
இரும்பும் பொன்னும் கரியும் மண்ணுள்
புதைந்து கிடப்ப தெவரினல்?
ஈயும் எறும்பும் மனிதர் தானும்
வாழும் பெருமை எவரினல்?
உலகும் கடலும் வெளியும் மூன்றும்
தெரியும் தன்மை எவரினல்?
ஊமை குருடு முடங்களாகி(ச்)
சேய்கள் பிறப்ப தெவரினல்?
எளிமை வறுமை கொடுமை யாவும்
வளர்ந்து அழிவ தெவரினல்?
ஏழை செல்வன் கொடுமை யாளன்
வாழ்வ திங்கு எவரினல்?
ஐயம் நீதி நேர்மை நம்முள்
ஆகுந் தன்மை எவரினல்?
ஒளியும் இருளும் மாய்கை யாவும்
நிலவுந் தன்மை எவரினல்?
ஓடை ஏரி குட்டை யாவும்
நீரைக் கொள்ள லெவரினல்?
ஔடதம் நஞ்சு அமுதம் மூன்றும்
ஆனதிங்கு எவரினல்?

### சின்னஞ்சிறு திருகாணி

நுட்பமான ஆராய்ச்சிகளின்போது பாவிக்கப்படும் கடிகாரங்கள் போன்ற உபகரணங்கள் செய்வதற்குப் பாவிக்கப்படும் ஒரு வகைத் திருகாணி ஒன்றை ஊசித்துவாரத்தினுள்ளே புகுத்த முடியும். இந்த ஆணிகள் பத்தாயிரத்திற்கும் அதிகம் சேர்ந்தால் தான் ஒரு இறுத்தலாகும். எவ்வளவு சிறிய ஆணிகள்!

## உன்னைப் பற்றி...

தொகுத்தவர்:
கு. யோகேஸ்வரமூர்த்தி,
மட்டக்களப்பு.

நீ முதலில் கைக்கு அருகிலுள்ள முதல் கடமையை ஆற்று. அடுத்த கடமை என்னவென்று தன்னாலே புலப்படும்.

—கார்லைல்

உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால், நீ அவனிடம் உன் மறு கன்னத்தையும் காட்டு.

—இயேசுநாதர்

நீ ஒருவனை ஏமாற்றுதே. அதை அவன் நம்பியது போல் நடித்து உன்னை ஏமாற்றி விடுவான்.

—யாரோ

நீ முழு உண்மையையும் சொல்ல வேண்டும் என்பதல்ல; நீ சொல்லுவதெல்லாம் உண்மையாக இருக்கட்டும்.

—யாரோ

'நீ ஒருவனை எத்தனை தடவை மன்னிக்க விரும்புகிறாய்? ஏழு முறையா?' நான் ஏழு முறை என்ன, எழுபது முறையாவது மன்னிக்கத் தயாராயிருக்கிறேன்.

—இயேசுநாதர்

நீ சிந்தனை செய்யத் தொடங்குவது சுலபமல்ல; ஆனால் நீ சிந்தனை செய்யத் தொடங்கி விட்டால், அதை நீ விடமாட்டாய்.

—ரூசோ

ஷேக்ஸ்பியருக்கு எந்த ஆசிரியர் கற்றுக் கொடுத்தார்? பிராங்கிளின், வாஷிங்டன் ஆகியோருக்கு எந்த ஆசிரியர் கற்பித்தார்? யாருமில்லை. அதைப்போலத்தான் நீயே உனக்கு ஆசிரியராய் இருக்க வேண்டும்.

—எமெர்ஸன்

எதிர்ப்பைக் கண்டு கலங்காதே. காற்றாடி காற்று வாக்கில் உயர எழும்புவதில்லை. எதிர்த்துத்தான் உயருகிறது; இதை நினைவில் வை.

—ஹமில்டன்

உனக்கு எட்டாத கடவுளைப் பற்றி எல்லாம் தெரிந்ததாகப் பிதற்றுதே.

—வால்ட் விட்மன்

## காந்தியின் வாழ்விலே...

காந்தி ஒருநாள் தம் தந்தைக்குத் தெரியாமல் சுருட்டுப் பிடித்தார். பின்னர் அவர் தாம் யோசனை செய்ததில் 'தந்தைக்குத் தெரியாவிட்டாலும் கடவுளுக்குத் தெரியும்' என்று உணர்ந்தார். தந்தையின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டார்.

★

ஒரு நாள் காந்தி எதையோ அவசரமாகத் தேடிக் கொண்டிருந்தார். ஒரு பிரமுகர்,

"என்ன தேடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"பென்சில்" என்றார் காந்தி.

"என் பென்சிலை வைத்திருங்கள்" என்றார் பிரமுகர்.

"வேண்டாம். அந்தப் பென்சிலை ஒரு பையன் அன்போடு பரிசளித்தான்" என்றார் காந்தி துயரத்தோடு. இருவரும் தேடி, பென்சிலைக் கண்டு பிடித்தனர்.

பென்சிலின் நீளம் எவ்வளவு தெரியுமா?

ஒரு அங்குலம்!

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 1

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

______________________ ______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கல்லடி உப்போடையில் பாரதி விழா

"வரகவி சுப்பிரமணிய பாரதி நாட்டுப் பற்றுக்கு அடுத்ததாக, தன் கவிதை மூலம் மொழிப் பற்றை மக்களுக்கூட்ட விரும்பினுன். தமிழில் மலர்ச்சி வேண்டுமாஞல் புதிய கலைகள் தமிழில் பெருக வேண்டுமென்பது பாரதியின் ஆசை. தமிழினம் காலத்தால் மூத்த இனம். காலத்தை வென்ற இனம். ஒழுக்கம் தமிழர் விழி; உண்மையும் அறமும் வழி; இதனை எண்ணிப் பெருமை கொள்கிருன் பாரதி. இத்தகைய தமிழினம் தன் காலத்தில் இழிநிலைப் பட்டதைக் கண்ட பாரதி மனம் கொதித்து "நெஞ்சு பொறுக்குதிலையே" என்று விம்மினுன். இத்தகைய மொழி, இன, நாட்டுப் பற்றுமிக்க தலை சிறந்த புலவனைத் தமிழுலகம் எப்படி மறக்க முடியும்".

இவ்வாறு கல்லடி உப்போடையில் மாணவர் மன்றத்தினர் நடாத்திய பாரதி விழாவில் பேசும்போது விவேகானந்த வித்தியாலய உப அதிபர் செல்வி க. அருணுசலம் குறிப்பிட்டார்.

மற்றும் செல்விகள் செ. நேசலட்சுமி, சி. பாக்கியலட்சுமி உட்படப் பலர் பேசினர்.

செல்வி த. புஷ்பராணி, செல்வி மூ. பூமணிதேவி என்போர் இசை விருந்தளித்தார்கள்.

---

## பிரிவுபசாரம்

மட்டக்களப்புத் தெற்கு வட்டாரப் பாடசாலைகளின் வித்தியாதரிசியாகக் கடமை புரிந்த திரு. எம். ஜே.சீமான் பிள்ளை அவர்கள் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு, அவ்வட்டார ஆங்கில, தமிழ் ஆசிரியர்களால் பிரிவுபசாரமொன்று நடத்தப்பட்டது. கல்லடி உப்போடை, சிவானந்த வித்தியாலயத்தில் நடந்த இவ் வைபவத்துக்குச் சங்கத் தலைவர் திரு. கே. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினுர்.

தலைவருட்படப் பலர் திரு எம். ஜே. சீமான்பிள்ளை அவர்களின் சீரிய சேவையைப் பாராட்டிப் பேசினர்.

வித்தியாதரிசி அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து தோட்ட விருந்தொன்றும் நடைபெற்றது.

---

## தலைமை ஆசிரியருக்கு பிரியாவிடை

"பாரத நாட்டிலே பூதான இயக்கத்தைத் துவக்கி வைத்த விஞேபாஜிபோல் நம் பள்ளியிலே நூல்தான இயக்கத்தைத் துவக்கி வைத்த எம் தலைமையாசிரியரை, ஈராண்டுகளுக்கு மேலாக நம் வாழ்வுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கத்தை, மலை நாட்டிலிருந்து வடக்கு நோக்கி அனுப்பும் கூட்டத்தில் இங்கு கூடியிருக்கின்றோம்."

இவ்வாறு பேராதனை அரசினர் உயர் நிலைத் தமிழ்ப் பள்ளியில் 28—9—62 வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரியாவிடைக் கூட்டமொன்றிற் பேசிய ஆசிரியர் திரு. த, செல்வராசா குறிப்பிட்டார்.

இப் பள்ளித் தலைமையாசிரியரான திரு. வே. கதிரவேலு கிளிநொச்சி சைவ வித்தியாசாலைக்கும், உதவியாசிரியரான ஜனுப் ஏ. ஆர். எம். உவைஸ், கல்கின்னை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கும் மாறிச் செல்ல இருப்பதை முன்னிட்டு திரு. சி. பொன்னையா ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஆசிரியர்களான திருவாளர்கள்: ஆ.பெருமையினுர், க. ஆறுமுகம், ஜனுப் ஏ. சீ. எம். அன்வர் உட்பட மற்றும் ஆசிரியர் பலரும் செல்வி. சித்திமரியம், செல்வன். மா. நாமதேவன் செல்வன் து. சிவலிங்கம் உட்பட மற்றும் மாணவர் பலரும் பாராட்டிப் பேசினர்.

பள்ளி ஆட்சிமன்ற முதலமைச்சர் செல்வன் சி. பெருமாள் பிரியாவிடை வாழ்த்துக்கூறி, பரிசில்கள் வழங்கி சம்பந்தப்பட்ட இரு ஆசிரியர்களைக் கௌரவித்தார்.

---

## அருளொளி நிலையம்

மக்களிடையே செல்வந்தனுயினும் சரி, ஏழையாயினும் சரி அவரவர் உள்ளத்தில் குறைபாடுகளுடன் வாழ்வதால் தான் துன்பத்திற்கு ஆளாகிறேம். மக்கள் இன்பமாக வாழவேண்டுமாமாகில் அன்பின் பிணைப்பில் நாம் அனைவரும் ஐக்கியத்தையே வளர்க்க வேண்டும். இதற்கெல்லாம் உறுதுணையாக அமைவது இப் பேர்ப்பட்ட ஆத்மீக நிலையங்களே.

மேற்கண்டவாறு வெள்ளவத்தை யோகா இல்லத்தில் அருளொளி நிலையத்தார் ஆதரவில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்திற்கு, கொழும்பு இந்து வாலிபர் சங்கத் தலைவர் திரு. ச. சுப்பையா தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் கூறினுர்.

தொடர்ந்து பேசுகையில், "மக்களின் இன்றைய வாழ்க்கை நிலை மாறி, பரஸ்பர ஒற்றுமையை வளர்த்து அமைதிகாண வேண்டுமாகில் குரு வழிபாடும் ஆத்மீக வளர்ச்சியும் அவசியம் வேண்டற்பாலது. இதற்கான பணிகளில் ஒவ்வொரு ஆத்மீக நிலையங்களும் தொண்டாற்ற வேண்டும்" என்று கூறினுர்.

நிலையச் செயலாளர் திரு. சொ. விமலநாதன் பேசுகையில், அருளொளி நிலையஸ்தாபகர் சுவாமி சத்சித்ர முத்து அடிகளாரின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்து விளக்கி இல்லறத்திலிருந்தே துறவறத்தைக் காட்டிய பெருமை சுவாமிஜி அவர்களையே சாரும் எனவும், அவரது ஞான நூலாகிய அருளொளி நூல் மூலம் அவரது அருள் ஞானத்தை அறிய முடியும் எனவும் கூறினுர்.

---

## மாணவ முத்தமிழ் மன்ற பாரதி விழா

எட்டியாந்தோட்டை 'மாணவ முத்தமிழ் மன்ற'த்தின் சார்பாக புனித கபிரியேல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற "பாரதிவிழா"வைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த திரு. சபாரத்தினம் பி. ஏ. அவர்கள் பேசுகையில், "பூஞ்சோலையில் பல வகையான மரங்களும் செடிகளும்காணப்படுகின்றன. அழகாகப் படர்ந்த மரங்களையும், இளந் தளிர்களையுடைய செடிகளையும், சிறு மொட்டுக்களைக் கொண்டுள்ள மரங்களையும் உதிர்க்கப்பட்ட சருகுகளையும், கண்ணைக் கவரும் அழகியவண்ண மலர்கள் மணம் பரப்பிக் கொண்டிருப்பதையும் நாம் அப் பூஞ்சோலையில் காணலாம். இவற்றில் அனைவரையும் கவருவது மணம் பரப்பும் அழகிய வண்ண மலர்களே! இதேபோல், சமுதாயத்திலும் வயோதிபர்களையும் நடுத்தர வயதினர்களையும், இளைஞர்களையும் நாம் காண்கிறேம். இவர்களில் மக்களால் அதிகம் விரும்பப்படுபவர்கள் இளைஞர்களே! இளைஞர்களாகிய நீங்கள் பல பெரியார்களின் விழாக்களைக் கொண்டாடுகிறீர்கள். இன்று உங்களுடைய முயற்சியால் பாரதிக்கு விழா எடுத்துள்ளீர்கள். ஆனுல் பாரதிக்கு விழா எடுத்தால் மாத்திரம் போதாது! அவர் எதற்காக வாழ்ந்தார், எப்படி வாழ்ந்தார் எதைப் போதித்தார், எத்தகை நிலையில் வாழ்ந்தார் என்று ஆராய்ந்து அறிந்து அவர் காட்டிய வழியில் நடக்க வேண்டும்!" என்று கூறினுர்.

திருவாளர்கள்: க. நல்லையா ஆசிரியர், பொன்கலன், ஆசிரியர் ஆகியோரும் பாரதியைப் பற்றி உரை நிகழ்த்தினர். செல்வர்கள்: சிவகுருநாதன், அ. இராஜரட்ணம், சி. மோகன் ச. சிவானந்தராசா முதலியோர் பாரதி வாழ்த்துப் பாடல்களைப் பாடினுர்கள்.

மன்றத்தால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றேர்:

மேற்பிரிவு : முதல் பரிசு—செல்வன் எல். சுதந்திர ராசா. இரண்டாவது பரிசு—செல்வன் ஆர். கணபதி.

கீழ்ப் பிரிவு : முதல் பரிசு—செல்வன் டி. தேவராஜ். இரண்டாவது பரிசு—செல்வன் எம். இராமசாமி.

போட்டி முடிவுகளை திரு. ஏ. பி. வி. கோமஸ். பி. ஏ. தெரிவிக்க, தலைவர் பரிசில்களை வழங்கினுர். திரு. கா. கந்தசாமி, ஆசிரியரின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.

---

## அக்கரைப்பற்று மணி மண்டபத்தில் பாரதி விழா

அக்கரைப்பற்றில் அமைக்கப்பட்டுள்ள பாரதி மணி மண்டபத்தில், பாரதி விழா கடந்த சனிக்கிழமையன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்து. அக்கரைப்பற்று ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்க வித்தியாலய மாணவ, மாணவிகளும் சபை உறுப்பினரும் உற்சாகமாக விழாவில் பங்கு பற்றினர்.

சபையின் ஆயுட் காலத் தலைவர் உயர்திரு கு. கு. ஆறுமுகதேசிகர் தலைமையில் விழா ஆரம்பமானது. காலஞ் சென்ற சட்டசபை அங்கத்தவர் திரு.எஸ். தருமரெத்தினத்தின் மருமகனுன திரு. கே. வி. சோமசுந்தரம் அவர்கள் பாரதியாரின் திருஉருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்துப் பேசினுர். சபை அம்பாரை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையில் நடத்திய கட்டுரை பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும், இளம் கவிஞரான திரு. ஐ. பூபாலப்பிள்ளைக்கு "உதய கவி" என்னும் பட்டமும், இளம் ஓவியரான திரு. எம். கணபதிப்பிள்ளைக்கு "ஓவிய மணி" என்னும் பட்டமும் ஈழத் துறவி சுவாமி நடராஜானந்தாவினுல் வழங்கப்பட்டன. அம்பாரை மாவட்டத்துக்கிடையில் நடைபெற்ற கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலை மாணவ மாணவிகளே அதிகப்படியான பரிசுகளைப் பெற்று, போட்டிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டனர். சுவாமி நடராஜானந்தாஜி [illegible] பேசுகையில் அவர் கூறியதாவது:

"அக்கரைப்பற்று எப்போதும் ஒரு அக்கறை உள்ள பற்றுகவே இருந்து கொண்டே வருகிறது. ஏன் என்ருல் இலங்கையிலே பாரதிக்கு மணி மண்டபம் அமைத்த பெருமை அக்கரைப்பற்றுக்கு உரியதாக இருக்கிறதென்னும்போது பெருமை அடையாமல் இருக்க முடியாது. பெருமையோடும், விழாவோடும் நின்றுவிடாது பாரதியின் பாக்களில் உள்ள ஒவ்வொரு அடியையும் அவதானித்து அதன்படி நடக்க வேண்டும்".

தொடர்ந்து செல்வி ஆனந்தியின் பரதநாட்டியம் இடம்பெற்றது. அடுத்து செல்வி சே. சாந்தாதேவியின் சங்கீதக் கச்சேரி "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்".........என்ற பாடலுடன் ஆரம்பமாகி ஒரு மணி நேரம்வரை ஒரே பாரதிப் பாடலாகவே அமைந்தது. பேச்சுப் போட்டியில் முதல் இடம் பெற்றவர்களான செல்வி மேரி சுலோச்சனு, செல்வி முகம்மட் மஜீத் ஆயிசா, செல்வி லலிதா சிவஞானம், செல்வன் முகமது மகுறுப், செல்வன் சக்திதாசன் ஆகியோரும் பேசினுர்கள்.

மாஸ்டர் சிவலிங்கத்தின் வில்லுப் பாட்டுக் கோஷ்டியினரின் 'பாரதியார் வருகிருர்' என்ற நகைச்சுவை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

---

## அமரர் இருவரின் நினைவு விழா

அமரர் பாரதியார், வன்னியசிங்கம் இருவரினதும் நினைவு விழா ஸ்ரீ வேற்பிள்ளை வாசிகசாலை முன்றலில் 22-9-62 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் ஆசிரிய மணி திரு. வே. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் அமரர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைய இரு நிமிட மௌனம் அனுட்டிக்கப் பட்டது. பின்னர் செல்வன் ஆ. பரமேஸ்வரன் தமிழ்த் தேசிய கீதம் பாடினுர். இதன் பின் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்றேர் பேசினுர்கள்.

அடுத்து உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் "வன்னியசிங்கமும் எல்லாம் தமிழ் இயக்கமும்", என்னும் பொருள் பற்றி இனிது பேசினுர்கள்.

அடுத்துப் பேசிய சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தாய் நாட்டில் அமரகவி பாரதியும், சேய் நாட்டில் அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களும் தமிழ் இனத்தின் ஈடேற்றத்துக்குச் செய்த சேவையைப் பாராட்டிப் பேசினுர்கள்.

இதன் பின்னர் திரு. எஸ். கனகசபாபதி ஆசிரியர், திரு. விஞசித்தம்பி, சங்கீத பூசணம், திரு. சி. கதிரவேற்பிள்ளை, செனட்டர் ஜீ. நல்லையா ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர். ஈற்றில் அமரர்கள் சம்பந்தமாய் நடைபெற்ற பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி என்பனவற்றில் வெற்றி பெற்றேருக்குத் திருமதி இரகுபதி நவரத்தினம் அவர்கள் பரிசில்கள் வழங்கினுர்கள். ஆசிரியமணி வே. சுப்பையா அவர்களின் நன்றி தெரிவித்தலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

## சமுதாயச் சீர்திருத்த இயக்கம்

வெள்ளி 28-9-62 பிற்பகல் செந்தமிழ் செல்வி நூலகக் கட்டிடத்தில் டாக்டர் அ. வை.தங்கக்கணபதிஅவர்கள் தலைமையில் சமுதாய சீர்திருத்த இயக்க அங்குரார்ப்பண விழா நடைபெற்றது.

தமது தலைமையுரையில் டாக்டர் அ. வை. தங்கக் கணபதி அவர்கள் கூறியதாவது: இலங்கையில் தி. மு. க. தடை செய்யப் பட்டுள்ளது. அது செய்துவந்த பணியைச் சமுதாய சீர்திருத்த இயக்கம் தொடர்ந்து நடாத்தி வரும். அறிஞர் அண்ணுவின் பிறந்ததின விழாவைக் கௌரவிக்கும் முகமாக இந்த இயக்கம் சகல துறைகளிலும் 25 லட்சம் தமிழ் பேசும் இனத்தின் சீவாதார உரிமைகளுக்கும் தொழிலாளர் நல் வாழ்வு பற்றிய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தன்ஞல் ஆனதைச் செய்யும்.சாதி, மதம், இனம் இவற்றின் அடிப்படையில் உயர்வு தாழ்வு காட்டும் மடமைத் தனத்திற்கு ஒரு முடிவு கட்டவும், மது ஒழிப்பிற்கு முக்கியம் கொடுத்துப் பிரசாரம் செய்யும் இவ்வியக்கம் சாத்வீக முறைகளில் இறங்கும்.

---

## அ. வா. மு. சங்கமும் தீண்டாமையும்

சென்ற 26-9-62-ல் கூடிய அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்க செயற்குழுக் கூட்டம் மத்திய சங்கத் தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மத்திய சங்கக் காரியாலயத்தில் கூடியது.

சாவகச்சேரி பட்டின சபை எல்லைக்குள்ளிருக்கும் தேநீர்ச் சாலைகள், பொதுக் கிணறுகள்யாவும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் திறந்து விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும்—தவறினுல் அப் பகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்கள்—தென்மராட்சி மக்கள் முன்னேற்ற மன்றத்தினரின் ஆதரவில், தேநீர்ச் சாலைகளின் முன் எதிர்வரும் தை மாதம் உண்ணுவிரதம் இருக்க உறுதி பூண்டுள்ளதை ஆதரித்தும்-இத்தகைய தீண்டாமைகள் இன்னும் நீடித்திருக்கிறதை வன்மையாகக் கண்டித்தும்-இது விசயமாக அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரான திரு. வி.என். நவரத்தினம் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

---

## அருந்ததியர் புனருத்தாரண சபைக் கூட்டம்

சென்ற 30-9-62 ஞாயிற்றுக்கிழமையன்று மேற்படி சபைக் கூட்டம் வின்ஸன் வீதியிலுள்ள காரியாலயத்தில் திரு. வி. வி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க் காண்போர் நடப்பு (62—63) வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். ஆறுமுகம், செயலாளர் இரா. சுப்பிரமணியம், பொருளாளர்: வே. வி. சண்முகம்.

உத்தியோகத்தர்களுடன் கீழ்க் காண்போர் குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

1. பொ. பெ. கிருஷ்ணன், 2. ஊ. கிருஷ்ணன், 3. சொ. ச. ஆண்டி, 4. கு. ஆ. சின்னையா, 5. ப. கிருஷ்ணன், 6. ந. வே. முத்துவேல், 7. வெ. க. மு. மாரியப்பன், 8. மீ. மு. சண்முகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எமது அடுத்த திரை விருந்து!

## சென்ட்ரல் (மருதானை)

மற்றும் 6 திரைகளில்

நடிகர் திலகம்

## சிவாஜி கணேசன்

இலட்சிய நடிகர்

## எஸ். எஸ். ராஜேந்திரன் எம். எல். ஏ.



பத்மினி, லலிதா, ராகினி, சந்திரபாபு, தங்கவேலு, கே. ஆர். ராமசாமி எம். எல். சி.,
வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு, ராமராவ், எம். என். கிருஷ்ணன் மற்றும் பலர் நடித்த
"திருடாதே", "சாரதா" போன்ற வெற்றிப் படங்களை அளித்த
ஏ. எல். எஸ். புரடக்ஷன்ஸாரின்

# செந்தாமரை

இசை: **விஸ்வநாதன்-ராமமூர்த்தி**

டைரக்ஷன்: **ஏ. பீம்சிங்**

பாடல்கள்: **கவிஞர் கண்ணதாசன்**

---

# கிங்ஸ்லி

(கொழும்பு)

மற்றும் திரைகளிலும்

**100 DAY வது நாளைத்**

தாண்டியும், வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும்

எம். ஜி. ராமச்சந்திரன்,
பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா
எஸ். ஏ. அசோகன், கண்ணாம்பா,
சாண்டோ சின்னப்பா தேவர்

நடித்த

# தாய் சொல்லைத் தட்டாதே

---

## விரைவில் எதிர்பாருங்கள் சினிமாஸ் திரைகளில்!

சிவாஜி கணேசன்—ஜெமினி கணேசன்—பி. சரோஜாதேவி—சாவித்திரி
எம். சரோஜா—கே. ஏ. தங்கவேலு—சௌகார் ஜானகி
முதலியோர் நடித்த



# பார்த்தால் பசி தீரும்

சங்கீதம்: **விஸ்வநாதன்—ராமமூர்த்தி**

வசனம்: **ஆரூர்தாஸ்**

பாடல்கள்: **கவிஞர் கண்ணதாசன்**

டைரக்ஷன்: **ஏ. பீம்சிங்**

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

| செல்லமஹால் | நெல்சன் | இம்பீரியல் | குமரன் | வின்ஸர் |
|---|---|---|---|---|
| (கொட்டாஞ்சேனை) | (திருகோணமலை) | (மட்டக்களப்பு) | (மன்னார்) | (யாழ்ப்பாணம்) |

ஆகிய திரைகளில்

பானுமதி—நாகேஸ்வரராவ்—சௌகார் ஜானகி
ஜாவர் சீதாராமன்—பி. ஆர். பந்துலு
எம். ஆர். சந்தானம்—தேவிகா—சூர்ய காந்தம்

ஆகியோர் நடித்த

# கானல் நீர்

நடனம் : எல். விஜயலட்சுமி, லக்ஷ்மிராஜம்—பின்னணி : ஜிக்கி, சுசீலா
சங்கீதம் : வேணு—பாடல்கள் : கவிஞர் கண்ணதாசன்



## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன் — ரெக்ஸ்

ஆகிய திரைகளில்

ஜெமினி கணேசன்—ஈ. வி. சரோஜா—சௌகார் ஜானகி—தங்கவேலு—எம். சரோஜா நடித்த

# பாக்கிய லெட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.